# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (23.09.2011) UTHAYAN-A Lively National Tamil D..ly கதிர்: 301



14 சமூகத்தின் சுமை



21 கிராமம் வரை அதிகாரம் கொடுத்த இந்தியா



24 வெற்றியீட்டியது றோயல் விளையாட்டுக் கழகம்

# மனித உரிமைகள் சபை தோற்றது இலங்கையிடம்

## கடுமையாகச் சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, செப்ரெம்பர் 23

**இலங்கையின் இறுதிப் போரில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கொழும்பிடம் தோல்வி அடைந்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் குற்றச் சாட்டைத் தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கடந்த ஓராண்டுகால நடவடிக்கைகள் குறித்து 69 பக்க அறிக்கை ஒன்றை நேற்று ஜெனீவாவில் விடுத்தது. 2010 ஜூலை மாதம் முதல் 2011 ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பணிகள் அறிக்கையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

சில நாடுகளில் மனித உரிமைகள் சபையின் நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைந்தபோதும் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற இலங்கை, ஆப்கானிஸ்தான், மஹ்ரெய்ன் ஆகிய நாடுகளின் விடயத்தில் நடவடிக்கை எடுக்க சபை தவறிவிட்டது என்று கண்காணிப்பகம் சாடியுள்ளது.

அறிக்கையில் இலங்கை குறித்து ஒன்றரைப் பக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஐ.நா.

பக் 27

## கண்டி இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம், செப்.23

உளவுத் தகவல்கள் சேகரித்து விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவந்தார் என்ற குற்றச் சாட்டில் பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் மூன்று வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கண்டி ஹோவாஹெட்ட மேல் பகுதியைச் சேர்ந்த சுந்தரபாண்டியன் நகேந்திரன் (வயது-31) என்ற இளைஞரே யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி எஸ்.பரமராஜாவினால் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

கண்டி பல்லேஹல இராணுவ முகாம், களனி திஸ்ஸமின் உற்பத்தி நிலையம், அரச நிறுவனங்கள் என்பவற்றில் உளவு பார்க்கும் பணியில்

பக் 27

## இலங்கைக்கு ஆதரவாக ஒப்பமிட இந்தியா மறுப்பு

கொழும்பு,செப்.23

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக்கு ஐ.நா பொதுச்செயலர் பான் கீ - மூன் அனுப்பி வைத்த நிபுணர்குழுவின் அறிக்கையை குறைந்தபட்சமாக ஒரு தகவல் ஆவணமாகக் கூட எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கோரும் கடிதம் ஒன்றில் இலங்கை சில நாடுகளிடம் இருந்து கையொப்பங்களைத் திரட்டியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இதில்

பக் 25

## இலங்கையுடன் போர்ப் பயிற்சியை இடையில் கைவிட்டது இந்தியா

கொழும்பு, செப்.23

இந்திய - இலங்கைக் கடற்படைகளின் ஆறு நாள் கூட்டுப் போர்ப் பயிற்சி நான்காவது நாளான நேற்றுடன் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுடன் இந்தப் போர்ப்பயிற்சி முடிவுக்கு வருவதாக இலங்கையின் உயர்மட்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகி உள்ளது.

திருகோணமலையில் துறைமுக, கடல்சார், மற்றும் கடற்கொள்ளை முறியடிப்பு சார்ந்த நடவடிக்கைளில் ஈடுபடுவது குறித்து இருநாட்டுக் கடற்படைகளும்

பக் 25

## 13 + தீர்வை எதிர்க்கும் அமைச்சர்களை சமாளிக்க மூத்தவர்கள் கடும் முயற்சி

கொழும்பு, செப்.23

13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு வழங்கப்படுவதை ஆட்சேபிக்கும் முக்கியமான அமைச்சர்களைச் சமாளிப்பதற்கு அமைச்சரவையின் மூத்த அமைச்சர்கள் பலர் தயாராகியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் தீர்வு யோசனைகளைத் தயாரிக்கும் போது 13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று சில விடயங்களில் உடன்பாடு காண்பதென்று அரசு யோசித்து வருகிறது. இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கான சர்வதேச அழுத்தமும் அரசுக்கு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஆனால், 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்கும் விடயத்தை

பக் 27

## தகவல் அறிவும் சட்ட மூலத்தை அரசு பின் கதவால் கொண்டு வர முயற்சி

கொழும்பு,செப்.23

தகவல் அறியும் சுதந்திரம் தொடர்பாக எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை நாடாளுமன்றத்தில் பரிசீலனை செய்ய மறுப்புத் தெரிவித்து தடை போட்ட அரசு, இப்பொழுது அதே பிரேரணையை பின் கதவு வழியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளது. இதன் உண்மைத்தன்மையை சபை முதல்வர் அறிவிப்பாரா என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்பின் சபையின் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைப்பதாகக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, இந்தக் கேள்வியை எழுப்பினார்.

எதிர்க்கட்சியின் சார்பில் கரு ஜயசூரிய இதே பிரேரணையை இந்தச் சபையில் சமர்ப்பித்தார். ஆனால், அப்போது இதே அரசு அந்தப் பிரேரணையை சபையில் விவாதிக்க இடமளிக்காமல் நிராகரித்தது.

ஆனால், இப்போது கொழும்பு மாநகர சபை மேயர் வேட்

பக் 25

## வன்னியில் சிங்களக் குடியேற்றம் தடுக்க நடவடிக்கை ஏதுமில்லை

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 23

வன்னி மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றம் மற்றும் நிர்வாக எல்லைகளின் மாற்றம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்த போதும் இந்த நடவடிக்கைகள் தடுக்கப்படாது தொடர்கிறது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ

பக் 25

## வேலணையில் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம்,செப்.23

வேலணை பெருங்குளம் 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பத்துப் பிள்ளைகளின் தந்தையான சவரிமுத்து யேசுராசா (வயது 58) என்பவரே நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரது இண்டாவது மனைவி சஞ்சனா தேவி (வயது 43) கையிலும் முகத்திலும், மகன் முகுந்தன் (வயது 18) கழுத்துப் பகுதியிலும் வெட்டுக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனும

பக் 25

## ஜனாதிபதி மாளிகையும் நாடாளுமன்றும் எதிர்காலத்தில் அரசினால் விற்கப்படும்

### சபையில் தயாசிறி ஜயசேகர கிண்டல்

கொழும்பு .செப்.23

அரச காணிகளையும் தேசிய சொத்துக்களையும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் இந்த அரசின் நடவடிக்கையினால் எதிர் காலத்தில் ஜனாதிபதி மாளிகையும் நாடளுமன்றத்தையும் விற்பனை செய்யும் நிலைமையே உருவாகும்.மஹிந்த ராஜ பக்ஷ பிளஸ் பசில் ராஜ பக்ஷ சிந்தனையே

பக் 27

## முன்னாள் போராளிகள் 1,500 பேர் 30 ஆம் திகதி விடுவிக்கப்படுவர்

கொழும்பு.செப்.23

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 1500 முன்னால் போராளிகள், விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள், எதிர்வரும் 30 ஆம் திக்தி வவுனியா கலாசார மண்டபத்தில் வைத்து அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப் படும் எஞ்சிய முன்னாள் விடுதலைப் புலிச்சந்தேக நபர்களின் தொகை 1200 ஆகக் குறைவடையும் எனவும் அந்த அலுவலக உயரதிகாரியொருவர் தெரிவித்தள்ளார்.


**புனர்வாழ்வுப்பயிற்சி வழங்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டவர்கள் மற்றும் புனர்வாழ்வுப்**

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 22 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,762.38↓
மிலங்கா(MPI) 6,107.60↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,887.07Mn
பங்குகளின் அளவு(No.) 114.78Mn
வியாபாரம்(No.) 16,149
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
றிக்னிஸ் 278.00
உடபுசலாவ 44.20
கெஸ்அனஸ் 378.70
ஈச்சேன் மேச்சன் 31.30
றேடியன் ஜெம்ஸ் 164.70
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிங்கலங்கா 265.10
மொறிசன் 3300.00
கெமனக்ஸ் 115.00
கொன்வீனியன் பூட் 300.10
சதோசா மோட்டர் 399.40
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பொலிஸாரும் படையினரும் தமிழரின் காணிகளை வன்னியில் தாம் விரும்பியவாறு பங்கிடுகின்றனர்

## சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

ஊருக்கு மட்டும்தான் உபதேசம் அது உனக்கில்லை கண்ணே என்ற சித்தாந்தத்துடன் தான் இன்றைய அரசு நடைபோடுகின்றது. மூச்சும் பேச்சும் நாட்டுப்பற்று, தேசிய உணர்வு என்று கூறியவர்களின் மூச்சும் பேச்சும் இன்று தேசிய வளங்களையும் பாரம்பரிய காணிகளையும் விற்றுக் கொள்ளை இலாபம் அடிப்பது தான் என்று மாறிவிட்டது என்று கிண்டல் அடிக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்று நாடாளுமன்றில் ஜே.வி.பி. உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க அரச காணிகள் தவறான முறையில் விற்பனை செய்வது தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றைச்சபையில் முன்வைத்தார்.

தேசிய காணிகள் தொடர்பான விடயம் என்பதால் சபை நடவடிக்கைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டு முழுதான விவாதமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரேரணையை முன்மொழிந்து பேசிய ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க காணிகள் எவ்வாறு நேர்மையற்ற வழியில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டினார்.

### போஷாக்கின்மையினால் 4 செக்கனுக்கு ஒரு குழந்தை மரணம்

அண்மையில் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி நான்கு செக்கனுக்கு ஒரு குழந்தைக்கு மரணம் சம்பவிக்கின்றதாம். இப்படியான நிலையில் இலங்கை அரசு பெறுமதிமிக்க விவசாயக் காணிகளை வெளிநாட்டு கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கின்றது. விவசாயிகளின் பரம்பரையினருக்கு ஒரு துண்டுக் காணிகூட இல்லாதொழிக்கப்படுகின்றது.

### விளையாட்டு வீரர்களுக்கு பாரம்பரிய காணிகள் 12 ஆயிரம் ஏக்கர்

பொலன்நறுவை பாரம்பரிய கலாசாரம் கொண்ட பூமி. அங்கே இரு விளையாட்டு வீரர்களின் உறவினர்களின் கம்பெனி ஒன்றுக்கு 12 ஆயிரம் ஏக்கர் காணி விற்கப்பட்டுள்ளது. அங்கே பப்பாளிப் பழங்கள் பயிரிடப்பட்டிருக்கின்றதாம். தமது சொந்த வயல் நிலங்களில் விவசாயம் செய்த விவசாயிகள் இன்று அந்த காணிகளுக்குப் போய் நாளாந்தம் முன்னூறு ரூபா கூலிக்கு வேலை செய்யும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது.

இதோடு நின்றுவிடவில்லை. சியம்பலாண்டுவ பிரதேசத்தில் ஒரு லட்சம் ஏக்கர் காணி விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் விருப்பமுள்ள கம்பனிகள் விண்ணப்பிக்கலாம் என்றும் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள இளைஞர்களுக்கு காணிகள் இல்லை.

### பொலன்னறுவையில் குறைந்த வயதில் திருமணம்

அண்மையில் ஜனாதிபதி ஒரு புதிய கண்டுபிடிப்பை வெளியிட்டிருந்தார். அதாவது பொலன்னறுவையில்தான் மிகவும் குறைந்த வயதில் திருமணம் முடித்தவர்கள் இருக்கின்றனர் என்று. ஏன் அப்படி நடக்கின்றது. வறுமை காரணமாகப் படிப்பை தொடர முடியவில்லை. விவசாயம் செய்ய காணி இல்லை. திருமணம் முடித்தாலாவது குடும்பம் என்று கணிக்கப்பட்டுக் காணி கிடைக்கும் என்ற நப்பாசையுடன்தான் இளம்வயதில் திருமணம் முடித்தனர். பாவம் அவர்களுக்குக்கூடக் காணி கிடைக்கவில்லை.

### நாட்டின் சொந்தக்காரன் இல்லை நாட்டின் பாதுகாவலன்

நான் இந்த நாட்டின் சொந்தக்காரன் இல்லை நாட்டைக் காக்கும் ஒரு பாதுகாவலன். இந்த மண்ணில் ஒரு அங்குலத்தைக் கூட வெளி நாட்டவர்களுக்கு விற்க இடமளிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி சூளுரைத்தார். ஆனால் இன்று காலி முகத்திடல் முதல் பொலன்னறுவை வரை அரச காணிகள் சரியான கேள்வி கோரல் வழிமுறைகள் இன்றி வகை தொகையின்றி வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு விற்கப்படுகின்றன. இதுதான் நாட்டைப் பாதுகாக்கும் லட்சணமா என்றார் அனுர குமார திஸாநாயக்க.

### வாங்கிக் கட்டிக் கொண்டார் அஸ்வர்

அனுரகுமார திஸாநாயக்க பேசிக் கொண்டிருக்கும் போது ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் அடிக்கடி மாற்றுக் கருத்துகளை வெளிப்படுத்திக் கொண்டார். ஒரு சமயத்தில் ஒழுங்குப் பிரச்சினை என்று கூறிய அஸ்வர் எம்.பி. சபாநாயகர் அவர்களே பத்தரமுல்லையில் ஜே.வி.பி. காரியாலயத்தை பலர் சுற்றிவளைத்து ஆக்கிரமிப்பு செய்ய முனைகின்றனராம். அங்கே இருந்து தப்பி ஓடிவந்த அனுரகுமார திஸாநாயக்க இங்கு காணியைப் பாதுகாப்பது தொடர்பாக பேசுகிறார். பத்தரமுல்லைக்குப் போய் கட்சிக் காரியாலயத்தைக் காப்பாற்றட்டும்'' என்றார் அஸ்வர்.

இதனைக் கேட்ட சபாநாயகர் ''அஸ்வர் அவர்களே நீங்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சினையே இல்லை. நீங்கள் உதவ வேண்டும் என்ற அக்கறை இருந்தால் நீங்கள் போய் உதவி செய்யுங்கள் என மட்டம் தட்டிவிட்டார்.

### கண்டிப்புக்கு ஆளான எம்.கே.டி.எஸ். குணவர்தன

அஸ்வரைப் போலவே பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவரத்தனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சுக்கு இடையூறு செய்து கொண்டிருந்தார். உறுப்பினர்கள் பேசும் போது இவரும் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தார். இதனால் சபாநாயகர் சற்று கடுமையான தொனியில் பிரதி அமைச்சரை அவரது ஆசனத்தில் அமரும்படி எச்சரித்தார். அதனைத் தொடர்ந்து பிரதி அமைச்சர் குணவர்தன தனது ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

### குத்தகைக்கு விடப்படபோது ஆட்சேபித்தவர்கள் முற்றாகவே விற்கும்போது வாய்மூடி மௌனம்

பிரேரணையை வழிமொழிந்து பேசிய எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார். அதாவது ஐக்கிய தேசியக் கட்சி முன்பு ஆட்சியில் இருந்தபோது சில அபிவிருத்தித் திட்டங்களுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் முயற்சித்த போது விமல் வீரவன்ஸ உட்பட பல தீவிரவாத போக்குடைய அமைப்புகள் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ஆனால் இப்பொழுது லட்சக்கணக்கான ஏக்கர் காணிகள் வரை முறையின்றி விற்கப்படுகின்றன. இன்று அமைச்சராக இருக்கும் விமல் வீரவன்ச ஒரு வார்த்தைகூட பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருக்கின்றார். எங்கே போய்விட்டது இவருடைய நாட்டுப் பற்றும் தேசிய உணர்வும். இவர்களுடைய போதனைகள் எல்லாம் ஊருக்கு மட்டும்தான் போலும் என்றார் தயாசிறி ஜயசேகர.

### காணிப் பங்கீட்டில் இராணுவமும் பொலிசும் தலையிடக் கூடாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடபகுதி மக்களின் அவல நிலைகளை சுட்டிக்காட்டினார்.

தேசிய காணிகள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதாகக் குற்றம் சுமத்தினர். ஆனால், வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் என்பது கண்துடைப்பு. காலம் காலமாகத் தமது சொந்தக் காணிகளில் வாழ்ந்த மக்கள் மீண்டும் குடியமரப் போகும் போது இராணுவத்தினர் அவர்களை விரட்டி அடிக்கின்றனர்.

இராணுவமும் பொலிஸாரும் காணிகளை தாம் விரும்பியபடி பங்கிடுகின்றனர். இதனால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, காணி விடயங்களில் காணிகளுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் இந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.




### காணி உறுதி உள்ளவர்களுக்கே காணிகள்

இந்தக் கேள்விக்கு பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் பதில் அளித்தார்.

தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட இடமளிக்கப்படமாட்டாது. உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறியது போல் காணி உறுதி உள்ளவர்கள் விரட்டியடிக்கப் பட்டிருப்பின் அதனை ஆதரிக்கமுடியாது. பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் முரளிதரன் கூறினார்.

### வரைபடங்களுடன் வந்து வக்காலத்து வாங்கினார் அஸ்வர் எம்.பி.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் அரச காணிகள், தேசிய சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. எந்தவிதமான முறையான கேள்விப் பத்திரங்களோ, கேள்விகோரல் முறையோ கடைப்பிடிக்கப்படாமல் வெளிநாட்டுக்கம்பெனிக்கு விற்கப்படுகின்றன. கொழும்பில் வீடுகள் உடைக்கப்பட்டு பொது மக்கள் வீதியில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் பல ஆயிரம் வீடுகள் உடைக்கப்படவுள்ளன என்று குற்றஞ்சாட்டினர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் உரையாற்றினார் ஆளும் கட்சி உறுப்பினரான அஸ்வர்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

### வினாடி வினாப் போட்டி

''உங்களுக்குத் தெரியுமா'' வினாடி வினாப் போட்டி துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மூன்று கோட்டப் பிரிவுகளுக்கும் உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்த வினாடி வினாப் போட்டி ஒட்டிசுட்டான் கோட்டத்துக்கு ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயத்திலும், மாந்தை கிழக்கு கோட்டத்துக்கு பாலிநகர் மகாவித்தியாலயத்திலும், துணுக்காய் கோட்டத்துக்கு மல்லாவி மத்திய கல்லூரியிலும் நாளை சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகும் என துணுக்காய் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் அறிவித்துள்ளார். (த-323-423)

### பயிற்சிப் பட்டறை

பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய நிறுவனத்தினரால் சோதிடம், மந்திரம், வர்மக்கலை போன்ற ஏனைய நடைமுறைகள் சிகிச்சையிலும், மருந்து உற்பத்தி, மூலிகை சேமிப்பு ஆகியவற்றிலும் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது பற்றிய பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமையும், மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் சகல வைத்தியர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கருத்தரங்கு

மானிப்பாய் பரிஸ் அரிமாக் கழகம், யூனியன் அஸ்சூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சியும் தொழிற்துறைக்கான வழிகாட்டியும் என்ற தொனிப் பொருளிலான சேவைத் திட்டக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பாடசாலைவிட்டு வில கிய இளைஞர் யுவதிகளைக் கலந்துகொண்டு பயன் பெறும்படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு, தெஹிவளைத் தேர்தல்களில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஆதரவு

## கூட்டமைப்பு தீர்மானம்

கொழும்பு, செப். 23

கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலும், தெஹிவளை, கல்கிஸை மாநகரசபைத் தேர்தலிலும் ஜனநாயக மக்கள் முன்னணியை ஆதரிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கட்சி உறுப்பினர்களுடன் நீண்டநேரம் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேச்சு நடத்தியதாகவும் இதனையடுத்து ஜனநாயக மக்கள் முன்னணிக்கே ஆதரவு வழங்க முடிவு செய்யப்பட்டதாகவும் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளுக்காகத் தோழர் விக்கிரமபாகுவும், மனோ கணேசனும் எப்போதும் குரல் கொடுத்து வந்திருக்கின்றனர். அதனை எம்மால் மறந்துவிட்டு செயற்பட முடியாது. இந்தத் தேர்தலில் தமிழர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதில் தெளிவாக இருக்கின்றனர். ஜனநாயக மக்கள் முன்னணிக்கான எமது ஆதரவைப் பகிரங்கமாக அறிவிக்க முடியாது.

இதற்கான அரசியல் புறச்சூழல் இப்போது இல்லை. ஆனாலும் எமது முடிவு என்ன என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். அவர்கள் ஜனநாயக மக்கள் முன்னணியை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம் - என்றார் அந்த உறுப்பினர்.

கூட்டமைப்பிலுள்ள அரசியற் கட்சிகளின் தலைவர்கள் பலர் ஏற்கனவே ஜனநாயக மக்கள் முன்னணிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துக் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# வட மாகாண சர்வமதப் பேரவை வவுனியாவில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செப்.23

வடக்கு மாகாணச் சர்வமதப் பேரவை என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு வவுனியா தபால் நிலையத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

நாட்டின் 12 மாவட்டங்களில் இருந்து வருகை தந்து கலந்து கொண்ட சர்வ மதத் தலைவர்கள் முன்னிலையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சர்வமதப் பேரவை என்ற இந்தப் புதிய அமைப்புக்கு 23 நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நான்கு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இந்த அமைப்பில் உள்ளடங்குகின்றனர்.

இதில், சகல மதத்தலைவர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள், பெண்கள் பிரதிநிதிகள் அங்கம் பெற்றுள்ளனர். (த-14)



இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதி நியர் அட்மிரல் வின்சன்ட் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவை மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# கலை, இலக்கியத்துறையில் மிளிர்ந்த 13 கலைஞர்களுக்கு ஆளுநர் விருது

யாழ்ப்பாணம்.செப்.23

கலை. இலக்கியத் துறையில் தடம்பதித்த 13 கலைஞர்கள் வடமாகாணத்தின் உயரிய விருதான ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2011ஆம் ஆண்டுக்கான விருதினைப் பெறும் இந்தக் கலைஞர்களுக்கு மன்னாரில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் போது இந்த விருது வழங்கப்படவுள்ளது.

ஆளுநர் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அவர்களின் விவரம் வருமாறு:

கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் - நாட்டுக்கூத்து (யாழ்ப்பாணம்), கலாபூஷணம் சுப்பிரமணிய ஆசாரி பாஸ்கரன் ஆசாரி - சிற்பம் (நல்லூர்), கலாபூஷணம் ஞானகுமாரி சிவனேசன் - இசை (வாய்ப்பாட்டு - உடுவில்), சங்கீதவித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன் - இசை (வாய்ப்பாட்டு - சாவகச்சேரி), ஐயாத்துரை சண்முகலிங்கம் - சிறுகதை இலக்கியம் (கரவெட்டி), கலாபூஷணம் விமலலோஜினி கனகேஸ்வரன் இசை (வயலின் - வவுனியா), கபுராலகே பத்தரால - பாரம்பரிய கலைகள் (வவுனியா தெற்கு), கலாபூஷணம் சூசை சந்தியா - நாட்டுக்கூத்து (பூநகரி), கலாபூஷணம் செபஸ்தியான் மாசிலாமணி - இசை நாடகம் (மன்னார்), இராமு முருகுப்பிள்ளை - பாரம்பரிய கலைகள் (முல்லைத்தீவு), கலாபூஷணம் ஜனாப். அப்துல் காதர் அஸீம் - பல்துறை (யாழ்ப்பாணம்), அலெக்ஸ்சாண்டர் அலெக்ஸ் - பல்துறை (மடு), கலாபூஷணம் அகஸ்ரின் வேதானந்தம் - சிற்பம் (தெல்லிப்பழை). (த)

# தமிழ் மக்களின் வாக்குகள் மனோவுக்கு என்கிறார் பிரபா

கொழும்பு, செப். 23

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் ஜனநாயக மக்கள் முன்னணிக்கே சென்றடையும் என பிரபா கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபைத் தேர்லில் எந்தக் கட்சி வெற்றி பெறும் என்பது தொடர்பாக 'உதயனு'க்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தலைநகரில் வாழும் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகள் ஜனநாயக மக்கள் முன்னணியையே சென்றடையும் சாத்தியமுள்ளது.ஏனென்றால், ஐக்கிய தேசியக் கட்சி உட்கட்சிப் பூசல் காரணமாக இன்று இரண்டாகப் பிரிந்துள்ளது. கட்சியில் இணைந்து போட்டியிட்டவர்கள் இன்று தனித்தனியாகப் போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைக்காது. இந்த வாக்குகள் ஜனநாயக மக்கள் முன்னணிக்கே கிடைக்கும். - என்றார் அவர்

# விபத்தில் சிக்கியவர் மரணம்

லொறி -லான்மாஸ்ரர் விபத்தில் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை அங்கு மரணமானார்.

மட்டுவில் முத்துமாரியம்மன் கோயிலை அண்மித்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் காயமுற்ற சரசாலை வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த இராசையா உதயச்சந்திரன் (வயது-47) என்பவரே மரணமானவராவார்.படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றுக் காலை மரணமானார்.

# வடக்கு மாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

## கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆளுநர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.23

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகளை உடன் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி வடக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் சுயவிவரக்கோவை நிறைவு செய்யப்படாமை, அக்ரகாரா காப்புறுதி, சம்பள உயர்வு, பதவி உயர்வு பெறுவதில் தடைகள் உள்ள ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிப்பதுடன் தங்கள் பிரச்சினை தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையில் உள்ள படிவத்தினைப் (படிவம்-1) பூரணப்படுத்தி அதன் பிரதியினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுயவிவரக் கோவையினைப் பூரணப்படுத்தாமல் சேவையை விட்டு இடைவிலகியவர்கள் 01.10.2011 க்கு முன்னரும், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையை 16.10.2011 க்கு முன்னரும் பூரணப்படுத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வலயக் கல்விப்பணிப்பாளர் தங்கள் வலயத்தில் உள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக் கோவைகளின் எண்ணிக்கை, பூரணப்படுத்தப்படாமல் உள்ள சுயவிவரக் கோவைகளின் எண்ணிக்கை, அவற்றைப் பூரணப்படுத்த எடுக்கும் காலம் ஆகிய விடயங்களை (படிவம்-2) உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

✱ ஓய்வூதிய வயதை அடைந்துள்ள ஆசிரியர்களது ஓய்வூதியம் தொடர்பான நடவடிக்கைகள் வலயக்கல்விப் பணிமனையினால் மேற்கொள்ளப்படாதவிடத்து அந்த ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தங்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுதுவதுடன் அதன் பிரதியினை மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2008, 2009 காலப் பகுதியில் புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. (சா/த), ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் தங்கள் பெயர், சுட்டெண், பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை, தோற்றிய பாடங்கள் தொடர்பான விவரங்களை எழுதித் தங்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புவதோடு அதன் பிரதியினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இது தொடர்பாக 2010 ஜூலை மாதம் கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினரை வட மாகாண ஆளுநர் தலைமையில் கல்வி அலுவலர்கள் சந்தித்து ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் கடந்த 5 வருட காலப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதிகளை அதிபர்கள் கோருமிடத்து இலவசமாக வழங்க பரீட்சை ஆணையாளர் உறுதி வழங்கியிருந்தார். இதுவரை இவ்வாறு பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறாத அதிபர்கள் அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

✱ மாணவர் விடுகைப் பத்திரத்தை இழந்த மாணவர்கள் மீள விடுகைப்பத்திரத்தின் பிரதியினைக் கோரி பாடசாலைக்கு வருகை தரும் பொழுது, அதனை வழங்குவதற்கான முறைமை பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி விடுகைப்பத்திரங்களை வழங்குமாறு அதிபர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

யுத்தகால விசேட விடுமுறைகள் வழங்கல் தொடர்பான அறிவுறுத்தல்கள் கல்வி அமைச்சின் செயலாளரினால் ஏற்கனவே வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

சேவையின் போது இறந்த அரச ஊழியர்களது சம்பளம் அவர்களது பின் உரித்தாளர்களுக்குக் கிடைக்காமல் யாரும் இருப்பின் அவர்கள் உடனடியாகத் தங்கள் விவரங்களுடன் உரிய வலயக்கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கவும், அத்துடன் விவரங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும் அறியத்தரவும் - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



நடைபெற்ற புலமைப்பரிசில்
பரீட்சையில்
173 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய
மாணவனும் எமது பேரனுமாகிய,
செல்வன் தயாபரக்குருக்கள் கஜலக்சன்
அவர்களை
பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும்
சிறப்புற எல்லாம் வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மனை
வேண்டுகின்றோம்.

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்:
ஐயா தண்டபாணிகதேசிகர் J.P.
அம்மம்மா, தீபன் மாமா.

# குழு மோதலில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.23

இரண்டு குழுக்களுக்கிடையே நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தினால் இரண்டு பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் பாஷையூரில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது. சம்பவத்தில் வளன்புரம், கொழும்புத்துறையைச் சேர்ந்த சி.செலிங்ரன் (வயது-33), பாஷையூரைச் சேர்ந்த பொ.டெல்றொக்சன் ஆகிய இருவருமே காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-14)

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



நவாலியூர்
**திரு., திருமதி. சாந்தகுமார்-ஜமுனாதேவி**
தம்பதியரின் செல்வப்புதல்வனும்,
மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி பாடசாலை
மாணவனுமாகிய, செல்வன் **சங்கரன்**

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரை நாம் மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல பரீட்சைகளில் சித்தி பெறவும், பெற்றவர்கள் மகிழ்ந்திட, பெரியோர்கள் புகழ்ந்திட, வாழ்த்திட மேலும் பட்டங்கள் பல பெற்று, உயர் பதவி வகித்திடவும், இவருடன் கல்வி பயின்று சித்தியடைந்த ஏனைய சக மாணவர்களையும் வாழ்த்தி எல்லாம் வல்ல கிருஷ்ண பகவானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் அவருக்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர், வகுப்பாசிரியை **செல்வி பவித்தா** அவர்களையும் இந்தத் தருணத்தில் வாழ்த்துகின்றோம், பெருமையடைகின்றோம்.

அட்டகிரி வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனதார வாழ்த்துவோர்:
மாமா (கனடா), பெரியப்பா (கனடா),
குடும்பத்தினர்.

## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே , தொழில்புரிவோரே..!

எம்மிடம் HND பயிற்சி நெறியில் இணையும் மாணவர்கள் BUCKS UNIVERSITY -UK இன் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை B.Sc (Hons) in Computing, B.A.(Hons) in Business & Finance ஆகிய துறைகளில் யாழ் மண்ணில் இருந்தவாறே தொடரமுடியும்.

**யாரும் இதுவரை வழங்காத சலுகை எம்மிடம் மட்டுமே.**

**HND**
in Computing
in Business (General)
in Business Management
in Business HR
in Business IT
(18 Months)

எமது வழமையான கட்டணம் 201,600/=
Bu t Now 150,000/=
இச் சலுகை 30/09/2011 வரை மட்டுமே......

**Esoft Computer Studies.**
No.166/3, Navalar Road Jaffna.
TP: 021-2224142

வடமாகாணக்கிளைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jaffna | 021-2224142 | Chavakachcheri | 077-6250789 | Uduppiddy | 021-3201303 |
| Nelliyadi | 021-2244940 | Kodikamam | 077-6250789 | Mannar | 023-2223377 |
| Kilinochchi | 021-2285444 | karainagar | 077-3099308 | Vavunjya | 024-2226060 |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வல்வை சிதம்பரக் கல்லூரி

செல்வச்சந்திரன்-சரோஜா தம்பதியரின் செல்வப் புதல்வன் **சரவணன்** தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக நெடியகாட்டுப் பிள்ளையாரின் ஆசியுடன் பாராட்டி மேன்மேலும் கல்வியில் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

அம்மா, அப்பா, அண்ணா நிசாந்தன், அதிபர், வகுப்பாசிரியை தயாநிதி, ஆசிரியை வலன்ரீனா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார் மற்றும் உற்றார், உறவினர்களுடன் பாடசாலைச் சமூகமும்.

சில்லாலை,
வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
இ.செல்வச்சந்திரன்.

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
An ISO 9001:2000 Certified Company

## Spoken English

ஆங்கில பயிற்சி மையம்
**veta**
Experts in English Training

Foundation , First Step மற்றும் Next Step க்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|
| Sat, Sun 7.30 a.m. | Sat, Sun 8.30 a.m. | Sat, Sun 3.30 p.m. |
| Mon, Wed, fri 8.30.a.m. | Wed, Fri 8.30 a.m. | Wed,Thu 3.30 p.m. |
| Sat, Sun 10.00 a.m. | Sat, Sun 10.00 a.m. | Tue,Thu 8.30 a.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பயிலுங்கள்.

**UK** Student Visa , Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

# DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலையம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

## கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை-2011




தி.கம்சாயினி
புள்ளி-168
மா.நிலை-19


பி.பெஸ்கி
புள்ளி-158
மா.நிலை-71


யோ.தரணிகா
புள்ளி-152
மா.நிலை-98


பு.கீர்த்திகா
புள்ளி-149
மா.நிலை-114

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்:**

(ஜெ.நிலக்ஷன், க.ருஷாந்தன், வி.கனுஜன், செ.ஜெனோதன், கே.திருமகன், மு.சாயித்தியன், பி.முதல்வன், ம.சரண்யன், க.நிருபன், பு.அனுசன், செ.விதுஷா, வி.திலக்சியா, வ.நிலா, நா.டினோசினி, ஜொ.கிருஷாளினி, யோ.கோகுலப்பிரியா, த.கஜலினி, கு.துவாரகா)

**கிளி/கனகபுரம் வித்தியாலயத்திலிருந்து 2011 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 4 மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், இந்த மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்த்துவதுடன், ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றி நவில்கின்றோம்.**

பாடசாலைச் சமூகம்,
கிளி/கனகபுரம் ம.வி.

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
## வடமாகாண சபை
### கேள்விகளுக்கான கோரல்

| | | |
|---|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும் | : | கடன் - 2626 SRI – முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்.பகுதி C- அடிப்படை சமுதாயத்திற்கான சேவைகளை மேம்படுத்தல் |
| நிதி மூலம் | : | இலங்கை அரசாங்கம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி | : | இறுதி திகதி 25.10.2011 : பி.ப 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | வேலையின் பெயர் | கட்டுமானக் காலம் |
|---|---|---|---|---|
| 1. | CAREP/NPC/ID/NCB/W/10-15 | யாழ்ப்பாணம் | வெள்ளை உவர்நீர் தடுப்புஅணை புனரமைப்பு | 6 மாதங்கள் |
| 2. | CAREP/NPC/ID/NCB/W/10-16(II) | முல்லைத்தீவு | மருதன்குளம் நீர்ப்பாசன வாய்க்கால் வேலை புனரமைப்பு | 9 மாதங்கள் |

1. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திட்டப் பணிப்பாளர், முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம், நீர்ப்பாசனம், வ.மா. / தலைவர் கருத்திட்ட பெறுகைக்குழு அவர்கள் 02 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளை கோருகிறார். வேலைகளின் பெயர்கள், கட்டுமானக் காலம், கேள்விப் பிணையின் பெறுமதி என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

2. கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள். கேள்விப்பத்திரத்தினை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்யவேண்டியவை, கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் திறத்தல், கேள்விப்பிணை, கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விபரங்களை கேள்வியாளர்கள் 22.09.2011 ஆம் திகதியில் Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலை பார்வையிடுவதன்மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

எந்திரி.க.சோ.சிவபாதம்.
திட்டப் பணிப்பாளர்
முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம்
நீர்ப்பாசனத் திணைக்களம், வ.மா.
கச்சேரி ஒழுங்கை,
கிளிநொச்சி

தொலை பேசி இல . 0212285472 தொலை நகல் இல: 0212285440 மின்.அஞ்சல்: npirri@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அநியாயம் அசுர வேகத்தில்...!

இலங்கையில் இப்போது மக்களுடன் சம்பந்தப்பட்ட மிகப்பல விடயங்கள் பெரும் குளறுபடிகள், மோசடிகள் நிறைந்தவைகளாகவே மாறிவருகின்றன. உயிர்காக்கும், நோய் தீர்க்கும் மருந்துகள் விடயத்திலும் அவை விதிவிலக்கல்ல. இந்த நாட்டில் மேற்கத்திய வைத்திய சேவை, முந்தைய சுதேச வைத்தியத்தைக் கீழே தட்டி வீழ்த்தி சுமார் ஆறு ஏழு தசாப்தங்களாகிவிட்டன.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் சுதேச வைத்தியத் துறைகளில், மருந்து வகைகள் சம்பந்தப்பட்ட வைத்தியர் பரம்பரையினராலேயே ஆக்கப்பட்டு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன; அவை உடலுக்குப் பாதகம் விளைவிக்காதவையாகவும் விளங்கின.

மேலைத்தேச வைத்தியமே பொதுவானதாகிய நிலைமை வளர்ந்த பின்னர், எட்டப்பட்ட பின்னர், வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளை இறக்குமதி செய்து ஆஸ்பத்திரிகளின் மருந்துக் களஞ்சியங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலமாக, மருந்து வகைகளின் இறக்குமதியில் மோசடிகளும் பெரும் ஊழல்களும் இடம்பெறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. தரம் குறைந்த மருந்து வகைகளின் இறக்குமதி, காலாவதியான மருந்து வகைகள் என்றவாறு பெருகி வைத்திய சேவை மந்தமடைவதும், மக்கள் பாதிப்புறுவதும் அரச வைத்தியத்துறையின் இயல்புகளில் ஒன்றாகி விட்டது.

அவற்றில் ஓர் அங்கம் தடைசெய்யப்பட்ட மருந்து வகைகளின் இறக்குமதி. தரம் குறைந்தவை, பக்க விளைவுகளைத் தரவல்லவை, விரைவில் காலாவதியாகக் கூடியவை என்று இனங்காணப்பட்ட முப்பது வகையான மருந்து வகைகளின் இறக்குமதி இன்னும் தொடர்ந்து கொண்டே இருப்பதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸநாயக்கா நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறார்; குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேபோன்று, சுகாதார அமைச்சினால் தடைசெய்யப்பட்ட வைத்திய உபகரணங்களும் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்டு வைத்திய சாலைகளில் பயன்படுத்தப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கண்டித்திருக்கிறார்.

அதற்கு அரசாங்கமே காரணம் என்றும் அனுரகுமார திஸநாயக்கா சாடியுள்ளார். குறிப்பிட்ட முப்பது வகையான மருந்து வகைகள் மற்றும் உபகரணங்களைத் தடைசெய்வது எனக் கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இப்போது தான் அதற்கான சட்ட வரைவு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் கண்டித்துள்ளார்.

இதேவேளை, பல அரசாங்க வைத்தியசாலைகளில், மிக முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இப்போது மக்களை வயது வித்தியாசமின்றித் தாக்கி வரும் உயர் குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான மருந்தான 'லொசாற்றான். கே'' நாட்டில் உள்ள பல பிரதான வைத்தியசாலைகளில் கையிருப்பில் இல்லை என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

அத்தோடு நிற்கவில்லை. இறக்குமதி செய்யப்பட்டு நாட்டில் பல பாகங்களிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட "அமொக்சலின்'' என்ற அதிகம் பயன்படுத்தப்படும் குளிகைகள் உட்பட பல மருந்து வகைகள் பழுதடைந்த நிலையிலேயே தருவிக்கப்பட்டதால் நோயாளருக்குப் பயன்படவில்லை. அவர்களின் வரிப் பணத்துக்கும் நாசம்.

மக்களின் நோய் தீர்க்கும், உயிர் காக்கும் மருந்து வகைகளைச் சீரான முறையில் இறக்குமதி செய்வதிலும் வைத்தியசாலைகளுக்கு உரிய காலத்தில் விநியோகிப்பதிலும் சீரான முறையில் செயற்படாத அரச அலகுகள், ஏனைய துறைகள் சார்ந்த செயற்பாடுகளில் எத்துணை அசட்டையுடனும், மோசடி ததும்பவும் இயங்குகின்றன என்பது வெளிப்படையாகிறது.

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி, பாவனைப் பொருள்கள் விநியோகத்தில் மோசடிகள், முக்கிய பாவனைப் பொருள்களை கள்ளச் சந்தைக்கு மாற்றுதல், ரயில்வே உட்பட போக்குவரத்து சேவைகள் உரிய முறையில் நிர்வகிக்கப்படாததில் உண்டாகும் நானாவித நட்டங்கள் போன்ற பல வகைப்பட்ட மோசடிகளும் ஊழல்களும் இப்போதைய ஆட்சியில் தாராளமாக நடந்தேறி வருகின்றன.

இத்தகைய மக்கள் விரோதச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டியது முழுக்க, முழுக்க அரசாங்கத்தின் பொறுப்பே. ஆனால் உயர் பதவிகளிலும் பொறுப்பான நிர்வாகத் தரப்புகளிலும் கதிரைகளுக்குச் சூடேற்றுவோரும், அரச உயர் மற்றும் அரை மட்டத்தினரும், அவர்தம் எடுபிடிகளும் மேலோங்கி, மலிந்துவிட்டால் எப்போதும் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்களே. இது எந்த அரசு பதவியிலிருந்தாலும் வழமைதான் என்றாலும், ஒப்பீட்டளவில் இப்போதைய நிலை மக்களை அத்தியாவசிய சேவைகள் உட்பட அவர்களின் தேவைகளையும் வசதிகளையும் நறுக்கி, கருக்கி நலிவடையச் செய்கிறது.

தேர்தல்களில் வென்று பதவிகளையும் அவற்றினூடு செல்வாக்கையும் கைப்பற்றிக் கொள்ளும் அரசியல் வாதிகளும், அரசாங்கங்களும் அதன் பின்னர் மக்கள் நலன்களைக் காலால் மிதித்து, நீதியைக் 'கொன்று', மக்களுக்கான ஆட்சி என்பதை மறந்து செயற்படும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் இந்த நாட்டில் உருவாகும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. வெறுமனே வெளிநாடுகளை உதாரணம் காட்டுவதால் இன்றைய கீழ் நிலையிலிருந்து, தரை மட்டத்திலிருந்து ஸ்ரீமான் பொதுசனம் தங்கள் தலையை ஓர் அங்குலமேனும் உயர்த்த வல்லமை வராது.

ஜனநாயகம் என்பது ஆட்சியிலிருப்போரதும் அவர்களின் அடிவருடிகளினதும் ஏகபோகத்தின் வழி கிடைக்கும் சுகபோகம் என்றாகி விட்டது இலங்கையில். மக்கள் நலனை உதாசீனம் செய்து அதிகாரப் பிரகிருதிகள் வசதிவாய்ப்புக்களை தமதாக்கிக்கொள்ளும் அநியாயம் அசுர வேகத்தில் வளர்வதைத் தடுக்கும் சக்தி எவருக்குமில்லையே!

# பெற்றோரைக் கவலையில் ஆழ்த்தியுள்ள புலமைப்பரிசில் மீள்பரிசீலனை அறிவுறுத்தல்

அச்சுவேலி, செப்.23

வெளியாகியுள்ள புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் விடைத்தாள் மீள் பரிசீலனை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுப்பி வைத்துள்ள அறிவுறுத்தல் கடிதம் பெற்றோர் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் கடந்த 3 ஆம் திகதி அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கட்டம் போட்டு சில பகுதிகள் காட்டப்பட்டுள்ளன.

" இப் பரீட்சைப் பெறுபேறு வெளியிடுவதற்குமுன் பலதடவைகள் நுணுக்கமாக பரிசீலனைகள் பல செய்யப்பட்டு பெறுபேறு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமையுமானால் இந்தப் பரீட்சை விடைத்தாள்கள் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

எவ்வாறாயினும் தங்களது பாடசாலையில் எவராவது பரீட்சார்த்தியின் பெறுபேறு நம்ப முடியாதவகையில் இருக்குமாயின் பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு முன்னர் அதிபரினால் மனுச் செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு பரீட்சார்த்திகள் பலர் சம்பந்தமாக மனுச் செய்வதாயின் அவை அனைத்தும் பட்டியலப்படுத்தி ஒரே உறையில் இட்டு அனுப்பிவைக்க வேண்டும்.

3, 4 மற்றும் 5 ஆம் தரங்களில் தவணை இறுதிப்பரீட்சையின் முன்னேற்ற அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பரீட்சார்த்தியின் சாதனைகள் சம்பந்தமாக வகுப்பு ஆசிரியரினதும் பகுதித்தலைவரினதும் முழு விவரஅறிக்கை, பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள விசேட திறமைகள், தேர்ச்சிகள், பெறப்பட்ட புள்ளிகளின் நம்ப முடியாத் தன்மைக்காக முன்வைக்கப்படும் வேறு காரணங்கள் போன்ற விவரமும் இவற்றுடன் அனுப்பப்பட வேண்டும்.

பெற்றோர்/ வகுப்பாசிரியர் ஆகியோர் மனுக்களை முன்வைக்கக் கூடாது. அவ்வாறான விண்ணப்பப் படிவங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலைகளுக்கு விடைத்தாள் மறு பரிசீலனை செய்வது தொடர்பாக செல்லும் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு அதிபர்கள் குறித்த கடிதத்தை காண்பித்து விட்டு திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

இது தொடர்பாகப் பெற்றோரும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் குழப்பம் அடைந்த நிலையில் உள்ளனர்.

(ம-11)

# அங்கவீனர்கள், விதவைகள் தொடர்பான சரியான தகவல் எம்மிடமும் இல்லை

## கைவிரிக்கிறார் யுனிசெப் பிரதிநிதி

யாழ்ப்பாணம், செப்.23

அங்கவீனர்கள், விதவைகள், சிறுவர்கள் தொடர்பில் உண்மையான சரியான தகவல்கள் எங்களிடமும் இல்லை. அதை நாங்களும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்து வருகின்றோம்.

இவ்வாறு யுனிசெப் நிறுவன பிரதிநிதி மக்வேரி டமஸ்கஸ் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், ஐ.நா. அமைப்பின் முகவர் நிலையங்களுக்கும், அபிவிருத்தி தொடர்பான அறிக்கையிடல் என்னும் தலைப்பிலான ஒருநாள் செயலமர்வு 'ஞானம்ஸ்' விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் குழுவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.நா. அமைப்பின் உருவாக்கம் மற்றும் அதன் வரலாறு, அதனுடைய தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக முதலில் விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் 'இலங்கையில் ஐ.நாவின் பங்கு எத்தகையது' என்பது தொடர்பிலும் அது எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் ஐ.நா.வின் எந்தெந்த முகவர் அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றின் செயற்பாடுகள் என்ன வகையில் இந்தப் பிராந்தியத்தில் நடைபெறுகின்றன என்பது தொடர்பாக ஐ.நா முகவர் அமைப்பின் பிரதிநிதிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

இறுதியாக அபிவிருத்தி ஊடகவியல் என்றால் என்ன என்பது தொடர்பிலும் அதை எவ்வாறு ஊடகங்கள் செயற்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

ஐ.நா. முகவர் அமைப்புக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக ஊடகவியலாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அதன்போது சகல தகவல்களையும் இங்கிருக்கின்றவர்களால் வழங்க முடியாது என்றும் கொழும்பிலேதான் பெற்றுத்தர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஐ.நா. மனிதாபிமான ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் (UN OCHA) தமது இணையத்தில் மாதாந்த அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15-14-311)

# ஆசைக்குக் காரணம் யார்?

இந்த அறையிலிருந்து சுவரை ஊடுருவிக்கொண்டு என்னால் வெளியேற முடியுமானால் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால், அது முடியாது. எனக்கு நோயே வராமல் இருக்குமானால் அது மிகவும் நல்லது. ஆனால் நோய் வருவதை என்னால் தடுக்க முடியாது. எனக்குச் சாவே கிடையாது என்றால் மிகவும் மகிழ்ச்சிதான். ஆனால், நான் இறந்தேயாக வேண்டும்.

என்னால் இயலாத லட்சக்கணக்கான விடயங்களை எல்லாம் செய்ய முடியுமானால் பேரானந்தம்தான்.

ஆசை இருக்கிறது. ஆனால், அதை நிறைவேற்றும் வழி கிடைக்காமல் போகும் போதுதான் துன்பம் என்ற வினோதமான பிரதிச்செயல் உண்டாகிறது.

ஆசைக்குக் காரணம் யார்? நான்... நானே! இப்போது நான்படும் துன்பங்களுக்கெல்லாம் நானே காரணம்!

-சுவாமி விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய கடற்றொழில் அமைப்புகளில் மேலும் 2,000 அங்கத்தவருக்கு வாய்ப்பு

**கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர்**

யாழ்ப்பாணம், செப்.23

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கிராமிய கடற்றொழில் அமைப்புகளில் மேலும் 2 ஆயிரம் அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாட்டத்தில் 75 கிராமிய கடற்றொழில் அமைப்புகள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்புகளில் 8 ஆயிரம் அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சர் கலாநிதி ராஜித சேனரட்ன, 10 ஆயிரம் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும்படி பணித்துள்ளார்.

எனவே மேலும் 2 ஆயிரம் அங்கத்தவர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அதற்கான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.-என்றார்.

அத்துடன் இனிவருங் காலங்களில் வழங்கப்படவிருக்கும் உதவிகள் யாவும் இந்த அமைப்புகள் ஊடாகவே கடற்றொழிலாளர்களைச் சென்றடையவுள்ளன.

எனவே கிராமிய கடற்றொழில் அமைப்புகளை மிகவும் வினைத் திறனான முறையில் செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.- எனவும் கேட்டுக் கொண்டார். (ம-14)

# யாழ்.மாவட்ட மீனவருக்கு ஆழ்கடல் மீன்பிடிப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூர் கடற்றொழிலாளர்கள் கடல் அட்டை, சங்கு பிடிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தேவையானவர்கள் தன்னுடன் தொடர்பு கொள்ளலாம் என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடல் அட்டை, சங்கு பிடிப்பதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கு அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்று தயாராக இருக்கிறது.

அது தொடர்பான முழுமையான விவரங்களை, பயிற்சி பெற விரும்பும் உள்ளூர் கடற்றொழிலாளர்கள் என்னுடன் தொடர்பு கொள்ள முடியும்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் புத்தளம், சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்கு பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆழக்கடலில் சுழியோடிச் சென்று சங்கு பிடிக்கும் தொழிலை மேற்கொள்ள எமது உள்ளூர் தொழிலாளர்கள் விரும்பாமைக்கு உயிராபத்தே காரணம்.

அதற்கான பயிற்சிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.- என்றார். (ம-14)

# ஐநூறு பயனாளிகளுக்கு மலசலகூட வசதிகள்

யாழ்ப்பாணம், செப்.23

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 500 பயனாளிகளுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. மேற்படித் திட்டத்தின் கீழ் ரூபா 20 ஆயிரம் பெறுமதியான கட்டடப் பொருள்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிதி நல்லூர் பிரதேச செயலகத்துக்குவழங்கப்பட்டுள்ளது. உரிய அறிவித்தல் கிடைத்ததும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தமது வேலைகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. (வ-7)

**தகுதிகாணல்....**



கடப்பாடு: தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் வருடாந்த பரிசோதனையும் பொலிஸ் அணிவகுப்பும் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்னிலையில் இடம்பெற்றன. காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்னவால் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த நிகழ்வில் காமினிநவரட்ன பொலிஸ் அணிவகுப்பு மற்றும் உடைகளை பரிசோதனை செய்கிறார். (ம-86)

# சுன்னாகம் பொலிஸாரின் நடமாடும் சேவை நாளை

வலி. வடக்கு, செப். 23

சுன்னாகம் பொலிஸாரால் நாளை சனிக்கிழமை பொதுமக்களின் நன்மை கருதி நடமாடும் சேவை ஒன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது .

காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் இணுவில் உடுவில் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/182, ஜே/183, ஜே/184, ஜே/185, ஜே/186, ஜே/187, ஜே/188, ஜே/189, ஜே/190, ஜே/191 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்வதுடன் பொலிஸ் முறைப்பாடுகளைப் பதிவு செய்தல் மற்றும் சிறுகுற்றங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள், விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொதுமக்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-86)

# முன்னிரவில் ஏற்படும் மின்தடையால் வடமராட்சி மக்கள் அவதி

வடமராட்சி, செப். 23

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஒருவார காலத்துக்கு மேலாக முன்னிரவில் மின்சாரம் தடைப்பட்டு வருவதால் மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தினமும் மாலை 7 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையிலேயே பெரும்பாலும் மின் தடை ஏற்படுகின்றது.

இந்த நேரத்தில் மர்ம மனிதனின் நடமாட்டங்கள் இடம் பெறுவதால் மக்கள் மத்தியில் அச்சம், பீதி ஏற்படுகின்றது.

மாணவர்கள் படிக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றது. நீண்ட, குறுகிய தூரங்களுக்கு பயணித்து வீடுகளுக்குத் திரும்புவோர் ஆங்காங்கே குடிமனைகளின் வெளிச்சமின்மையால் வீடு போய்ச் சேர்வதில் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வர்த்தக நிலையங்களின் வியாபாரங்கள் பாதிக்கப்படுவதுடன் அவர்கள் பெரும் நெருக்கடியையும் எதிர்கொள்கின்றனர்.

பொது மக்களின் பயன்பாட்டின் உச்ச வேளையில் மின்சாரம் தடைப்படுவதால் மக்கள் பெரும்சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். (ம-236)

# தீவகத்தில் இம்முறை அதிகளவு மாணவர் புலமைப்பரிசில் சித்தி

யாழ்ப்பாணம், செப்.23

தீவக வலயப் பாடசாலைகளில் இந்தமுறை தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் அதிகமானவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்த முறை 812 மாணவர்கள் தோற்றிய நிலையில் 35 மாணவர்கள் 150 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு சித்தியடைந்தமை வலய ஆரம்பக் கல்விப் பிரிவுக்குக் கிடைத்த முன்னேற்றம் என்று ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-267)

# தார் வீதியாக மாறிவரும் மணியந்தோட்டம் வீதி



கொழும்புத்துறை, செப்.23

மணியந்தோட்ட கிராமத்தின் பிரதான வீதியைப் புதிதாக நிர்மாணிக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை காலமும் மணல் பாதையாக இருந்த வீதி தற்போது தார் வீதியாக அமைக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் 'என்றிப்' திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையால் இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது. இந்தப் பகுதி மக்களும் இதற்கான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

மணியந்தோட்டச் சந்தியில் இருந்து 8 ஆம் குறுக்கு வழியாக இந்தப் புதிய வீதி அரியாலை, நாவலடி வரை சுமார் 2 கிலோமீற்றருக்கு அமைக்கப் படுமென்று கூறப்பட்டது.

இந்தப் பகுதியில் 16 வருடங்களுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்த மக்கள் போக்குவரத்துப் பாதைகள் சீரின்மையால் பல சிரமங்களை எதிர் நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி மரணம்

வலி.வடக்கு, செப் 23

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம் அடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை மரணம் அடைந்துள்ளார்.

கொக்குவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்புறம் இருந்து சென்ற தாவடியைச் சேர்ந்த அம்பலவாணர் இருதயதாஸ் (வயது 62) என்பவர் தலையில் காயமுற்ற நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஒரு வாரகாலமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற போதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணம் அடைந்துள்ளார். ([illegible])

# நல்லூர் பிரதேச கலாசார விழா

யாழ்ப்பாணம், செப்.23

நல்லூர் பிரதேச செயலகக் கலாசார விழா ஒக்ரோபர் மாத முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நல்லூர் பிரதேச கலாசாரப் பிரிவால் எதிர்வரும் 24ஆம் திகதியும் 25 ஆம் திகதியும் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதி மீது பலாத்கார முயற்சி; கைதானார் ஓட்டோச் சாரதி

## புங்குடுதீவில் 19 ஆம் திகதி இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், செப், 23

யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு இறுப்பிட்டியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்ற இளம் பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஓட்டோ சாரதி ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

தனியார் பஸ் ஒன்றில் புங்குடு தீவுக்குச் சென்ற 23 வயதுள்ள இளம் பெண் இறுப்பிட்டிக்குச் செல்வதற்காக பெருங்காட்டுச் சந்தியில் இறங்கியுள்ளார். அங்கிருந்து தனது வீட்டுக்குச் செல்வதற்காக அங்கு நின்ற ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி உள்ளார்.

இரவு நேரம் என்பதால் பஸ்ஸில் வந்திறங்கிய ஒரு முதியவர் அந்தப் பெண்ணுக்குத் துணையாகச் செல்ல யோசித்துத் தானும் அந்தப் பெண் பிள்ளையின் வீடுவரை வந்து திரும்பி வருவதாகவும் ஓட்டோ சாரதியிடம் தெரிவித்துள்ளார்.

ஓட்டோ சாரதி குறிப்பிட்ட பெண் பிள்ளை தனது உறவினர், தெரிந்தவர் என்று கூறி அந்தப் பெரியவரைத் தவிர்த்து விட்டு பெண்ணை மட்டும் ஏற்றிச் சென்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

''ஓட்டோ எனது வீட்டுக்குச் செல்வதற்கான பாதையை விடுத்து ஊரதீவுக்குச் செல்லும் வீதியூடாகச் செல்வதைத் கண்டதும் நான் சத்தம் போட்டேன். எனினும் சன சந்தடியற்ற அந்த இடத்தில் வைத்து ஓட்டோ சாரதி என்னைப் பலாத்காரம் செய்ய முயற்சித்தார்'' என்று தனது முறைப்பாட்டில் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

தன்னிடம் சாரதி முறை தவறி நடந்து கொள்வது குறித்து பொலிஸாரிடமும் இராணுவத்தினரிடமும் முறையிடுவேன் என்று யுவதி மிரட்டியதை அடுத்து பயந்து போன சாரதி, அவரை ஏற்றி வந்து வீட்டுக்கு அருகே இறக்கி விட்டுச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பெண் தனது வீட்டாரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் குறிக்காட்டுவானில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்றனர். ஆனால், குற்றப் பிரிவு முறைப்பாடுகளைத் தாம் எடுப்பதில்லை என்று கூறி அவர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி வைத்தனர்.

ஊர்காவற்றுறையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அங்குள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெண் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பந்தப்பட்ட பெண்ணின் சட்டைகள் கிழிந்திருந்ததுடன் உடலில் சிறுசிறு நகக் கீறல் காயங்களும் காணப்பட்டதாகவும் மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஓட்டோ சாரதி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். ஏற்கனவே இது போன்ற சம்பவங்களில் இவர் ஈடுபட்டிருந்தார் என்றும் எனினும் வழக்குகளைச் சந்திக்காமல் தப்பிக் கொண்டார் எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

''யாழ்ப்பாணத்தில் இருந்து அன்றைய தினம் 7 மணிக்குப் புறப்பட வேண்டிய தனியார் பஸ் வவுனியாவில் இருந்து வரும் ஒருவருக்காகக் காத்திருந்து 45 நிமிடங்கள் பிந்தியே புறப்பட்டதாகவும் இரவு 8.45 இற்குப் பின்னரே அந்த பஸ் பெருங்காட்டுச் சந்தியை வந்து சேர்ந்ததாகவும் பஸ்களின் இந்த நேரம் தவறும் நடவடிக்கைகளே இந்தச் சம்பவம் இடம் பெறக் காரணம்'' எனவும் புங்குடுதீவு மக்கள் விசனப்படுகின்றனர். (உ-7)

# அமைச்சர் வருவார் என்று காத்திருந்த மக்கள் ஏமாற்றம்

அளவெட்டி, செப்.23

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியான நிலையில் உள்ள இருமாடிக் கட்டடத்தை பார்வையிட்டு, கையளிப்பதற்கு வருகை தருவதாக அறிவித்திருந்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா வருகை தராததால் ஏமாற்றம் அடைந்தது பாடசாலைச் சமூகம்.

கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் நலன் விரும்பிகள் அமைச்சரின் வருகையை எதிர்பார்த்திருந்தனர்.

இந்தக் கல்லூரிக்கு இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தை கல்வி அமைச்சர் பார்வையிடவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு அமைச்சர் வருவதாகவும் கூறப்பட்டிருந்தது.

அவரை வரவேற்பதற்கு பாடசாலை மாணவர், ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் ஆவலுடன் காத்திருந்தனர். மாணவர்களின் வரவேற்பு நிகழ்வும் பெருமெடுப்பில் ஏற்பாடாகியிருந்தது.

பிற்பகல் 2 மணியளவில், அமைச்சர் பார்வையிட வரமாட்டார் என தகவல் கிடைத்ததாகவும் இதனால் காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் என்றும் கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்தனர். (ம-36)

# கியூடெக் ஏற்பாட்டில் குருதிக் கொடை

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வும் ஒன்று கூடலும் நிறுவன இயக்குநர் அருட்திரு பேனாட் றெக்னோ அடிகள் தலைமையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

'மனித விழுமியங்களை மதிப்போம் சமாதானத்தை வளர்ப்போம்' என்னும் தொனிப் பொருளில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் எஸ்.சிந்துஜா தலைமையிலான குழுவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். அருட்தந்தையர்கள், நிறுவன பணியாளர்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் குருதிக் கொடையை மேற்கொண்டனர்.

கியூடெக் நிறுவனம் தொடராக மேற்கொண்டு வரும் இரத்த தான நிகழ்வுகளில் அதிக தடவைகள் குருதிக் கொடையை மேற்கொண்டவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ம-135)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு சுயதொழில் கடன் உதவி

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.மாவட்ட சமுர்த்திப் பயனாளிகளில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு அடித்தது யோகம்.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஐஸ்கட்டியில் உற்பத்திப் பொருள்கள் குறைந்த நேரத்தில் உற்பத்தி செய்யும் இயந்திரம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கானோர் இந்த இயந்திரத்தின் பயன்பாட்டால் கவரப்பட்டனர்.

இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்யப் பலர் சுய தொழில் உதவி கோரி பிரதேச செயலகங்களில் விண்ணப்பம் செய்தனர். குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில் யாழ். மாவட்ட சமுர்த்தி அதிகார சபையினர் இந்த இயந்திரத் தையும் உபகரணங்களையும் சமுர்த்திப் பயனாளிகளுக்குக் கொள்வனவு செய்து வழங்க சகல பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

அத்துடன் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திரத்தையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய அந்தந்த சமுர்த்தி வங்கிகள் ஊடாகக் கடன் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் கொழும்பில் உள்ள ஐஸ்கசால் என்னும் நிறுவனத்தினர் பிரதேச செயலகங்களில் பயனாளிகளுக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் அந்தந்தப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)



523 ஆவது படைப் பிரிவின் சாவகச்சேரி நகர கட்டளைப் பிரிவினரால் அண்மையில் தரம்- 5 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் மாணவி ஒருவருக்கு படைப் பிரிவின் சிவில் அதிகாரி கேணல் லக்ஷ்மன் பரிசில் வழங்குகிறார். கேணல் ஹேமரத்ன, கேணல் அபயவர்த்தன ஆகியோரும் அருகில் உள்ளனர். (ம-131)

# முதியோர் வலுவிழந்தோருக்கு முன்னுரிமையில் சிகிச்சைகள்

அளவெட்டி, செப்.23

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கும், மாற்று வலுவுடையவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை பெறுவதற்கான ஒழுங்கு முறைமைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவர்கள் தமக்குரிய உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்து தமக்குரிய முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பயனாளிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் அ.ஜெயக்குமாரன் அறிவுறுத்தியுள்ளார். (ம-36)

# கவலையில் ஆழ்த்தும் 'ஹப்பி டே'

வருடத்தில் ஒருநாள் பாடசாலை யில் மகிழ்வாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் 'ஹப்பிடே' இந்த வருடம் கொண்டாடப்படுகிறது.

இதனை மாணவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு 'ஹப்பிடே'யை கல்விச் சமூகத்தினரைத் தலைகுனிய வைக்கும் செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் சீருடை அணியாமல் வர்ண உடைகளில் செல்வதும் பாடசாலை வளாகத்தினுள் பட்டாசு கொளுத்துவதும் கூக்குரல் இடுவதும் கல்விச் சமூகத்தினரைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

பாடசாலை வளாகத்தில் பாடசாலை நேரத்தில் திடீரென பட்டாசு வெடிச்சத்தம் கேட்டதால் அயலில் வசிப்போர் அதிர்ச்சியடைந்து பாடசாலைக்கு ஓடிவந்து பார்த்த சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த 'ஹப்பிடே' அனுஷ்ரிக்கப்படுவதாகவும் இதற்காக ஒரு பாடசாலைக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சகல பாடசாலைக்கும் ஒரே அளவிலான நிதி வழங்கப்படுவதால் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலும் பாடசாலைகளில் இந்த நிதியினை அனைத்து மாணவர்களுக்கும் பயன் படுத்தப் போதியதாக இல்லை என்றும் கூறப்படுகின்றது.

இதே [illegible] மகா வித்தியாலயத்தில் 'ஹப்பிடே' இன்று அனுஷ்டிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-207)

# திருடர்கள் தாக்கியதில் வீட்டு இளைஞர் காயம்

வலி. வடக்கு, செப். 23

கொக்குவில் பகுதியில் அதிகாலை வேளையில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட திருடர்கள் வீட்டார் நித்திரை விட்டெழுந்ததைக் கண்டு அவர்களைத் தாக்கியதில் இளைஞர் ஒருவர் காயங்களுக்கு ஆளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் உள்ள ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் தவநாதன் வீட்டில் திருடர்கள் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இந்த விடயம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் இது சம்பந்த மான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23 செப்ரெம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்....



கோண்டாவில் மேற்கு உப்புமடத்தடி ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவத்தின் வேட்டைத் திருவிழாவில் வைரவர் பரிவாரங்கள் புடை சூழ வீதியுலா வருகின்றார். (86)



அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவத நாராயணர் தேவஸ்தான ரதோற்சவத்தில் ஸ்ரீமத் நாராயணர் சிற்பத்தேரினில் ஆரோகணித்து வீதியுலா வருகிறார். (160)



நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய ரதோற்சவத்தில் முருகன் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். (100)



வவுனியா கோயிற்குளம் விஷ்ணு ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கும்பாபிஷேகம், சங்காபிஷேக நிகழ்வுகளைத்தொடர்ந்து புதுப்பொலிவுடன் ஆலயம் காட்சியளிக்கின்றது. (421)

## கிழக்குப் பல்கலையில் விரிவுரைகள் ஆரம்பம்

கிழக்குப் பல்கலைக்கழக 2010/ 2011 ஆம் கல்வியாண்டுக்கு பின்வரும் பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

விவசாய விஞ்ஞான பீடம் எதிர்வரும் 3ஆம் திகதியும், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் 5ஆம் திகதியும்,

நவம்பர் 2 ஆம் திகதி கலை, கலாசார, வர்த்தக முகாமைத்துவ, விஞ்ஞான ஆகிய பீடங்களுக்கும் விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மேற்படி பீடத்தினைச் சார்ந்த மாணவர்கள் தத்தமது விடுதிகளுக்கு தங்களது பீடங்களின் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிக்கு முதல் நாள் பிற்பகல் 5 மணிக்கு முன்னர் மருத்துவம் மற்றும் தாதியியல் மாணவர்கள் சௌக்கிய பராமரிப்பு, விஞ்ஞான பீடம், இல50, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

ஏனைய பீட மாணவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி என்னும் முகவரியில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு தத்தமது பீடத்தின் பீடாதிபதியுடனோ அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள் 065-224 0584 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது உதவிப் பதிவாளர்/ மாணவர் நலன்புரி சேவைகள் 065- 22 40731 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(வ)

## விழிப்புலனற்றவரை அலையவிடும் மனிதத் தன்மையற்ற பேர்வழி

தென்மராட்சி, செப்.23

விழிப்புலனற்ற ஒருவர் தான் தவற விடப்பட்ட பொருளைக் கொடுக்காத ஏமாற்றுப் பேர் வழியால் அலைந்து திரியும் நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் மேற்கைச் சேர்ந்த க.தம்பிராசா என்னும் விழிப்புலன் இழந்தவர் கதிரைகள் பின்னும் தொழிலை மேற்கொண்டு வருகிறார்.

இவர் கடந்த மாதம் பருத்தித்துறைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வேளையில் பணம் உட்படப் பல பொருள்களை மினி பஸ்ஸினுள் தவறவிட்டுள்ளார்.

ஒரு. தொகைப்பணம், விழிப்புலனற்றோர் பயன்படுத்தும் மணிக்கூடு, அடையாளஅட்டை, தொழிலுக்கான கருவிகள், தொலைபேசி இலக்கங்கள் உட்படப் பல பொருள்கள் அடங்கிய பையை மினி பஸ்ஸினுள் தவறவிட்ட நிலையில் வீடு திரும்பினார்.

இரு தினங்களின் பின்னர் பையினுள் இருந்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து இவரால் தவறவிட்ட பொருள்கள் பருத்தித்துறை மினிபஸ் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தகவல் கிடைத்ததும் பல தடவைகள் பருத்தித்துறை மினிபஸ் சங்கத்துக்கு அலைந்த போதிலும் அங்கு இல்லையென கைவிரிக்கப்படுவதாகவும் கவலையுடன் தெரிவித்த குறித்த நபர் கண்தெரியாத தன்னை அலைய வைப்பதாகவும் கவலையுடன் தெரிவித்தார். மேலும் தொழில் உபகரணங்கள் தொலைந்ததால் தொழில் செய்யமுடியாமல் கஷ்டமுறுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

(வ-207)

## அஞ்சல் அதிபர்களுக்கு ஆள் சேர்க்கிறது அரசு

கொடிகாமம், செப்.23

அஞ்சல் திணைக்களம் II ஆம் தர அஞ்சல் அதிபர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான கட்டணமாக 1000 ரூபாவை அஞ்சலகங்களில் செலுத்திப் பெறப் படும் பற்றுச் சீட்டை விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டி அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் நான்கு திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்3 பாடங்களிலும் திறமைச் சித்தியும் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை கொழும்பில் இடம் பெறுவதுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரினால் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-22)

## எக்ஸ்ரே' இயந்திரம் திருத்தப்பட்டது

அளவெட்டி, செப். 23

தெல்லிப்பழை ஆதார வைத்திசாலையில் நீண்ட காலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்த 'எக்ஸ்ரே' கதிர் படமெடுக்கும் இயந்திரம் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

இதுவரை நாளும் மேற்படி வைத்தியசாலையிலிருந்து கதிரியக்கப்படமெடுப்பதற்கு நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எனவே மீண்டும் 'எக்ஸ்ரே' கதிர் இயந் திரம் செயற்படத் தொடங்கியதால் இப்பிரதேச நோயாளிகள் சிரமமின்றி மீண்டும் இங்குவந்து சிசிச்சை பெறக் கூடியதாக உள்ளது என வைத்தியசாலை வட்டார மூலம் தெரியவந்துள்ளது.

(வ-36)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 23

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் கோண்டாவில் பொது நூலகத்துடன் இணைந்து நடத்தப்படும் 'தனி' மனித ஆளுமை அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் இரண்டு நாள் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் மற்றும் 2 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப.2.30 மணிவரை கோண்டாவில் வேதாரணிய சனசமூக நிலையத்தில் நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்த இலவச கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியும். இதற்கான பதிவுகளை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் கோண்டாவில் பொதுநூலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு நூலகர் செல்வி கி. அனிதா கேட்டுக்கொண்டுள்ளார்.

(வ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்-காணி அதிகாரத்துடன் தீர்வு பெற மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம்

## அமெரிக்கத் தூதுவரிடம் தமிழ்க் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

கொழும்பு,செப்.23

தமிழ் மக்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களுடன் கூடிய சுயநிர்ணய ஆட்சி கிடைக்கப்பெறவேண்டுமானால் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்கள் சுமூகமாக வாழ்வதற்கு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று அமெரிக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளது.



வன்னியின் இன்றைய நிலைவரங்கள் தொடர்பாக அறிந்து கொள்ளும் பொருட்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினன்ஸ் நேற்றுமுன்தினம் அங்கு சென்றிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் மாலை சென்ற அமெரிக்கத் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் என்னிடம் கேட்டறிந்தார்.

கிளிநொச்சியிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டால் இங்கு சுமுகமான தொரு நிலை ஏற்படும் என்று அமெரிக்கத் தூதுவரிடம் நான் எடுத்துரைத்தேன். தமிழர் தாயக பிரதேசங்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் சிங்களக் குடியேற்றம் தொடர்பாகவும் கூறினேன்.

கடந்த கால சம்பவங்கள் மற்றும் நடைமுறை விடயங்களைக் கருத்திற்கொண்டே இந்தக் கோரிக்கையை முன்வைத்தேன்.

நான் முன்வைத்த கோரிக்களை செவிமடுத்த அமெரிக்கத் தூதுவர், இலங்கையில் தமிழ மக்கள் சுமுகமாக வாழ் வதற்குத் தன்னாலான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா முன்னெடுக்கும் என உறுதியளித்தார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்புத் தொடர்பிலும் அவர் என்னிடம் கேட்டார். புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு அவசியம் என நான் கூறினேன். சுயநிர்ணய ஆட்சி கிடைக்கப்பெறும் பட்சத்தில் நிதியீட்டல் மற்றும் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதையும் எடுத்துரைத்தேன்.

பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அமெரிக்கா முன்னெடுக்க உள்ள நடவடிக்கை என்னவென்பது தொடர்பாக அவர் கூறவில்லை. எமது பிரச்சினைகளையே கேட்டறிந்தார். இருந்த போதிலும் அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது- என்றார். (ச)

# என்னத்தைச்... ...சொல்ல?!

### கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தமாடும் கதை

நாம் அன்று கண்டு கேட்டிராத மா, பெரிய "கல்விச் சூறாவளி" அடித்து ஓய்ந்து விட்டது.

என்ன அந்தச் சூறாவளி?

வீடு வீடாக விடி விளக்கு எரித்து, தெருத் தெருவாக பச்சிளம் பாலகர்களைக் கொண்டு திரியும் "கொடுமை"யை என்னென்று சொல்வது? அம்மாவிடம் ஒரு மோட்டார் சைக்கிள் அப்பனுக்கு வேறு ஒன்று. தத்தமது பாலகரை ஏத்திப் பறிப்பதும், ரியூசன் வகுப்பில் விட்டு விட்டு தெருவோரம் பெற்றோர் "கொமிற்றி கூடுவதும்" கூடிக் கதைப்பதும் சற்றே கால் ஆற எட்டத்தில் போய் நிற் பதும் சர்வசாதாரணம். அதனால் ஒரு சில வேண்டத்தகாத விளைவுகள் பெற்றோர் மத்தியில் எங்கோ நடந்ததாகவும் ஒரு கதை அப்போது அடிபட்டதும் உண்டு.

இப்படியாக, ஊணை மறந்து, உறைவிடத்தைக் கைவிட்டு, தான் பெற்ற மகனின் உயர்வுக்கு தாய் அலையும் காட்சி, இன்று யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணமாகி விட்டது. இத்தனையும் எதற்கு என்றால் "பிள்ளை புலமைப்பரிசில் சோதனை" எடுக்குதாம். அதுதான் தாய், தகப்பன் இப்படிப் பஞ்சாய்ப் பறக்குதுகள் என்பது பக்கத்து வீட்டு அன்ரியின் "கொமென்ற்".

கோயிலை மறந்து, திருவிழாவை மறந்து, உண்டியை மறந்து, வீடு-பள்ளிக்கூடம்-ரியூசன்-பின்னர் வீட்டில் "ஸ்பெசல்" படிப்பு-இப்படி பத்து வயதே நிரம்பிய பாலகர்களை ஆட்டிப்படைக்கும் "இஸ்கொலசிப்" வருங் கால இளைஞரைக் கொல்லாமல் கொல்லும், கொடூர வியாதியாகிவிட்டது!

அண்மையில் ஒரு பிரபல டாக்டரிடம், ஏதோ கதைப்பதற்குப் போயிருந்தேன். அங்கு ஒரு தம்பதியர் (கப்பிள்) வந்திருந்தனர். அவவுக்கு 37, அவருக்கு 40. சென்ற வாரம் தலைச்சுத்து, நித்திரை இன்மை -வாய்புலம்பல், வயிற்றோட்டம்- இப்படிப் பல வியாதிகள் குறித்து அடுக்கிக்கொண்டு போயினர். அந்த மாப்பிள்ளை - மனைவியின் தேக நிலை அதுவென்று மகுடமிட்டார்.

டாக்டர், மனநோய் படித்த வல்லுநர், பிள்ளைகளைப் பற்றி விசாரித்தார். அப்போதுதான் குட்டு அவிழ்ந்தது . தன் மனைவிக்கு எண்ணமெல்லாம் தன் மகளது "இஸ்கொலசிப்" பற்றியதுதானாம். ஊண், உறக்கம் கிடையாதாம். குறிப்பிட்ட வாரத்தில் சோதனை முடிவுகள் வெளிவரப் போவதாக அறிந்ததும், அவளின் மனநிலை குழம்பி (Depression) டிப்- அடித்துவிட்டதாக அந்த அப்பாவிக் கணவர் கூறினார்.

ஒவ்வோர் ஆண்டும் யாழ்ப்பாணத்தில் 55 முதல் 60 வரையான டாக்டர்கள் சித்தி எய்தி வெளியேறுகிறார்கள். கலாநிதிகளாகப் பலர் பட்டம் பெறுகின்றனர், பல்துறை அறிஞர்களாக இவர்களை யாரும் அறிவதில்லை. ஆனால் புலமைப்பரிசிலை வைத்து எத்தனை சமூக அநீதிகள் இடம்பெறுகின்றன தெரியுமா?

எழுபது மாணவர்கள் தோற்றிய பாடசாலையில் பத்துப் பேரே சித்தி அடைகின்றனர். 50 பேர் தோற்றிய பாடசாலையில் ஐந்து பேர் சித்தி அடைவதும் சுமார் 10% வீதமே சித்தி அடைந்தால், மற்றைய பிள்ளைகளின் மனநிலை என்னவாகும் என்று எண்ணுபவரைக் கண்டதில்லை.

இன்னும் போதாதென்று, வல்வை, ஊரிக்காட்டில், வருடாந்தம் நடைபெறுவது போன்று, ஊர்வலம், மேளதாளம், நிறைகுடம், முட்படை" அணிவகுப்பு இப்படி இளைய சமுதாயத்தை இடர்படுத்தும் நிகழ்வுகளை நாம் காண்கிறோம்.

இனி, பத்திரிகையைப் புரட்டினால் பெற்றோர் வாழ்த்து, பேரன், பேர்த்தி வாழ்த்து, உற்றார் வாழ்த்து, உறவினர் வாழ்த்து இப்படி பல நூறு வாழ்த்துக்கள். இவை எல்லாம் தேவையா?

நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன்- மூத்த மகனுக்கு அவர் "ஸ்பெசல் கிளாஸ்", ரியூசன் இப்படி எதுவுமே தெரிய வைக்கவில்லை, பாடசாலை படிப்பு மட்டும்தான். அந்தப் பையன் 172 புள்ளிகளோடு வீடு வந்தானாம். தாயோ காதிலை பிடித்து இழுத்து - ஏன்ரா 28 புள்ளிகளை விட்டுவிட்டு வந்தாய்? "பேய் பிசாசு" என்று திட்டியதை, நண்பர், தான் சமாதானப்படுத்தியதாகக் கூறினார். இதுவல்லவோ தாய்! இவரல்லவோ தந்தை! மற்றையவை பற்றி கூறிவிட்டு நான் அவஸ்தைப் பட விரும்பவில்லை.

புலமைப் பரிசில் பெறாத மாணவர்கள் சுமார் 75 வீதம் உள்ளனர். அவர்களது பெற்றோரைக் கூட்டி வைத்து, இந்தக் குடும்பங்களின் வறுமையைப் போக்கி, அவர்களுக்கும், தொப்பி, செருப்பு, சேட்டு, கால் சட்டை (சித்தி எய்தியவர்களுக்கு கொடுப்பது போல்) கொடுத்து ஊக்குவிக்க எண்ணுவோரைக் காணோமே!

எத்தனையோ பொது நிறுவனங்கள், உதவும் கரங்கள் இருந்தென்ன கண்டோம்? கழுதை மயிர் பிடுங்கித் தீர்த்தமாடிய கதைபோன்று- சித்தி எய்தியவர்களை - புகைப்படங்கள் போட்டுப் பாராட்டும் புத்திஜீவிகள் சிந்திப்பார்களாக!



பிரசண்டன்

# வேடிக்கை செய்தவரை தீண்டியது பாம்பு

கொழும்பு,செப்.23

மாரவில கடலோரத்தில் பாம்பாட்டி ஒருவரின் பாம்புடன் விளையாடிய நெதர்லாந்துப் பிரஜை அந்தப் பாம்பு தீண்டியதால் சிலாபம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த மாரியுன் ஸ்பேன் பாதிக்கப்பட்டார். கடந்த செவ்வாய்க்கிழமை பாம்புக் கடிக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். உல்லாசப் பயணமாக இலங்கைக்குக் கடந்த 18ஆம் திகதி நண்பர்களுடன் வந்துள்ள இவர், கடந்த செவ்வாய்க்கிழமை நண்பர்களுடன் மாரவில கடற்கரையோரமாக உலாவிக் கொண்டிருந்தவேளை அங்கு பாம்பாட்டி ஒருவர் பாம்பு ஆட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு அந்த இடத்திற்குச் சென்றுள்ளார்.

இவர் பாம்பாட்டியின் விஷப் பாம்பு ஒன்றுடன் விளையாட முற்பட்டபோது அந்தப் பாம்பு அவரைத் தீண்டியுள்ளது.

பாம்புக் கடிக்குள்ளான இவர் மாராவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து சிலாபம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# நாடு அழிவுப் பாதையில் செல்ல இரு பெரும் கட்சிகளே காரணம்

## விக்கிரமபாகு சாடல்



கொழும்பு,செப்.23

நாட்டை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் இந்த நாட்டை மிகப்பெரிய அழிவுக்குள் கொண்டு இருக்கின்றது. இந்த நிலைமைக்கு இரண்டு கட்சிகளும் பொறுப்பாகும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் தெஹிவளை - கல்கிசை மாநகர சபைக்குப் போட்டியிடும் முதல் வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, நேற்றுமுன்தினம் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுவைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

கொழும்பு நகரை அழகுபடுத்துதல் என்ற போர்வையில் ஏழை மக்களின் வாழ்விடங்கள், வியாபார முயற்சிகள் யாவும் நிர்மூலமாக்கப்படுகின்றன.

கொழும்பு மாநகரசபை என்பது நகர மக்களின் ஜனநாயகப் பாரம்பரியத்தின் அடையாளமாகக் காணப்படுகின்றது. ஆனால், இன்று அதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. நகரத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை நகர மக்களே தீர்மானிக்கவேண்டும். அரச உயர் அதிகாரிகள் அல்லர்.

போர்க் காலத்தில் அரசு கூறிய வாக்குறுதிகள் இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. மக்களின் சமூக நலன்கள் மீது எத்தகைய அக்கறையும் இன்றிய நிலை காணப்படுகின்றது.

மக்கள் ஆட்சியாளர் மீது வெறுப்புற்ற நிலையில் காணப்படுகின்றனர். மக்களின் உணர்வுகளை மதிக்கும் நிலையில் அரசு இல்லை. மக்களுக்காகப் போராடும் நிலையில் எதிர்க்கட்சியும் இல்லை.

இதிலிருந்து நாட்டையும், மக்களையும் காப்பாற்ற எம்மைத் தெரிவுசெய்யுங்கள் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் அபிவிருத்தி குறித்து பிரிட்டிஷ் பிரதித் தூதர் ஆராய்வு

மன்னார், செப்.23

இலங்கைக்கான பிரிட்டிஷ் பிரதி தூதர் ரொபி புலொக் மன்னாருக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகருக்கு வந்திருந்தார். மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.



மன்னார் மாவட்ட செயலகத்தில் பிரந்திய ஊடகவியலாளர்களை ரொபி புலொக் சந்தித்துப் பேசுகிறார்

மன்னார் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆகியோரைச் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் நிலவரங்கள் தொடர்பில் கேட்டறிந்தார். பின்னர் பி.ப 3.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது மாவட்டத்தின் மீள்குடியமர்வு அபிவிருத்தி மற்றும் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களின் நிலவரம் தொடர்பில் கேட்டறிந்தார். (எ-601)

# நீதிமன்ற ஊழியர்களுக்கு மிரட்டல்; ஒருவர் கைதாகிப் பிணையில்

மன்னார், செப்.23

மன்னார் நீதிமன்ற ஊழியர்களைத் தொலைபேசி மூலம் மிரட்டிய ஒருவரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர். குறித்த நபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது குறித்த நபரை 2 பேர் பிணையில் செல்ல மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி சிலாபத்தைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்துக்கு தொலைபேசி ஊடாக தொடர்பை ஏற்படுத்தி ஊழியர்களைக் கண்டபடி அச்சுறுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த ஊழியர்களினால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. குறித்த நபர் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்தினூடாக அதன் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு குறித்த நபரின் விவரத்தைப் பொலிஸார் கண்டறிந்தனர்.

இந்த நிலையில் சிலாபத்துக்குச் சென்ற மன்னார் பொலிஸார் குறித்த நபரை கைது செய்து நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி குறித்த நபரை 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 பேர் சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (எ-601)

# கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு 4 மாடியுடன் புதிய கட்டடம்

கிளிநொச்சி, செப்.23

கிளிநொச்சியில் மக்கள் வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி நகரில் சுமார் 89 மில்லியன் ரூபா செலவில் புதிய நான்குமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றுள்ளது.

கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மக்கள் வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமாகிய என். வசந்தகுமார் அடிக்கல்லினை நாட்டி வைத்தார். தொடர்ந்து கிளிநொச்சி நகரில் புதிதாக அமைக்கப்பட்ட மக்கள் வங்கியின் சேவை நிலையத்தினையும் கிளிநொச்சி நகரில் சுமார் 9 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியையும் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் நிறைவேற்று அதிகாரி என்.வசந்தகுமார், வன்னி பிராந்திய முகாமையாளர் றஞ்சித் கொடிதுவக்கு, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.சிறிநிவாசன், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி சாலிய சில்வா மற்றும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (எ-06)

# சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

வவுனியா, செப்.23

வவுனியா மாவட்ட சிறுவர்களின் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ். தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய சூழலில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளன. வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் காணாமற்போன சிறுவர்கள் தொடர்பாகவும் அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லயன்ஸ் கழகத்தினால் மரங்கள் விநியோகம்

நாவற்குழி, செப்.23

வவுனியா வடக்கு - நெடுங்கேணிப் பிரதேசத்தில் அச்சுவேலி லயன்ஸ் கழகத்தினால் மரங்கள் விநியோகிக்கப்படுள்ளன.

அந்தப் பகுதியில் சொந்தக் காணியுள்ள மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 100 தென்னம்பிள்ளைகளும், 400 பலா, சமண்டலை மரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

போரினாலும், மக்கள் தமது தேவைகளுக்காகவும் அழித்த மரங்களின் இழப்பை ஈடுசெய்யவே இவை வழங்கப்பட்டுள்ளன என்று லயன்ஸ் கழக நிர்வாகிகள் தெரிவித்தனர். (எ-121)

# வயல் காணிகளில் கட்டடம் எழுப்பத் தடை

கிளிநொச்சி, செப்.23

கிளிநொச்சி நகரினை அண்டிய பகுதிகளில் உள்ள நெல் வயற்காணிகள் மண்போட்டு நிரப்பப்பட்டுப் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், கட்டடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மாவட்டத்தின் வயல் நிலங்கள் அருகிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் பகிரங்க அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலில் கடந்த 2006 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 32ஆம் சரத்தின்படி நெற்காணிகளில் மண்ணைக் கொண்டு அல்லது வேறொரு பொருள்களைக் கொண்டு நிரப்புதல் அல்லது நிரப்புவதற்கு எத்தனித்தல், நெற்காணிகளில் ஏதேனும் கட்டுமானங்களை நிர்மாணித்தல் மற்றும் நெற்காணிகளில் இருந்து மண் எடுத்தல் போன்ற செயற்பாடுகள் வயற்காணிகளில் மேற்கொள்ளப்படுதல் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் அத்துமீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-06)

# தற்கொலைக்கு முயல்வோர் மன்னாரில் திடீர் அதிகரிப்பு

மன்னார், செப்.23

மன்னார் மாவட்டத்தில் தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்போரின் எண்ணிக்கை கடந்த வருடங்களை விட இந்த வருடம் அதிகரித்துக் காணப்படுவதாக மன்னார் வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:

2009ஆம், 2010ஆம் ஆண்டுகளைவிட இந்த வருடம் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை சுமார் 90 தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. அதிகளவானோர் தற்கொலைக்காக அலரி விதையினைப் பயன்படுத்துகின்றனர்.

தற்கொலை முயற்சியின்போது பலர் காப்பாற்றப்படுகின்றனர். சிலர் உயிரிழக்கின்றனர்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களில் அதிகமானோர் பெண்கள் எனவும் தெரிவித்தார்.

தற்கொலை தொடர்பில் அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் கிராமப்புறங்களில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

பாதிக் கப்பட்டவர்களுக்கு உள ரீதியாக விழிப்புணர்வுகளை வழங்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தில் தற்கொலை வீதத் தினைக் குறைத்துக்கொள்ள முடியும் என அசாத் மேலும் தெரிவித்தார். (எ-601)

# ஊழியர் நலன்புரிசங்கம் பிரிவுபசார நிகழ்வு

வவுனியா,செப்.23

வவுனியா பிரதேச செயலகத்தில் நீண்ட காலமாக பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உதவி அரச அதிபர் ஆ.சிறி, நிர்வாக அலுவலர் கு.கிருஸ்ணகுமார்,முகாமைத்துவ உதவியாளர் ந.சிவநேசன், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் பா.தனுசியா ஆகியோருக்கு பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரிச்சங்கம் பிரிவுபசார நிகழ்ச்சி ஒன்றினை எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மணடபத்தில் நடத்தவுள்ளது.

மேற் படி ஊழியர்கள் கடந்த காலங்களில் பிரதேச செயலகத்தில் ஆற்றிய பணிகளை கௌரவித்தும் அவர்களை பாராட்டியும் இடம் பெறவுள்ள இந்த நிகழ்விற்கு பிரதேச செயலாளர் அ.சிவபாதசுந்தரன் தலைமை தாங்கவுள்ளார். (எ)

# குடியிருப்புப் பகுதியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் நோய் பரவும் அபாயம்




கிளிநொச்சி, செப்.23

கிளிநொச்சி பாரதிபுரம், விநாயகர்புரம் போன்ற பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகள் குடியிருப்புக்களின் மத்தியிலும் பிரதான வீதியினை அண்மித்த பகுதிகளிலும் கொட்டப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இராணுவப் பயிற்சி முகாம் ஒன்று உள்ளது. அதிலிருந்து வெளியேற்றப்படும் ஏராளமான திண்மக் கழிவுப் பொருள்களே இங்கு கொட்டப்படுகின்றன. மிகவும் தாழ்வான மழைநீர் தேங்கிக் காணப்படக்கூடிய ஒரு காணியிலேயே இந்தக் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், அயலில் மக்கள் குடியிருக்க முடியாத நிலை காணப்படுவதாக முறையிடப்படுகின்றது தொற்று நோய் பரவக்கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-06)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### தொழில் நுட்பக் கல்லூரி இருந்த வளாகத்தில்

# 600 பயிலுநருக்குத் தொழிற்பயிற்சி வழங்கும் 3 மாடிக் கட்டடம் கிளிநொச்சியில் அமையும்

கொழும்பு, செப். 23

600 பேருக்குத் தொழிற் பயிற்சிகளை வழங்கத்தக்க, மூன்று மாடிக் கட்டடம் ஒன்று கிளிநொச்சித் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப் பட உள்ளது என்று தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபை உதயனுக்குத் தெரிவித்தது.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருந்த வளாகத்தில் இருந்த கட்டடத்தை உடைத்து அகற்றிவிட்டு அந்த இடத்தில் புதிய கட்டடம் அமைக்கப்பட உள்ளது. "ஜேர்மன் அரசின் ஆயிரக்கணக்கான யூரோ நிதி உதவியுடன் மூன்று மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகத்துக்குப் பின்புறமாக உள்ள காணியில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட உள்ளது" என்று அதிகார சபையின் நிர்வாகப் பணிப்பாளர் பி.கமகே தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்பட உள்ள கட்டடத்தில் 600 பயிலுநர்கள் கற்கைகளைத் தொடர முடியும் என்று அதிகார சபை கூறுகின்றது. மின்னியல், மின்சாதனவியல், இயந்திரவியல், பொறியியல் போன்ற துறைகளில் இங்கு பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அது கூறுகின்றது.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் ஜேர்மன் அரசும் நிதி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், இளைஞர் விவகார திறன் விருத்தி அமைச்சின் செயலாளர், தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளனர்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருந்த காணி தற்போது தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கமகே கூறுகின்றார். இளைஞர் விவகார, திறன் விருத்தி அமைச்சு கிளிநொச்சி அரச அதிபருக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அந்தக் காணி கையளிக்கப்பட்டது என்றார் கமகே.

"அதனை அடுத்தே அந்தக் காணியில் திருத்திப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த பழைய கட்டடத்தை இடிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன" என்றும் அவர் கூறினார். (உ)

# வடபகுதியின் முதுகெலும்பு விவசாயம் அதற்குப் புதிய தொழில் நுட்பம் அவசியம்

வவுனியா, செப்.23

வவுனியா வடக்கு விவசாயிகளின் விவசாய நடவடிக்கையை மேம்படுத்துவதற்குப் பார ஊர்தி வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீஸியா ஏ.புட்டோனிஸ் கலந்து கொண்டார்.

இதன் போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பற்றீஸியா வன்னியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வந்து வவுனியாவில் இருந்தபோது நான் இங்கு வந்திருந்தேன்.

அப்போது தேவைகள் அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் நாமும் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டதையிட்டு சந்தோசமடைகின்றேன். அரசுக்கு ஆதரவளித்து அகதிகளின் நிலைமைகளைச் சீர்செய்ய முயற்சி செய்திருந்தோம். கடந்த இரண்டு வருடங்களில் அரசின் வேலைத் திட்டத்தைப் பாராட்டுகின்றேன். எனினும் எல்லாவற்றிலும் திருப்திகரமாகவுள்ளது எனக் கூறமுடியாது.

பாதிப்படைந்த மக்களின் பொருளாதாரத்தை மீள்கட்டியெழுப்புதற்கு எமது வழங்க முடிந்தடையிட்டு சந்தோசமடைவதோடு வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காகவும், இடம்பெயர்தோருக்காகவும், இளைஞர்கள் பயிற்சிக்காகவும் இலங்கை அரசுக்குப் பல்வேறு தரத்திலும் உதவிகளைப் புரிந்து வருவதால் இலங்கை அரசின் எல்லாச் செயற்பாடுகளையும் அங்கீகரிப்பதாக அர்த்தம் அல்ல.

விவசாயம் என்பது இந்தப் பிரதேசத்தின் முதுகெலும்பு என்பதை நான் அறிவேன். எனவே விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தை புகுத்துவதன் ஊடாக வவுனியா மாவட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்- என்றார். (எ)

# கல்லாற்றில் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது

### கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.23

பல்வேறு தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டிய நிலையில் கல்லாறு பிரதேசம் உள்ளதாகக் கண்டாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் ஆஸ்திரேலிய மக்களின் நிதியுதவியுடன் யு.என். கபிற்றற் நிறுவனத்தினால் அமைக் கப்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டது மிகவும் சந்தோசமாகவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்டவுடன் இந்தப் பகுதியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இந்த நூறு வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. காலநிலையின் காரணமாக பெப்ரவரி மாதத்திலேயே காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அதன் பின்னரே கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வீடுகளாகப் பயனாளிகளுக்கு கையளிக்கப்படுவதால் இந்த நிறுவனத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

அத்துடன் எமது பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் இவர்கள் செய்து தர வேண்டும் என்று நான் மக்கள் சார்பாக வேண்டுகோள் ஒன்றினையும் விடுக்கின்றேன்.

அடுத்த வருடத்தில் இந்த நிறுவனத்தால் ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டில், இந்த மாவட்டத்துக்கு அதிக நிதியினை ஒதுக்கி, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் அனேகமாக எல்லோரும் தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-06)



பூநகரிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கலாசார விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன்,மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், பூநகரி பிரதேச செயலர் சு.வசந்தகுமார், வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். இந்த விழாவில் இடம்பெற்ற கூத்து.

# முசலிப் பிரதேசத்தில் 400 வீடுகளை புனரமைப்புச் செய்ய நிதி உதவி

மன்னார், செப்.23

மன்னார் மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தால் சேதமான வீடுகளை புனரமைப்பதற்கான நிதியை சிறைச்சாலைகள், மற்றும் புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது.

மன்னார் மவட்டத்தில், மன்னார், மாந்தை, மற்றும் முசலிப் பிரதேச செயலகப் பிரிவில் வாழும் 400 குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், சிறைச்சாலைகள், மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திசிறி கஜதீர பிரதம அதிதியாகவும், அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாருக், முத்தலிபாவா பாருக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. சுமார் 2 கோடி ரூபா நிதி இம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் முதற் கட்டமாக 50 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# திருவாசகம் முற்றோதல்

திருகோணமலை, செப்.23

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நான்காவது தடவையாக திருமுறை முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்குத் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் செயலாளர் க.திருநாவுக்கரசினால் ஆரும்பித்து வைக்கப்பட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஆலயத்தின் உப தலைவர்களில் ஒருவரும் இறைபணிச் செம்மலும் திருவாசக செம்மல் வை.செ. தேவராசாவினால் நிகழ்த்தப்படவுள்ளது. (எ)



கிளிநொச்சி மகாதேவா சைவ சிறார் இல்லத்தில் பிள்ளைகள் விழாவும் - சிறுவர் சங்க விழாவும் மகாதேவா பிரதம நிறைவேற்று அதிகாரி ரி.இரத்தினசிங்கம் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வடக்கு 'என்றிப்' நிறுவனத் திட்டப் பணிப்பாளர் கலாநிதி எந்திரி எஸ்.சிவகுமார், அவரது பாரியார் திருமதி ச.சிவகுமார், மகாதேவா நிறுவனத் தலைவர் தி.இராசநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (302)

# அரச ஊழியருக்கு வீடமைப்புத் திட்டம்

வவுனியா, செப்.23

மஹிந்த சிந்தனையின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள அரச ஊழியர்களுக்காக நிர்மாணத்துறைபொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சால் ஜனசெவண வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை சனிக்கிழமை வேப்பங்குளத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, றிசாத் பதியுதீன் மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பத்து லட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் திட்டங்களை அறிந்து கொள்ள உதவும் இணையம்

திட்டமிடல் என்பது எல்லோருக்கும் தங்கள் பணிகளை சிறப்பாகவும் செவ்வனே செய்து கொள்ளவும் உதவியாக அமைகிறது. நாம் சில கருமங்களைச் செய்ய எண்ணி பின்னாளில் அதை மறந்து தொலைத்து விடுவதுண்டு. அதற்காகவே திட்டமிட்ட செயற்பாடுகளைப் பதிந்து வைத்துக் கொண்டால் நல்லது.

உங்களின் எதிர்கால வேலைத் திட்டங்களை பதிவு செய்து கொள்ளவும். நீங்கள் பதிவு செய்த பணிகளைச் சிறப்பாக உரிய நேரத்தில் செய்து கொள்ளவும் வசதியளிக்கிறது COOLENDAR.COM என்ற தளம். இந்தத் தளத்தின் மூலம் இன்றைய நாள், எதிர்வரும் நாள், வாரம், மாதம் என எதிர்காலத் திட்டங்களை இலகுவாகவும் விரைவாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.


இந்தத் தளத்தின் வசதியைப்பெற உங்களின் கூகுள் கணக்கு மூலம் உள் நுழைந்து கொள்ள வேண்டும். இந்தத் தளத்தின் வசதிகள் அப்பிள் மற்றும் ANDROIDக்கானசெயலிகளாக உங்கள் அப்பிள் மற்றும் ANDROID சாதனங் களில் தரவிறக்கம் செய்யமுடியும். பின்வரும் இணையத்தளத்துக்குச் செல்வதன் மூலம் அவற்றைத் தரவிறக்கம் செய்யலாம். http://www.coolendar. com/

# கூகிள் பிளஸ்ஸிற்கு போட்டியாக Face book அறிமுகப்படுத்தியுள்ள smart

உலகில் பல்லாயிரக்கணக்கான அங்கத்தவர்களைக்கொண்ட பொழுதுபோக்கு இணையத்தளமான Face book அதன் இணையத்தளத்தில் புதிய வசதி யொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. smart friends list இன் மூலம் ஒவ்வொருவரும் தமது நண்பர்களை வெவ்வேறாக வகைப்படுத்தி தனிப்பட்ட நண்பர்கள் அட்டவணைகளை உருவாக்குவதற்கு முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் Face book இல் உள்ள தமது நூற்றுக்கணக்கான நண்பர்களில் தேவையானவரை வேண்டிய நேரத்தில் இலகுவாகத் தேடிக்கொள்ள முடியும் எனவும் புகைப்படங்கள் மற்றும் ஏனைய தனிப்பட்ட செய்திகளை வெவ்வேறாகப் பகிர்ந்துகொள்ள முடியுமெனவும் Face book எதிர்பார்க்கின்றது. இந்தப்புதிய வசதியின் மூலம் ஒருவர் தன் விருப்பத்திற்கேற்ப பிரத்தியேக நண்பர் அட்டவணைகளை உருவாக்கியபின் அந்தத்தெரிவுகளுக்கேற்ப வேறு நண்பர்களை இணைத்துக்கொள்வதற்கு Face book தானாகவே தெரிவுகளை வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் தமது உற்ற நண்பர்களை வேறாக வகைப்படுத்திக்கொள்வதற்கும் இதன்மூலம் முடியும். இந்த அட்டவணையில் ஆகக்கூடுதலாக 10 நண்பர்களை இணைத்துக் கொள்ளலாம். இந்தப்புதிய தகவலானது இதே வசதிகளைக்கொண்ட கூகிள் பிளஸ் இற்கு போட்டியாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

# பொய் சொல்லுபவர்களை காட்டிக் கொடுக்கும் புதிய கமரா



பொய் சொல்வோரை கண்டுபிடிப்பதற்கு, அதி நவீன தொழில்நுட்பத் துடன் கூடிய புதிய கமரா ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குறித்த கமராவின் ஒளிக்கற்றைகளை முகத்தில் ஒளிரச் செய்வதன் மூலம் நபர் ஒருவர் பொய் சொல்கின்றாரா அல்லது உண்மை சொல்கின்றாரா என்பதனைக் கண்டு பிடிக்க முடியும். அதி நவீன தேர்மல் இமாஜிங் தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி முறைமையின் மூலம் இந்தக் கமரா இயங்குகின்றது.

இந்த அதி நவீன கருவி பாதுகாப்புத் தரப்பினருக்கு மிகவும் உதவியாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கமராவின் மூலம் மூன்றில் இரண்டு வீதமான நபர்களின் முக பாவனையின் அடிப்படையில் உண்மை பேசுகின்றார்களா என்பதனைக் கண்டறிய முடியும் என்று பிரிட்டன் விஞ்ஞானி ஹசன் உகேய்ல் தெரிவித்துள்ளார். பிரட்போர்ட் மற்றும் அப்ரிஸ்ட்விச் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பொய் சொல்லுபவர்களை காட்டிக்கொடுக்கும் புதிய கருவி! பல ஆண்டு களாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் பின்னர் இந்த முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. கண் அசைவு, நகம் கடித்தல், உதடுகளைக் குவித்தல், மூக்கை சுருக்குதல், பலமாக மூச்சு விடல் உள்ளிட்ட பல்வேறு முக உணர்வு வெளிப் பாடுகளைக் கொண்டு நபர்கள் உண்மை பேசுகின்றார்களா அல்லது இல் லையா என்பதனை கண்டு கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர்

# தினம் ஒரு பொன்மொழியை அறிந்து கொள்வதற்கு

இணையத்தில் பொன்மொழிகளைத் தேடுவது பெரிய விடயமல்ல. பொன் மொழிகளுக்கென்றே பிரத்தியேக இணையத்தளங்கள் அதிகமானவை இருக்கின்றன.

சொல்லப்போனால் இணையத்தின் ஆரம்ப காலத்திலேயே பொன்மொழிகளுக்கான தளங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. பொன்மொழித் தோட்டம்(கோட் கார்டன்) போன்ற தளங்கள் பொன்மொழிகளை அழகாக வகைப்படுத்தித் தருகின்றன. பொன்மொழிகள் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளிக்கவல்லவை என்ற போதிலும் இந்த பொன்மொழித் தளங்களுக்கு தினமும் பயணம் செய்து புதிய பொன்மொழிகளை தினமும் படித்துப்பார்க்கும் வழக்கம் எத்தனை பேருக்கு இருக்கிறது சொல்லுங்கள்?

எப்போதாவது மேற்கோள்காட்ட பொன்மொழிகள் தேவைப்பட்டால் தான் இந்தத் தளங்களின் பக்கம் செல்வது உண்டு.

மற்றபடி தினம் ஒரு சொல் அறிவோம் என்பது போல தினம் ஒரு பொன்மொழி அறிவோம் என் றெல்லாம் யாரும் முயற்சிப்பதில்லை. ஆனாலும் கூட பாடசாலைச் சுவர்களிலோ அல்லது அலுவலகக் கரும்பலகைகளிலோ எழுதப்படும் பொன்மொழிகளை நாம் பார்த்து ரசித்து சிந்திக்காமல் இருப்பதில்லை. ரீடரஸ் டைஜஸ்ட் போன்ற பத்திரிகைகளில் முன் பக்கத்தில் இடம்பெறும் பொன் மொழிகளை முதலில் படித்து மகிழும் வாசகர்கள் எண்ணற்றவர் இருக்கின்றனர்.

இதுமட்டுமா, நண்பர்களின் வீடுகளில் அழகான காட்சி அமைப்போடு இருக்கும் படங்களில் இடம்பெற்றிருக்கும் பொன்மொழி வாசகங்களை எல்லோருமே படித்து ரசிக்கவே செய்கிறோம். எனினும் ஏன் பொன்மொழித் தோட்டம் போன்ற தளங்களுக்கு நாம் தினமும் சென்று தினம் ஒரு பொன்மொழியைப் படித்து ஊக்கம் பெறுவதில்லை? ஆனால் அழகான ஒரு தீர்வு இருக்கிறது. பொன் மொழி ரகசியம் (கோட் சீக்ரெட்) என்னும் இணையத்தளம் தான் அந்தத் தீர்வு.

இந்தத்தளத்திற்கு ஒருமுறை சென்றால் போதும் அதன் பிறகு தினந்தோறும் பொன்மொழிகள் உங் களைத் தேடிவரும். அதாவது மின்னஞ்சலில் தினம் ஒரு பொன்மொழி அனுப்பி வைக்கப்படும். அதற்கு உறுப்பினராக பதிவு செய்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சிந்தித்து ஊக்கம் பெறுங்கள் என்று அழைப்பு விடுக்கும் இந்தத்தளம், அதன் உறுப்பினர்களுக்கு நாள்தோறும் ஒரு பொன் மொழியை மின்னஞ்சலில் அனுப்பி வைக்கிறது.

எவ்வாறாயினும் தினமும் மின்னஞ்சல் பார்க்கும் பழக்கம் பெரும்பாலானோருக்கு இருக்கிறது. பலருக்கு காலை எழுந்ததுமே மின்னஞ்சல் முகத்தில் விழிக் கும் பழக்கமும் இருக்கிறது. தினம் ஒரு பொன் மொழியை அனுப்பி வைப்பதோடு இந்தத்தளம் அந்த பொன்மொழி தொடர்பான கேள்வி ஒன்றையும் அனுப்பி வைத்துச் சிந்திக்க வைக்கிறது. இந்தத் தளத்தில் இன்றே சேருங்கள், நாளை முதல் பொன்மொழி படித்து ஊக்கம் பெறுங்கள் http:/ /www.quotesecret.com/ என்னும் இணையத் தளத்துக்குச் செல்வதன் மூலம் பொன் மொழியை தெரிந்து கொள்ளலாம்.

# புதிதாக இணையதளம் வடிவமைப்பவர்களுக்கு Content கொடுக்கும் இணையம்

இணையத்தள வடிவமைப்பாளர்களுக்கும் புதிதாக இணையத்தளம் உருவாக்க விரும்புபவர்களுக்கும் மாதிரி Content கொடுத்து உதவுகிறது ஒரு தளம்.

இணையத்தள உருவாக்க வடிவமைப்புக்கு சமயத்தில் என்ன Content நம் தளத்தில் கொடுக்க வேண்டும் என்று தெரியாது, அப்படி Content இல்லாத நேரத்தில் வடிவமைப்புக்கு இலவசமாக மாதிரி Content கொடுக்க ஒரு தளம் உள்ளது.

இந்தத் தளத்திற்குச் சென்று எத்தனை Paragraphs வேண்டும் என்பதை எண்ணிக்கையில் கொடுத்து Give me bacon என்ற பொத் தானை சொடுக்கினால் போதும், அடுத்துவரும் திரையில் எமக்கு மாதிரி Content கொடுக்கும்.

இடத்தை நிரப்பிப் பார்ப்பதற்கு ஏதாவது வேண்டும் என்று தேடுபவர்களுக்கு ஒவ்வொரு முறை இந்தத்தளத்திற்குச் சென்று மாதிரி கேட்கும் போது ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு தகவலைக் கொடுக்கும்.

எமக்கு தேவையானது வரும் வரை நாம் பின்வரும் இணையத்தளத்தில் சென்று தேடலாம்.http://baconipsum.com/

# நடமாடும் கட்டணம் செலுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது Google

நாளுக்கு நாள் புதிய வசதிகளை அள்ளி வழங்கும் கூகுல் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படத்தியுள்ளது. Google wallet எனும் நடமாடும் கட்டணம் செலுத்தும் முறையொன்றை Google அறிமுகப்படுத்தியுள்ளது. வசந்த காலத்தில் அறிமுகப்படுத்தப்படவிருந்த இந்த சேவை முன்கூட்டியே அறிமுகமாகியுள்ளது. கைத்தொலைபேசியை பணம் செலுத்த பயன்படுத்தும் முறையே இதுவாகும்.

NFC எனப்படும் Near&Field Communication தொழில்நுட்பமே இதன்போது பயன்படுத்தப்படுகின்றது. Sprint Nexus S 4எ கைத்தொலைபேசியையும், City Master Cards அல்லது ஙடிண்ச் Cards களை உபயோகிப்போர் இந்த வசதியைப்பெறலாம்.

Google wallet , பல கடனட்டைகளை ஒன்றிணைத்தல், சிறந்த வாடிக்கையாளர் நலத்திட்டங்கள், விலைக்கழிவுகள் என பல சிறப்பம்சங் களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த சேவையைப்பெறுவதற்கு google wallet I google கணக்கொன்றுடன் இணைக்க வேண்டும். பின்னர் உங்கள் கடனட்டைகளை wallet கணக்குடன் இணைத்து பயன்படுத்தலாம். Discover மற்றும் American Express கடனட்டைகளையும் இந்த சேவையில் பயன்படுத்தலாமென google அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேலைக் குறைப்பால் பாதிக்கப்பட்டுள்ள

# தோட்டத் தொழிலாளர்களுக்கு உடன் நிவாரணம் வேண்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

நுவரெலியா,செப்.23

பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் வரட்சி காரணமாக பெரும்பாலான தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களின் வேலை நாள்களைக் குறைத்து வருகின்றன. வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசினால் உடனடியாக வரட்சிநிவாரணமோ அல்லது முற்பணமோ வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் வீ.இராதா கிருஷ்ணன்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தொழிலாளர்களின் இவ்வாறான இக்கட்டு நிலைமையை பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் கூட்டு ஒப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு கட்டாயம் வருடத்தில் 300 நாள்கள் வேலைவழங்கப்படவேண்டும்.

இதுதொடர்பில் உடனடியாகச் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தொழிலாளர்களுக்கு வரட்சி நிவாரணமோ அல்லது முற்பணமோ பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க உறுதியளித்துள்ளார். அதனை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும்- என்றார். (ச)

## அரச அலுவலருக்கு நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசி மருந்து

மட்டக்களப்பு,செப்.23

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு நெருப்பு காய்ச்சல் பரவுதைத் தடுப்பதற்காகத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தத் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். (ச)

## அநாதரவாக எறியப்பட்ட சிசு உயிருடன்மீட்பு


நுவரெலியா,செப்.23

அவிசாவளை நகரசபையின் பழைய பொதுக்கழிவறைக்கு அருகிலுள்ள இலுப்பைப் பற்றைக்குள் அநாதரவாகப் போடப்பட்டிருந்த சிசுவொன்று உயிருடன் மீட்கப்பட்டதாக அவிசாவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் அந்த வழியாக வந்த நகரசபை தொழிலாளிப் பெண்ணொருவர் பற்றைக்குள் இருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். உடனடியாக அங்கு வந்த பொலிஸார் பாக்கொன்றுக்குள் துணியில் சுற்றப்பட்டு சிப்மூடப்பட்ட நிலையில் இருந்த குழந்தையை மீட்டனர்.

உடனடியாக அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தை ஆரோக்கியமாக உள்ளது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் குழந்தையின் தாயைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் சீத்தாவக்கபுர பொலிஸ் தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி அஷோக குமாரவின் தலைமையில் பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (ச)



தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சுகாதார பரிசோதனைக்குழுவினர் ஏறாவூரில் பூச்சிகள், குடம்பிகள் உற்பத்தியாகக் கூடிய இடங்களைப் பரிசோதிக்கின்றனர்.

## அதிக விலையில் சிமெந்து விற்றவர் மீது நடவடிக்கை

மட்டக்களப்பு,செப்.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலையில் சிமெந்து விற்பனை செய்தவர்களின் மீது சட்ட நடடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில்நிர்ணயிக்கப்பட்ட விலையை விட சிமெந்து விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதேவேளை, விற்பனை செய்த கடைகளிலிருந்து ஒவ்வொரு பைக்கற் சிமெந்தும் மாதிரிக்காக கைப்பற்றப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பிரதேசங்களிலுள்ள 13 வர்த்த நிலையங்களில் இவ்வறு சிமெந்து கட்டுப்பாட்டு விலையைவிட விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்திகளைக் கொண்டுவரும் தேர்தலை வாக்குகள் மூலம் எடுத்துக் காட்ட வேண்டும்

### அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறுகிறார்

அம்பாறை, செப்.23

கடந்த பல வருடங்களாக கிடைக்கப் பெறாத அபிவிருத்திகளை கல்முனை மாநகருக்கு கொண்டுவந்து தரும் இந்த தேர்தலை மக்கள் தமது வாக்குகள் மூலம் எடுத்துக்காட்ட வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர் றிசாத்பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது சுனாமி வீடமைப்பு பயனாளிகளினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்று சாய்ந்தமருது பொலிவேரியன் கூட்டுறவு மண்டபக் கட்டடத்தில் இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

எமது மக்களது தேவைகள் அதிகமாக இருக்கின்றது. அதனை ஆட்சியாளர்களிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எமது பிரதிநிதிகள் அரசுடன் இருக்க வேண்டும். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது. கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதனைத்தான் செய்தது. தீர்மானிக்கும் சக்தியாக இந்தக் கட்சியினை தலைவர் அஷ்ரப் அவர்கள் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அதன் பிறகு தலைமைக்கு வந்தவர்கள் மக்களதும் கட்சியினதும் நலனுக்கும் அப்பால் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அதனை பயன்படுத்தினர். அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அந்தக் கட்சிகளை நம்பி வாழ்ந்த மக்களே.

இன்று இதே நிலைதான் கல்முனை நகருக்கும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தீர்க்கமான நேரத்தில் புத்திசாதுரியமான முடிவுகளை எடுக்க வேண்டும். தனித்து நின்று எம்மால் எதனையும் சாதிக்க முடியாது. நாம் ஒன்றுபட்டு அதனை வெற்றிக் கொள்ள வேண்டும் -என்றார். (ச)

## மேல்கொத்மலையில் ஜனவரி முதல் மின் உற்பத்தி

கொத்மலை, செப். 23

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மிக நீண்ட நீர்ச்சுரங்கப் பாதையைக் கொண்ட மேல் கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையம் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து இயங்கத் தொடங்கும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய மின்திட்டத்திற்கு 150 மெகாவோட் மின்சக்தியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நிர்மாணிக்கப்படும் இந்தத் திட்டத்தில் 89 சதவீத பணிகள் தற்சமயம் பூர்த்தியாகியுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்

### சேருவில பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

மூதூர், செப்.23

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

இவ்வாறு சேருவில பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் க்.சிவலோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பிரதேச சபையின் இரண்டாவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சேருவில பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தர்காநகர், அரிய மான்கேணி, லிங்கபுரம், எல்.பி. 111, சிவபுரம் ஆகிய கிராமங்கள் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரின் அழிவு களைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வந்த பகுதிகளாகும்.

எனவே, இந்தக் கிராமங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பு இந்தச் சபைக்கு உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்திலுள்ள சேமபுரம், மகாவலிகங்கை கிராமங்களுக்கு தலா 25 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

எனவே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் கிராமங்களுக்கும் நிரந்தர வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்த இந்தச் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச)

## தமிழ் மாணவர்களை ஏற்றாது புறக்கணிக்கும் அரச பஸ்கள்

### மாகாண சபை உறுப்பினர் ஆளுநருக்கு மகஜர்

பண்டாரவளை, செப். 23

பண்டாரவளையிலிருந்து வெள்ளவாய நகரை நோக்கிச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எனவே, இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து ஊவா மாகாணசபை உறுப்பினர் அ.அரவிந்குமார் ஆளுநர் சி.நந்தா மெத்தியூஸுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் பண்டாரவளை நகரிலிருந்து புறப்பட்டு பேரகலை சந்தி மற்றும் கொஸ்லாந்தை ஊடாக வெள்ளவாய நகரைச் சென்றடைவது வழக்கம். அவ்வாறு சேவையில் ஈடுபடும் பஸ்களில் துரதிஷ்டவசமாக தமிழ் மாணவர்கள் ஏற்றப்படுவதில்லை. பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பெருந்தோட்டத் தொழி லாளர்களின் பிள்ளைகளாகவே இருக்கின்றனர். பல்வேறு சமூக, பொருளாதார சுமைகளுக்கு மத்தியில் இவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். அவ்வாறான நிலையில் இவ்வாறான கெடுபிடிகள் அவர்களின் கற்கை நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கின்றன.

அரச சேவைகள் சகலருக்கும் எவ்வித பாரபட்சமின்றி கிடைக்கவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும். இதுவே நியாயமுமாகும். ஆனால், ஒரு சமூகத்தைச் சார்ந்த வர்கள் மாத்திரம் புறக்கணிக்கப்படும் போது, எவ்வாறு இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். இது வன்மையாகக் கண்டிக்கப் படவேண்டிய ஒரு விடயமாகும். எனவே, தாங்கள் இந்த மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் பண்டாரவளை டிப்போவைச் சார்ந்த அதிகாரிகளுக்கு இது போன்ற இனவாத போக்கைக் கைவிட்டுச் சகலருக்கும் சமமான சேவைகளை வழங்குமாறும் பணிப்புரைகளை விடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். எதையும் சாதிக்கும் வல்லமை அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் கூடும். பயணங்களால் செலவுகள் உண்டாகலாம்.

**இடபம்:**
வேலை நெருக்கடி அதிகரிக்கலாம். அரசு தொடர்பான காரியங்களில், அலைக்கழிப்புகளைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். குடும்பப் பெரியவர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம்.வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**மிதுனம்:**
புகழ், பாராட்டு மழையில் நனையும் நாள். குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். காலை நேரத்தில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். அயலார் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். திடீர் பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று, நொடிப் பொழுதில் முடியும்.

**கடகம்:**
வீண் பிடிவாதங்களால் சில வகையில் பண இழப்புகளைச் சந்திக்கலாம். நண்பர்கள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. உடன் பணிபுரிபவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். சிலர் உங்களிடம் கடனுதவி கேட்கலாம். சிலர் உதவி செய்ய முன்வந்தும், அதை வேண்டாம் என, மறுத்து விடுவீர்கள்.

**சிங்கம்:**
லட்சியங்களை நிறைவேற்ற முற்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கலாம். கடந்த காலத்தில் ஒருவர் செய்த உதவியை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**கன்னி:**
மனதிற்கு உத்வேகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட நேரத்தில் நடக்கலாம். கணவன், மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தொல்லையாக இருந்த சிலரே தோள் கொடுக்க முன்வருவர். கடன் விவகாரங்களை மாற்றி அமைக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவை ஒன்று நிறைவேறும்.

**துலாம்:**
குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். நண்பர்கள் வழியில், எதிர்பார்த்த உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். அற்பத்தனமான விடயங்களில் நாட்டம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும். சிலரிடம் உங்களின் பழம் பெருமையை பேசி மகிழ்வீர்கள். உறவினர் ஒருவர் தங்களுக்கு வேண்டியவர்களுக்காக, உங்களிடம் உதவி கேட்கலாம்.

**விருச்சிகம்:**
ஆரம்பித்த சில வேலைகளை எளிதில் முடிக்க முடியாமல், தடை தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். சகோதரர்கள் வழியில் அன்புத் தொல்லைகளை எதிர்கொள்ளலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகள் ஏற்படும். குழப்பங்களுக்கு ஆள்படலாம்.

**தனுசு:**
பெண்கள் வழியில், மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி நட்பு அதிகரிக்கும். உறவினர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்கலாம். பெற்றோர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும். மலைபோல் வந்த பிரச்னை ஒன்று, பனி போல விலகி விடும் நாள்.

**மகரம்:**
தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும் நாள். வெளியூர்களில் இருந்து வருவோர் நல்ல செய்திகளைச் சொல்லலாம். சிலரின் அன்பான கட்டளைகளுக்குக் கட்டுப்பட நேரிடலாம். பிறருக்காக பிணை கொடுத்து பெருமை அடைவீர்கள். பார்க்கச் சென்ற நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம். தம்பதியர் பாசம் மேலிடும்.

**கும்பம்:**
நீண்ட நாள் ஆசை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள முற்படுவீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். உறவினர்களுடன் மனஸ்தாபம் வராதிருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் செய்த வேலை ஒன்றை நீங்கள் செய்ததாக காட்டிக் கொள்வீர்கள். வழக்கத்திற்கு மாறாக, கூடுதல் நேரம் தூங்கலாம்.

**மீனம்:**
வளர்ச்சிப் பாதையை நோக்கி, அடியெடுத்து வைக்கும் நாள். மனைவி வழியில் உருவான மனக்கசப்புகள் மாறும். எதிர்ப்புகள் மறைந்து ஏற்றம் பெறுவீர்கள். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம். பண விடயங்களில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள்.

# வேலை[...] பட்டதாரிகள் சமூகத்[...] சுமை[...]

**மி**கக் கடுமையான உயர்தரப்பரீட்சை.....
வெட்டுப்புள்ளி - Z ஸ்கோர் ஊடான தெரிவு...
நான்கு வருட பாட நெறி....
பல லட்சம் பேர் சொந்தச் செலவில் கல்வி...
காலம் தாழ்த்திய பட்டமளிப்பு, பின் பெற்ற பட்டம்...
இதன் பின்னர் 2 முதல் 7 வருடங்கள் வேலையற்ற பட்டதாரிகள் பட்டியலில் (List) வெள்ளைத் துணி வேலைக்காக காத்திருத்தல்.....

இது இன்றைய வேலையற்ற பட்டதாரிகளின் மிகைச் சுமையான- பேரிடரை ஏற்படுத்துகின்ற- பெரிய பிரச்சினையாக நாடு முழுவதும் விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

தற்போது நாடுதழுவிய ரீதியில் 79 ஆயிரம் பேர் வேலையற்ற பட்டதாரிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எப்போது வேலை கிடைக்கும் என்று தெரியாது. அவர்களில் பலரோ அரச வேலை தவிர ஏனைய வேலைகளும் தமக்குத் தகுதியானவையல்ல என்று நினைக்கின்றார்கள்.

மாகாண ரீதியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. அதிலும் 100 முதல் 900 இற்கும் உட்பட்டவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஏனைய பட்டதாரிகள் புறம் தள்ளப்படுகின்றனர்.

நான்கு வருடங்களாக 28 இற்கும் மேற்பட்ட பாடப் பரப்புகளில் கற்று சித்தியடைந்தவர்களுக்கு 1ST Class, 2nd Class Upper, 2nd CLASS Lower, Pass என்ற நிலைகளில் பட்டம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு பரீட்சை எழுதி, பல கலை கலாசார மற்றும் விளையாட்டுக்களில் திறமை பெற்று வெளியே வந்த பட்டதாரிகளுக்கு பரீட்சையின்றி வேலை வழங்குவதே அவர்களைக் கௌரவப்படுத்துவதாக இருக்கும் என்கிறார் வேலையற்ற பட்டதாரிகள் சங்க முன்னாள் தலைவரொருவர்

ஆனால், இன்று அரச நியமனங்களுக்காக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பட்டதாரிகளுக்கு பரீட்சைகளை நடத்துகிறது. 1999 இல் நாடு முழுவதும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கான பரீட்சைத் திட்டத்தை முதன் முதலில் அரசு முன்வைத்தது.

அப்போது இருந்த யாழ்- வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கடுமையாகக் கொடுத்த எதிர்ப்பலையைத் தொடர்ந்து அரசு அந்தத் திட்டத்தை உடன் கைவிட்டதுடன் முதலில் ஆண்டு மூப்பில் இருந்த பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை அள்ளி வழங்கியது.

பின்னர் மீதமாக இருந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு 20 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்தை தேசிய வரவு செலவு திட்டப்பணிப்பாளர் நாயகமாக இருந்த எஸ்.பி.திவாரத்தினா அறிவித்து வேலை வழங்கினார்.

பட்டத்தின் உயர் தகைமை, ஆங்கிலம், பட்டப்பின் படிப்பு போன்ற தகைமை உடையவர்களுக்கும் ஏனைய பட்டதாரிகளுக்குமாக முழுமையாகப் பரீட்சையின்றி, கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை ஊடாக அனைவருக்கும் வேலை வழங்கப்பட்டது.

இதேபோல் 2005இலும் பட்டதாரிகள் அனைவருக்கும் அனுமதிப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சை நடத்தி 40 ஆயிரம் பட்டதாரிகளின் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

இன்று நாடு முழுவதும் பட்டதாரிகளின் வெற்றிடங்கள் ஒவ்வொரு அரச, கூட்டுத்தாபன மற்றும் வங்கிகளிலும், ஏனைய பொது துறைகளிலும் உள்ளதாக திணைக்களத் தலைவர்கள் சுட்டிகாட்டியுள்ளனர். ஆனால் வடக்கில் 6,500 பட்டதாரிகள் இன்று வேலையற்ற பட்டதாரிகள் பட்டியலில் உள்ளனர் சகல ஊடகங்களிலும் இந்தப் பிரச்சினை விலாவாரியாக எடுத்துக் கூறப்படுகின்றது.


இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரி பரீட்சை வைத்து வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையை நடுத் தெருவில் விட்டுள்ளது.

272 வெற்றிடங்களுக்காக 377 பேரை பரீட்சையூடாகத் தெரிவுசெய்து பட்டியல் வழங்கியுள்ளது வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வட பகுதிக்கான 5 மாவட்டங்களிலும் -

5,510 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பரீட்சை என்ற மாயைக்குள் சிக்கி வேலையை இழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் மேற்படி பரீட்சையைப் புறக்கணித்து இருந்தால் - நல்ல பதவிகளில் ஒருமித்து வேலை பெறக்கூடிய ஒரு நிலையை எட்டியிருக்கலாம். ஆனால் எதிர்ப்பதற்கோ, போராடுவதற்கோ இவர்கள் யாருக்கும் திறனி இருக்கவில்லை.

இன்று 10 பேருக்கு பதவி நிலைத் தரத்தில் பட்டதாரி நியமனமும், 262 பேருக்கு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (Programme Assitant) நியமனமும் வழங்க மாகாண பொது நிர்வாக செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலைக்காக வேலையற்ற பட்டதாரிகள் பரீட்சை எழுதியது தவறு - ஆண்டு மூப்பும் செயலிழந்துள்ளது, ஒருமித்த தீர்மானம் எவரிடமுமில்லை. இதுவே பெரிய பிரச்சினை



இன்னமும் வழங்கியதாக அறிவிக்கப்படவில்லை.

இன்னும் சில மாதங்களில் நாடு தழுவிய ரீதியில் 12 பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டதாரிகள் வெளியேறவுள்ளனர்.

இவர்களும் வேலையற்றோர் பட்டியலில் (Unemployent List) சேர்க்கப்படவுள்ளனர்.

எனவே மேலும் பெரிய மிகைச் சுமையான பட்டியல் நீளுகின்றது.

2004 இல் பட்டம் பெற்ற பட்டதாரிகள் வயது மூப்படைந்த போதும் வேலையற்றவர்களாகவே தொடர்கின்றனர். தங்களது நிலை குறித்து கண்ணீரும் - கம்பலையுமாக அவர்கள் அலைகின்றனர்.

ஆண்கள் வேலையற்று, திருமண வயது எல்லை அதிகரித்து, சமூகத்தில் புறந்தள்ளப்பட்டு, நாதியற்று இருக்கும் நிலை பரிதாபத்துக்குரியது. பெண்களின் நிலையோ

**முருகு- கணபதி**


சொல்லவே வேண்டியதில்லை. இவர்களுக்கு உதவ இன்று யாருமேயில்லை. இன்றைய பல்கலைக் கழக நிர்வாகமும் இல்லை, மாகாண அரசின் உயரதிகாரிகளும் இல்லை, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுமில்லையென பட்டதாரிகள் ஆதங்கப்படுகின்றனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு இளைஞர் திறன் அபிவிருத்தி அமைச்சு தொழில் திறன் பயிற்சிகளை மாவட்ட ரீதியாக வழங்கினால் அவர் களது பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யற்ற பிரச்சினை த்தின் மை

1999,2005 இல் இடம் பெற்றது போன்று- ஒரு நிகழ்ச்சித் திட்டம் வரையறுத்து-நேர்முகம் மூலம் வேலை வழங்கப்பட வேண்டும்.



தீரும் என புது கதை தற்போது சொல்லப்படுகிறது.

இது வேலையற்ற பட்டதாரிகளை மேலும் சிக்கலுக்குள் தள்ளும் விடயமாக மாறும்.

தென்னிலங்கை வேலையற்ற பட்டதாரிகளை எமது வடபகுதி வேலையற்ற பட்டதாரிகளுடன் ஒப்பிட முடியாது.

வடபகுதியில் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கக் கூடிய வகையில் எந்தப் பெரிய தனியார் தொழில் நிறுவனங்களும் இல்லை, தொழிற்சாலைகளும் இல்லை. அவ்வாறு இருந்த போதிலும் - தென்னிலங்கையை சேர்ந்தவர்களை வடபகுதியில் நியமிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசின் 15,000 பேருக்கான வேலை வாய்ப்பு மூலம் ...ள்ள வேலையற்றோர் பிரச்சினை விரைவில் தீரும் என எதிர்பார்த்தோம். ஆனால் தொடர்ந்து அதி உந்தலாக (Big-Push) இந்தப் பிரச்சினை அதிகரித்துச் செல்கிறது. பரீட்சையின்றி - பட்டதாரிகள் பாதிப்பின்றி ஆண்டு மூப்பின் பிரகாரம் - தகைமைகளுக்கு ஏற்ப - மேலதிக கல்விக்கு ஏற்ப - தகுதிக்குஏற்ப நியமனங்கள் வழங்கி உதவினால் கசிந்து செல்லும் (Trickle down) பிரச்சினை சாதாரண விடயமாக மாறும்.

இல்லாவிடில் தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் பிரச்சினையான இது சமூகப் பிரச்சினையாக விரைவில் மாறும். ★

# பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து பழைய பூங்கா

யாழ்ப்பாணக் கச்சேரியும் அரச அதிபரின் இல்லமும் முன்னர் அமைந்தி ருந்த பழைய பூங்காவை ஆக்கிரமிப்பதற்கு அரச திணைக்களங்கள் போட்டி போடுவதாகப் பத்திரிகையில் வெளியான செய்தியைப் படித்ததும் அதிர்ச்சி யடைந்தேன்.

பழைய பூங்காவினுள் நிற்கும் மரங்களைத் தறிப்பதற்கு இவர்கள் யார்? முன்னாள் அரச அதிபர் உட்பட கட்டப்பொம்மன் பாணியில் நாற்று நட்டாயா, நீரிறைத்தாயா எப்படி நீ மரத்தைத் தறிக்கலாம் என்று வசனம் பேச வேண்டும் போலிருக்கிறது.

பழைய பூங்காவினுள் நிற்கும் மரங்கள் எங்கோ ஆயிரம் மைல்களுக்கப்பால் பிறந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாண அரச அதிபர் களாகப் பதவி வகித்தடைக், துவைனம் போன்றவர்களால் நட்டு, உருவாக்கி, பராமரிக்கப்பட்டு யாழ்ப்பாண மக்களுக்கென அன்பளிப்புச் செய்யப்பட் டவை. ஒரு அறுகம்புல்லைக் கூட நடாதவர்கள் எப்படி யாரோ நாட்டிய மரங்களைத் தறிப்பார்கள்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தும் ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த ஆங்கிலேயர்களுக்கு யாழ்ப்பாண மண்ணின் மீது இருந்த பற்று இவர்களுக்கு இல்லாமலிருப்பது வருத்தத்துக்குரிய விடயம்.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் காட்டு மரங்களைத் தறிப்பதாயி ருந்தால் கூட தறிக்கப் போகும் மரங்களின் எண்ணிக்கைக் கேற்ப விதைகளையோ, தடிகளையோ நட்ட பின்னரே காட்டில் மரம் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்ற நடைமுறை அமுலில் இருந்தது. இலங்கை சுதந்திர மடைந்த பின்னர் இந்த நடைமுறை நீக்கப்பட்டு விட்டது போலிருக்கிறது.

பழைய பூங்காவினுள் காணப்படும் மரங்கள் யாழ்ப்பாணத்தின் முதலா வது அரச அதிபராகப் பதவி வகித்த பேர் சிவல் அக்லண்ட் டைக்கினால் நடப்பட்டவை.

இந்த மரங்களைப் பற்றி யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் எஸ். ஜோன் என்பவர் குறிப்பிட்டுள்ளதை அப்படியே இங்கே தருகிறேன்.

''கச்சேரிக்கும் குடியிருந்த காணியில் சிறந்த விததாவரங்களை நட்டு அவற்றைப் பண்படுத்திப் பாதுகாக்கவும் நீர் பாய்ச்சவும் வேலையாள்களை நியமித்து இரு விழிகளைப் போலவைகளைப் பேணி அவைகளிலிருந்து பரந்த வச்சித வாசனையை மோந்து அகிர்த கனிகளையருந்தி வந்தார்.

இந்தத் தோட்டத்தைப் பார்க்கப் பிரியமுடையவர்களுமுத்தரவுட நுட்புகுந்து பார்த்து விருப்பப்படியெவ்வளவு கனிதனையுந் தின்று பார்க்கலாம்''.

முப்பத்தையாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்தவர்கள் சம்பளம் கொடுத்து நட்டு, உண்டாக்கி, நீர்பாய்ச்சிப் பராமரித்த மரங்களைத் தறிப்ப தற்கு ஒரு அறுகம்புல்லைக் கூட நடாதவர்களுக்கு என்ன அருகதை இருக் கிறது.

பழைய பூங்கா யாழ்ப்பாண அரச அதிபருக்கென (யார் பதவிக்கு வரு கிறார்களோ) யாழ்ப்பாணத்தின் முதலாவது அரச அதிபர் டைக்கினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

**ந. பரமேஸ்வரன்**

பொது நிர்வாக உள்நாட் டலுவல்கள் பிரதிய மைச்சர் டிலான் பெரேரா கடந்த ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்ற அரச அதிபர்களின் மாநாட்டில் பழைய பூங்காவைப் பராமரிக்க வேண்டியது அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் கடமையெனவும் அதை அவர் செய்வாரென நம்புவதாகவும் கூறியுள்ளார்.

அரச அதிபர் பழைய பூங்காவைப் பாதுகாப்பாரென நாமும் நம்புவோம். ★

# குழந்தையின் குருதிக்கொடை



ஒரு பெண் குழந்தை; எமிலி ஹாக்ஸ் என்று பெயர். இந்த உலகத்திலேயே மிகக் குறைந்த வயதில் இரத்ததானம் செய்த குழந்தை அதுதானாம். அப்படியென்றால் ரத்ததானம் செய்த போது குழந்தைக்கு வயது எத்தனையாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? ஒரு நாள் கூட ஆகவில்லை. அது பிறந்த சில நிமிடங்களிலேயே இரத்ததானம் செய்ததாம். அந்த இரத்தம் இன்னொரு குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறது.

இந்த உலகத்துக்கு வந்ததும் அந்தக் குழந்தை செய்த முதற்காரியம் இரத்ததானம்.

பிரிட்டனில் உள்ள பிரிஸ்டல் நகரில் சவுத்மீட் என்னும் வைத்தியசாலையில் மாண்டி என்கின்ற இருபத்தேழு வயதுப் பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதுதான் இந்த எமிலி.

குழந்தை பிறந்ததும் அதைத் தாயிடமிருந்து பிரிப்பதற்காக தொப்புள் கொடியை நீக்குவார்கள். அதில் இருக்கின்ற இரத்தத்தைத்தான் எடுத்துச் சேகரித்தார்கள். இது வலியில்லாத மிகவும் சுலபமான குருதி சேகரிப்பு முறை .அதில் உள்ள இரத்தத்தை எடுப்பதனால் குழந்தைக்கு எந்தக் கெடுதலும் இல்லை.

குழந்தையின் குருதிக்கு சிறந்த சில சிறப்பான குணங்கள் உண்டு. இரத்தம் சம்பந்தமான நோய்களை எதிர்த்துப் போராடக் கூடிய வலிமை அதற்கு உண்டு. ரத்தப் புற்றுநோய், இரத்தம் தொடர்பான ஏனைய நோய்கள் இவைகளுக்கு பச்சிளம் குழந்தைகளின் ரத்தத்தை செலுத்தினால் விரைவில் குணமாகிவிடுமாம்.

இன்றைக்கு உலகத்தில் ஒருசில மருத்துவமனைகளில் இந்த மாதிரியாக பரிசோதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. தொப்புள் கொடி இரத்த மாற்று சிகிச்கை அப்படியென்று இதற்குப் பேர் வைத்திருக்கிறார்கள்.

இந்தப் புரட்சிகரமான மருத்துவ சிகிச்சை மூலமாக நிறையக் குழந்தைகள் இப்போது காப்பாற்றப்படுகின்றன. தொப்புள் கொடியிலிருந்து எடுக்கப்பட்ட குருதியை நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு ஏற்றுவதுதான் இப்போதைய சிகிச்சை முறை.

இந்தத் தொப்புள் கொடி இரத்தம் எட்டு வயதுக்கும் குறைவாக உள்ள குழந்தைகளின் உடம்பிலே செலுத்தப்படும் போது சாதாரண இரத்தமாகவே மாறிவிடுகிறது என்கிறார்கள் அந்த மருத்துவமனையில் உள்ள வைத்தியர்கள் பச்சிளம் குழந்தையின் ரத்தம் சுத்தமானது. கருப்பையிலே எந்த நோய்த் தாக்குதலுமின்றிப் பாதுகாப்பாக வந்திருக்கும். அதனால் அது நோயாளிகளின் உடம்பில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

நம்பிக்கையில்லாத பல்வேறு சிகிச்சை முறைகளுக்குப் பதிலாக முதல் முறையாக இரத்தப்புற்று நோய்க்கு சாத்தியமான ஒரு நல்லசிகிச்சை முறை கிடைத்திருக்கிறது.

எமிலி என்கின்ற அந்தக்குழந்தை பிறந்த உடனேயே அந்தக் குழந்தையுடைய தாயிடம் இந்த யோசனையை வைத்தியர்கள் சொன்னார்கள். உடனே அந்தத் தாய் சம்மதம் கொடுத்தார்.

என் குழந்தை தானம் செய்கின்ற குருதியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ற இன்னொரு குழந்தை காப்பாற்றப்படும் என்ற நிலையே எனக்குப் பரவசம் தந்தது என்றாள் அந்தப் பெண்.

இது பரவசமூட்டக் கூடிய ஒரு ரத்ததானம் தான். இந்த உலகத்துக்கு வந்து சேர்ந்தவுடனேயே முதலில் ஒரு நல்ல காரியம் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.


இந்தக் காலத்தில் இரத்ததானம் செய்ய வைக்க எவ்வளவு பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது.

ஒருத்தர் இரத்ததானம் செய்வதற்காகப் பயந்து கொண்டிருந்தார். ஒரு நாள் துணிந்து போய் வைத்தியர் அறைக்குள் நுழைந்தார். சிறிது நேரத்துக்குப் பின் வெளியே வந்தான்.

''ஏன் வெளியே வந்துவிட்டீர்கள்; இரத்ததானம் செய்யவில்லையா?'' என்றான் கேட்டார்கள். ''இல்லை....செய்யவில்லை'' என்றான். ''ஏன்'' என்றார்கள். ''இரத்தத்தைக் கண்டால் மயக்கம் வந்து விடும்'' என்றான். பயந்துகொண்டே. ''அப்படியென்றால் ஏன் இங்கே வந்தீர்கள்?'' என்றனர். மயக்கம் எனக்கு இல்லை, இரத்தத்தைக் கண்டால் வைத்தியருக்கு மயக்கம் வந்துவிடுமாம். அதுதான் வெளியில் வந்து விட்டேன், என்றார்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தும்பளை யோக சாந்தி நிலையத்தில் யோகப் பயிற்சி பெற்றமைக்காக வைத்திய கலாநிதி சொனோஜா வழங்கிய அன்பளிப்புப் பணத்தில் பருத்தித்துறை வராத்துப்பளையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஒரு குடும்பத்துக்கு பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத் தரணி சபா ரவீந்திரன் தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்கிறார். பிரான்ஸ் வைத்தியக் குழுவைச் சேர்ந்த டேவிட் ஹேயிஸ், யோக ஆசிரியர் தே.தேவராஜேந்திரன், பருத்தித்துறை நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் தி.சந்திரசேகரன் ஆகியோரும் அருகில் உள்ளனர். (ம-236)

# மனிதநேயமுள்ள சமுதாயத்தை உருவாக்க கல்வியைச் சீர்ப்படுத்த வேண்டியது அவசியம்

## மருத்துவர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.23

விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி தற்போதைய கால கட்டத்தில் மனித நேய மற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு செல்கின்றது. இதனைச் சீர்படுத்த கல்வியை முன்னேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் மருத்துவர் எஸ்.கணேச மூர்த்தி.

ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர்.பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் எனும் நூல் அறிமுக விழாவில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

தற்போது பாடசாலைகளில் இடம்பெறும் நடைமுறைக் கல்வியானது பரீட்சையில் சித்தியடைந்தால் போதும், சான்றிதழ் பெற்றால் போதும் எனும் நிலைமைக்கு மாணவர்களைக் கொண்டு வந்து விட்டது.

இதனால் மனித நேயம் பண்பாடு பற்றி அவர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும் குறைந்து விட்டன.

அத்துடன் சமூக விழுமியங்களை உதாசீனம் செய்யும் அளவுக்கு சமுதாயம் மாறிக் கொண்டிருக்கிறது. இதனால் மனிதநேயம் அற்றுப்போய் விட்டது.

இந்தச் சூழலை மாற்றவேண்டுமானால் மாணவர்களுக்கு கல்வியுடன் சேர்த்து மனித நேயத்தையும் புகட்ட முன்வரவேண்டும். இத்தகைய செயற்பாடுகள் யாவும் ஆசிரியர்களால்தான் முடியும். தொழில்நுட்ப வளர்ச்சிகள் எந்தளவுக்கு முன்னேறிக் கொண்டு செல்கின்றதோ அந்தளவுக்கு சிறந்த பழக்க வழக்கங்களைக் கொண்ட சமுதாயத்தையும், பண்பாடு களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய சமுதாயத்தையும் உருவாக்க வேண்டியதும் அவசியமாகும் என்றார்.

(ம-313)

# மாணவரை நல்வழிப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது

## கலாநிதி செ.திருநாவுக்கரசு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.23

மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது. ஆசிரியர்கள் வாழ்வியல் சார்ந்த நற்பண்புகளை மாணவர் கள் மத்தியில் எடுத்துக் கூறவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு.

ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர் பொன். இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் எனும் நூலின் அறிமுகவிழா கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மாமன்றத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

வாழ்க்கையின் அடிப்படையான வாழ்வியல் முறைகள் அதற்கான வழிமுறைகள் என்பவற்றை கடந்த காலங்களில் பல பெரியார்களின் கருத்துக்கள் தெரிவித்தன. அவற்றை அவர்கள் நடைமுறையிலும் பின்பற்றி வந்தார்கள்.

ஆண், பெண் பேதமற்ற சமுதாயத்தையும் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். இத்தகைய சிந்தனைகளை இளம் தலைமுறையினருக்கு மாணவர்கள் எடுத்துக் கூறுவதற்கு பெரியார்களின் வரலாற்று நூல்கள் உதவியாக இருக்கும்.

இதனை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வை எடுத்துக் கூறக் கூடிய வகையில் செயற்படுத்த வேண்டும். ஏனெனில் மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களிடம் தான் உள்ளது.

இத்தகைய செயற்பாடுகளுக்கு கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள், நூல்கள் போன்றன ஆவணமாக அமையும் இது சமுதாயத்தை நல்வழிப்படுத்தக் கூடிய முறையிலும் அமைந்துள்ளது.- என்றார். (ம-313)

# கிராமங்கள் தோறும் எழுச்சியை ஏற்படுத்த காந்தீயவாதிகள் முன்வருதல் வேண்டும்

## காந்தி சேவா மண்டபத்தில் உரை

தென்மராட்சி, செப்.23

மகாத்மா காந்தியின் சத்திய சோதனையை மக்கள் அனைவரும் படிப்பதனால் எம்முன் தோன்றும் பல தடைகள் பிரச்சினைகள் நீங்கி விடுதலை உணர்வுடன் வாழ வழிபிறக்கும். இதற்காகக் கிராமங்கள் தோறும் மக்கள் முன் காந்தீய எழுச்சியை ஏற்படுத்த காந்தீயவாதிகள் முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ்வில் பழம் பெரும் காந்தீயவாதியும், சரஸ்வதி பிருந்தாவனம் அறக் கட்டளையின் ஸ்தாபகருமாகிய சோ.க.தம்பிப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:-

காந்தி அண்ணலின் கொள்கைகளை நாம் மக்களிடையே பரப்பி மக்கள் எழுச்சியை ஏற்படுத்தி பெண்களையும் முன்னிலைப் படுத்தினால் எமது சமுதாயத்தில் மறுமலர்ச்சி பிறக்க வாய்ப்பு ஏற்படும்-என்றார்.

விழுதுகள் அமைப்பின் துணைத் தலைவர் சாந்தி மனோகரராஜ் இதில் உரையாற்றுகையில் மக்கள் விடுதலைக் கட்சி என்னும் பெயரில் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளோம். ஒடுக்கப்பட்ட மக்களை பங்கெடுக்க வாய்ப்பளித்து பெண்களை முழுப் பங்காளர்களாக்கி சமூக, அரசியல் கூட்டமைப்புக்களை உட்கொண்டதான சமுதாயத்தை உருவாக்கி ஜனநாயக விழுமியங்களை வெளிக் கொணர்ந்து எமது சமுதாயத்தை சாதி, மத வேற்றுமை இல்லாமல் மாற்றியமைப்பதும், தமிழ் இனத்தில் வேறுபாடற்ற ஒரே கட்சியை உருவாக்குவதும் எமது முயற்சியாகும்.

உள்ளூர் ஆட்சி நிர்வாகத்தில் அரசியல் கட்சிகள் பங்கெடுப்பது தேவையற்ற விடயமாகும். உள்ளூர் மக்களின் நிர்வாகத்தில் அரசியலாளர் செயற்படுவது தேவையற்றதாகும்.

ஜனநாயக ஆட்சியில் நம் இன மக்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கத் தமிழ் சமுதாயத்துக்கு உழைக்கக் கூடிய ஒரு கட்சிக்கு மட்டுமே மக்கள் தம் வாக்குகளை செலுத்த வேண்டும்.

ஏனையவர்களுக்கு அவர்களின் ஆடம்பர அறிமுகங்களை நோக்கி அவர்களுக்கு ஆதரவு வழங்க முடியாது என்பதை நேரடியாகவே அவர்கள் வரும்போது சொல்லி அனுப்பும் பழக்கம் எம் மக்களிடம் உருவாக வேண்டும்-என்றார்.

கூட்டத்தில் கா.கார்த்திகேசு, வீ.ஜீ.தங்கவேல், உட்பட பலர் உரையாற்றினர். (ம-207)

# புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

**கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி** - சி.வினுஜா- 164, நே.கம்ஷியன்-162, க.சேனுஜா- 160, இ.கேதுஷா-159, ப.கனிஸ்த்தா-158, சு.ஜீவிதர்சன்-158, ச.சஜீபன்-152, பா.சிந்துஷன்-151.

**விசுவமடு மகா வித்தி**- ஏ.டிருஷன்-171, கி.விதுர்ஷியா-167, வி.டிதுர்ஷா-153, அ.நெல்சன்-153, ந.அருண்-153, கை.சானுஜா-152, சு.தமிழ்ப்பிரியன்-148.

**முல்லைத்தீவு பாரதி வித்தி** -வி.திசானி-174, த.லனுஷ-165, ச.சான்றன்- 152.

**வட்டு மத்திய கல்லூரி**- கி.அபிநயன்-162, க.அபிராமி -152, சி.கிரௌசிகா- 151, கோ.கீர்த்தி- 151.

**உடுத்துறை மகா வித்தி** -சி.சரணியா-176, இ.நிறைமதி-157, க.விதுஷா- 151.

**தொண்மானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தி** -சா.தாருகா-162, கு.ரிசிரேகா-161, ப.பலதனுஜன்-159, ப.மாதுஜா-158, ர.நக்ஷாளினி- 154, ஸ்ரீ.லக்ஷாயினி-152.

**கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை**- ப.ஜதுர்மியா-159.,

**துன்னாலை மேற்கு மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலை**-அ.நிலக்ஷன்-164, த.புகழினி-161.

**மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி** - பு.அர்ச்சயா-186, ஜெ.தருஷன்-181, த.திவியா -175, ர.ஹம்ஷிகா-167, ர.திசானி -167, ச.அனோஜா -167, கு.வித்தியாசாகர்-166, சு.சுதர்சன்-163, ச.பிரவீன்-158, பு.துசிகரன்-155, த.சலோமியா -154, ஜெ.நத்தியா-153.

**அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை**- பு.சுதர்சிகா-158, கோ.பிரியங்கன்-154, சி.விதுஷன்-153.

**அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி** -இ.ராகவி-168, செ.திவ்வியா-161.

**மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை**- செ.யூட்டிலக்ஸன்-186, அ.நிவோல்ரா -170, வி.மேரி விதுஷா-160, க.மதுஷா-159, கி.கிறிஸ்ரிக்கா- 157, ஜெ.பௌஸ்ரீனா-152, ந.சுகன்யா-152.

# முதியோரின் விவரம் திரட்டல்

கொழும்புத்துறை, செப்.23

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் முதியோர் தின விழாவும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நடத்தப்படவுள்ளது.

இதில் பங்கு கொள்ள விரும்பும் முதியோர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்க நிர்வாகம் கேட்டுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த 1946 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்தவர்கள் இக்கௌரவிப்பில் பங்கு பெறமுடியும்.

தற்போது மக்கள் பல இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளதால் முகவரிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதால் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாவலடி கிராம உத்தியோகத்தர் அலுவலகம், அரியாலை சமநலச் சேவைகள் நிலையம், திருமகள் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பற்றவர்களின் பதில்களால் பாதிக்கப்படும் பொதுமக்கள்

ஒருநாள் பாருங்கோ நான், வீட்டு வேலை எல்லாம் முடித்து விட்டுக் குளிப்பம் என்று மோட்டரைப் போடப் போனன். ஆனால் கரண்ட் இல்லை. எங்கட வீட்டில் குழாய்க் கிணறு அடித்து மோட் டார் பூட்டி தண்ணீர் எடுக்கிறம். கரண்ட் இருந்தால்தான் தண்ணீரை இறைக்க முடியும். அன்று கரண்ட் முழுநாளும் இல்லை. எப்படி தண்ணீரை எடுப்பது என யோசித்துக் கொண்டு நிற்க நேரம் போவது தெரியவில்லை. குழாய்க் கிணற்றை இடிக்க முதல் எங்கட அப்பப்பா சொன்னவர் "உது வேலைக்கு ஆகாது, கிணற்றை வெட்டி விட்டால் என்றைக்கும் பிரயோசனமாக இருக்கும். அதைவிட்டு விட்டு உந்த் குழாய்க் கிணற்றை இடித்துப் போட்டு கரண்ட் எப்ப வரும் என்று பார்த்துக் கொண்டு நிற்க எங்கட வேலை எல்லாம் பாழாப் போகும்'' என்று அப்பப்பா அன்று சொன்னது இன்று நினைவுக்கு வந்தது. என்ன செய்ய அந்தக் காலத்து ஆள்கள் தங்கட முயற்சியில் வாழ்ந்ததால் குறைவில்லாமல் வாழ்ந்துள்ளார்கள். இப்போதைய ஆள்கள் எல்லாத்துக்கும் யாரையோ நம்பித்தான் வாழ்கிறார்கள். அதனால இப்பத்த ஆள்களின்ர பிழைப்பு நாறுது பாருங்கோ.

இப்ப என்னுடைய உடம்பில் இருந்து வழிந்த வியர்வையும் கரண்ட் இல்லாததால குளிக்க முடியாமல் நாறத் தொடங்கிவிட்டது. பக்கத்துத் தோட்டத்தில் வெங்காயப் பயிருக்கு வாட்டபம்மில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டு சவக்காத்தை எடுத்துக் கொண்டு தோட்டப் பக்கம் சென்று குளித்துக் கொண்டு நிற்கும் போது அந்தத் தோட்டக்காரன் எனக்குப் பக்கத்தில் வந்து "உந்தக் கரண்டை நம்பி இருந்தால் இன்று நான் தோட்டம் செய்யமுடியாது இருந்திருக்கும். தரமான ஒரு வாட்டப்பம் வைத்திருக்கிறேன். நினைச்ச நேரத்துக்குத் தண்ணீரை இறைக்க முடியும். மண்ணெண்ணைய்க்கும் தட்டுப்பாடு வந்தால் உந்தத் துலாவில ஏறி மிதித்தன் என்றால் காணும்'' என்று சொல்லி விட்டுச் சென்றார். அப்பொழுது அவரது கிணற்றடியில் இருக்கும் துலாவைப் பார்த்தேன். ஒருநாளும் கரண்டை நம்பி இவர் இருக்க மாட்டார் என்பது தெரிகிறது. ஆற அமர குளித்துவிட்டு வந்தேன்.

கோப்பாய் பகுதியில் பகல் வேளைகளில் முழுநேரமும் இரவு நேரங்களில் 7 மணியில் இருந்து 9 மணி வரைக்கும் இப்ப அடிக்கடி கரண்டை கட் பண்ணி விடுவார்கள். ஏன் என்று தெரியவில்லை. அதற்கான விளக்கத்தை சரியான முறையில் மின்சார சபையும் மக்களுக்கு சொல்ல முடியாமல் முழிக்கிறது. நீர்வேலிப் பகுதியில் இருந்து கடந்த இரு வாரங்களுக்கு முதல் ஒருவர் மின்சார சபையிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏன் கறண்ட் அடிக்கடி கட் பண்ணுறீங்கள் என்று கேட்ட போது அதற்கு அந்த மின்சார ச்பையில் இருந்த ஓர் உத்தியோகத்தர் 'உனக்கு சொல்ல வேண்டுமோ?' எனக் கேட்டுள்ளார். ஏன் அடிக்கடி கரண்ட் கட் ஆகுது என்ற காரணத்தைச் சொல்ல முடியாத அந்த அலுவலர் ஏன் அந்த அலுவலகத்தில் பணியாற்றுகிறாரோ தெரியவில்லை. பேப்பரில கரண்ட் கட் தொடர்பான செய்தியை படித்துவிட்டு பேசாமல் இருக்க வேண்டியதுதான். வேறு என்ன செய்யமுடியும். மின்சக்தி, எரிசக்தி அமைச்சரையா கேட்க முடியும். மாட்டு வண்டியில எருவை ஏற்றிவிட்டு லோட் என்று சொல்லும் மாட்டு வண்டிக்காரன் போல் யாழ்ப்பாணத்து சனங்கள் கூடுதலாக கரண்டைப் பயன்படுத்துவதால் லோட் என்று மின்சார சபையினரும் சொல்லுகிறார்கள்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் ஏ-9 பாதை மூடப்பட்டதால் மின்சார உற்பத்திப் பொருள்களை தென்பகுதியில் இருந்து எடுத்து வர முடியாத காரணத்தால் 'ரான்ஸ் போமர்' பழுதடையும் போது திருத்த முடியாமல் உள்ளதால் அடிக்கடி கரண்டை கட் பண்ண வேண்டியுள்ளதாக மின்சார சபையினர் அன்று தெரிவித்தனர். போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் இன்று என்ன காரணம் தெரிவிக்கின்றனர் என்றால் ஏ-9 பாதையில் மின்கம்பங்கள் நடப்படுவதால் கரண்டை கட் பண்ண வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். கரண்டை அடிக்கடி கட் பண்ணுவதற்கு இல்குவான காரணத்தைச் சொல் லும் மின்சார சபை அந்தக் கரண்டை தொடர்ந்து பெறுவதற்கான வழியை இதுவரை தேடமுடியாமல் உள்ளனர். என்ன செய்ய முடியும் இவர்களால் மேல் இடத்து ஓடர் என்ற படியால் பேசாமல் வாயையும் கண்ணையும் மூடிக் கொண்டு வேலை செய்ய வேண்டியதுதான். இல்லாவிட் டால் தூர இடத்துக்கு ரான்சர் போட்டு விடுவினம். அதனால மின்சார சபையின் அலுவலகத்தில் இருக்கும் ஓர் அதிகாரி செக்குமாடு மாதிரி மேல் இடத்துக்கு தலையாட்டிக் கொண்டு இன்றும் இருக்கிறாராம். கோப்பாய் பகுதியில் அடிக்கடி கறண்டைப் பகலும் இரவும் கட் பண்ணுவது ஏன் என்று மின்சார சபையைக் கேட்பம் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மின்சார சபை அலுவலகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்ட போது அங்கிருந்த அலுவலரால் ஏ-9 வீதியில் மின்சாரக் கம்பங்கள் நடப்படும் வேலைகள் நடைபெறுவதால் கரண்டை கட் பண்ண வேண்டியுள்ளதாக தெரிவித்தார். எப்பொழுது வேலை முடியும் என்று கேட்ட போது வடிவேல் படத்தில் சொல்வது போல் எப்ப கரண்ட் வரும் அப்பொழுது வேலை முடியும் என்ற பாணியில் 'மின்கம்பங்கள் நடும் வேலை முடிய கறண் வரும். ஆனால் எப்ப வரும் என்று சொல்ல முடியாது' என்று சொல்லிவிட்டு தொலைபேசியை துண்டித்துவிட்டார். ஏ-9 வீதியில் மின்கம்பங்கள் நடப்படுவதால் கோப்பாயில் கறண்டைப் பகலில் கட் பண்ண வேண்டியுள்ளதாகக் காரணம் சொல்ல முடியும். இரவில் ஏன் கறண்டைக் கட் பண்ணுகிறார்கள் என்று சொல்ல முடியுமா? அதற்கும் ஒரு காரணம் வைத்திருக்கிறார்கள். அதுதான் பாருங்கோ லோட். ஏ-9 வீதியில் மின்கம்பங்கள் நடப்பட்டு முடிந்ததும் கரண்டை ஒழுங்கா கொடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் பிறகு லோட் என்ற காரணத்தைப் பயன்படுத்தி கரண்டை அடிக்கடி கட் பண்ணுவார்கள். அப்படி கறண்டை கட் பண்ணினாலும் பரவா யில்லை.




ஆனால் தங்களுக்குத் தெரிந்த அதாவது மின்சார சபை அதிகாரிகளுக்கு தெரிந்த இடங்களுக்கு கரண்டைக் கட் பண்ணாமல் கொடுத்துவிட்டு கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளுக்கு அடிக்கடி கறண்டைக் கட் பண்ணுகிறாங்கள்.

இது பற்றி அப்பாவி மக்கள் மின்சார சபையிடம் கேட்டால் அவர்களைக் கண்மூடித் திட்டுகிறார்களே ஒழிய மக்களின் மின்சார தேவையைக் கருத்தில் கொண்டு செயற்பட மறுக்கிறார்கள். இந்த செயற்பட மறுக்கம் செயற்பாடானது ஒட்டுமொத்த அபிவிருத்தியையும் பாதிக்கும் என்பது தெரியாமல் மின்சாரசபை அதிகாரிகள் இருப்பதுதான் வேதனையாக இருக்கிறது. ✱

**காணி விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அருகில் 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

மேற்படி விவரங்களுக்கு 0750415417என்ற தொலைபேசி இலக்கத்தை நாடுங்கள்

## இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசில் தின நிகழ்வு

இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசில் தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதம செயலாளரான இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சறோஜினி நாகராசா, கௌரவ விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், வவுனியா பிராந்திய உள்ளூராட்சி அலு வலகப் படவரைஞரும் மேற்படி கல்லூரி பழைய மாணவனும் ஆகிய வி. ஜெய சோதி, வலி. தெற்குப் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரும் கல்லூரிப் பழைய மாணவனுமாகிய க.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

**இலக்குக்கான வேலை வாய்ப்பு**

தன்னம்பிக்கையுடன் குறுகிய கால இலவசப் பயிற்சி நெறியினால் அடையாளப்படுத்தி வெற்றியடையச் செய்த GDM Managment பயிற்சி நிறுவகம் இப்போது உங்களுக்கும் அந்த வாய்ப்பை வழங்க யாழ். நகரில்...!

✱ நீங்களும் உங்கள் இலக்குகளை அடைய விரும்புகிறீர்களா?
✱ பூரணமான மனிதனாக ஆசைப்படுகிறீர்களா?
✱ இலவசப் பயிற்சிநெறியுடன் ஊக்குவிப்புப் பணம்.

அடிப்படைத் தகைமை: ✱ O/L, A/L சித்தி, ✱ வயதெல்லை : 18-30

சுயவிவரக் கோவையுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு : 0777968485, 86/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம்**

வருடாந்த மென்பந்து சுற்றுப் போட்டி மற்றும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு 29.09.2011 நடைபெறவிருந்தது. அது 02.10.2011 அன்று நடைபெறவுள்ளது. இதனை விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அதிர்ஷ்டலாபச் சீட்டு கிடைத்துள்ள அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாக உறுப்பினர்.

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**



மண்ணுலகம்
29 ★ 02 ★ 1928

விண்ணுலகம்
03 ★ 10 ★ 2010

திருமதி துரைரத்தினம் திருநாவுக்கரசு

திதி: தசமி (23.09.2011)

ஓராண்டு ஆனதுவோ எமைவிட்டு நீர் சென்று
ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
சலனமின்றி இறைவனிடம் சென்றதன் மாயமென்ன
பாசத்தின் உறைவிடமே பண்பின் இலக்கணமே
நித்தம் துடிக்கும் இதயம் உமை நினைக்கத் தவறவில்லை
சீர்பெற்ற உம் வாழ்வு இனி சொர்க்கத்திலும் சிறக்கட்டும்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

**DIPLOMA COURSES**
**PROGRAMMING**



Visual Basic
Advanced Java
HTML, DHTML
RMI, Servelets
C, C++ Programming
PHP, MySQL

CSC-ASIAN
COMPUTER EDUCATION

யாழ் நகர் - 8G ஸ்ரான்லி வீதி 021 2225677
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267

**கண்ணீர் அஞ்சலி**



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தரும் எமது சங்க அங்கத்தவருமாகிய வே.தர்மகுலசிங்கம் அவர்களின் தந்தை
**நாகன் வேலுப்பிள்ளை**
21.09.2011 அன்று இறைபதமெய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரி சங்கம்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் நடன ஆசிரியை
திருமதி சசிகலா கேதீஸ்வரன்
அவர்களின் தாய்
**திருமதி கமலேஸ்வரி சிவமணி**
அவர்கள் 20.09.2011 அன்று சிவபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பாடசாலைச் சமூகம்,
யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக சேவை அதிகாரிகள் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப2 வருடங்கள் தேவை

## அமைச்சர் செனவிரத்தன கூறுகிறார்

கொழும்பு, செப்.23

நாடு முழுவதும் நிலவும் நிர்வாக சேவை அதிகாரிகள் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப இரண்டாண்டுகள் வரையான கால அவகாசம் தேவைப் படுவதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்தன தெரிவித்துள்ளார்.

தற்போது 500 வரையிலான நிர்வாக சேவை அதிகாரிகள் பதவிக்கு வெறிடங்கள் நிலவுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவிகளுக்கு ஆள்பற் றாக்குறை நிலவுவதால் குறிப்பிட்ட பதவியின் உயர் தரத்துக்கான பதவிகளுக்குக் கீழ்மட்டத் தரங்களைச் சேர்த்த அதிகாரிகளை பதில் கடமை யாற்றும் அதிகாரிகள் என்ற பதவிப் பெயரில் நியமிக்க நேர்ந் துள்ளதாகவும் அமைச்சார் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் உதாரணமாகப் பிரதேச செயலர் பதவியை நிர்வாக சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே மேற்கொள்ள வேண்டியிருப்பினும், உத்தியோகத்தர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக அந்தப் பதவிகளுக்கு குறிப்பிட்ட சேவையின் இரண்டாம், மூன்றாம் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர் கள் பலரை பதில் கடமையாற்றும் பிரதேச செயலர் என்ற பதவிப் பெயருடன் நியமிக்க வேண்டியிருந்தது. இதே நடை முறை வேறுபல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களி லும் பின்பற்றப் பட்டு வருகின்றது.

தற்போது இந்தச் சேவையில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிப்பது மற்றும் புதிதாக இந்தப் பதவிகளுக்கு ஆள்ச்சேர்ப்பு மேற்கொள்வது ஆகிய நட வடிக்கைகளைப் பூரணமாக மேற்கொண்டு முடிக்க இன்ன மும் இரண்டாண்டுகள் கால அவகாசம் தேவை. அண்மையில் இந்தப் பதவிகளுக்காக புதிதாக 68 அதி காரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மொழி மூலமான பரீட்சை மூலம் மேலும் 60 அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


## லைசன்ஸ்க்கான மெடிக்கல்

உயரப்புலம் ஆனைக்கோட்டையில் வசிக் கும் Dr. P.P.திரவியம் அவர்களால் எந்த நேரமும், எந்த நாளும் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பு: Blood Group ம், I.C கொண்டு வரவும்.

"குணபூரணி", உயரப்புலம், ஆனைக்கோட்டை.0776365930

## வேலையாள் தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்குக் கணக்குப் பதிவதில் முன் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு:-
விஎ.இல. 4176
C/O உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

இரண்டு வருட முழு உத்தரவாதத்துடன் இந்தியன் நீர் மோட்டர்களை சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
கட்டடப்பொருள்கள், பெயின்ற் வகைகள், விசேட விலைக் கழிவில் 1980/- 250/-
மின்சாரப் பொருள்கள், நீர்க்குழாய்கள் போன்றவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



**தக்ஷா ரேடிங்**

பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். TP: 021 223 0202


## வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு முளை திறனற்ற விதைகள்

திவிநெகும திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்ட செய்கைக்கென வழங்கப்பட்ட விதைகள் முளை திறன் அற்றவையாகக் காணப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் மக்களிடையே விவசாய செய்கையை ஊக்குவித்து சுய தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக திவிநெகும வீட்டுத் தோட்டச் செய்கை கடந்த காலத்தில் அரசால் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தச் செயல் திட்டத்துக்கு பிரதேச செயலர் பிரிவுகள் உதவி அரச அதிபர் பிரிவுகளில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தெரிவு செய்யப்பட்டு பலத்த ஆரவாரத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட சிறிய பைகளில் இருந்த மிளகாய், தக்காளி விதைகள் உட்பட ஏனைய விதைகளும் கூட முளை திறன் அற்றனவாக இருந்தமையால் பொது மக்கள் பலரும் ஏமாற்றம் அடைந்து காணப்படுகின்றனர். (ம-68)


## அன்பொளி கல்வியகம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்!

2011 தரம் 5 இல் எமது கல்வியகத்தில் கல்வி கற்ற மாணவர்களில் அகில இலங்கை. ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற மாணவர்களையும் அவர்களோடு சித்தியெய்திய 500க்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ப. சேதுராகவன் -194
முல்லை.மா.நிலை -1
தேசிய நிலை - 2



ர.நிஜூஷிகா -192
யாழ். மா.நிலை-1
தேசிய நிலை - 10



லோ.டிலோஷன் -191
யாழ்.மா.நிலை - 2
தேசிய நிலை - 20



கு. கஜானி - 190
யாழ். மா.நிலை -4



இ. மாதங்கி - 188
யாழ். மா.நிலை -9

## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

**2012 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும்.**
**2012 தரம் - 4 மாணவர்களுக்குரிய வகுப்புக்களும் (தற்போது தரம்- 3)**
**ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்
**அன்பொளி கல்வியகம்**
**யாழ். இந்துக்கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சாவகச்சேரியில்
**அன்பொளி கல்வி நிலையம்**
**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

அனுமதிகளை 24.09.2011 சனிக்கிழமையிலிருந்து 30.09.2011 வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே விண்ணப்பங்களைப் பெற்று பதிவு செய்துகொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள். நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை*
*அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*

**இயக்குநர்கள்**


## தவறிவிட்டது

வேலையா கிருஷ்ணவேணி என்பவரது தேசிய அ.அட்டை (588221970V) சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777114007 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மத்திய கல்லூரி மாணவன்

**செல்வன்.ஜெயசீலன் வேணுசாந்**

2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்168 புள்ளிகளைப், பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவரின் கல்விக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி அவர் மேலும் கல்வியில் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

புதிய சோனகர் தெரு,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
அப்பப்பா,அப்பம்மா,அத்தை

## 22 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**தேவரூபன் நிஷாந்தன்**

இவர் கடந்த 23.03.2009 அன்று காணாமல் போயுள்ளார். இவரின் 22 ஆவது பிறந்த தினத்தினை ஞாபகம் கூருகின்றோம். இவர் பெரியகுளம் ஐயனார் வித்தியாலய பழைய மாணவனும், முருகானந்தா மகாவித்தியாலய மாணவனும் ஆவார். இவரை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

பெரியகுளம்
கண்டாவளை,
கிளிநொச்சி.

வாழ்த்துவோர்
தம்பி, அக்கா,
அப்பா, அம்மா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. செல்லத்துரை தங்கராஜா**

தேசிய விவசாய வியாபாரச் சபையினால் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 28.08.2011 ஞாயிறு நடைபெற்ற சிறந்த விவசாயிகளுக்கான விருது வழங்கும் விழாவில் யாழ்.மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது நண்பனை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விவசாய நண்பர்கள்
**உரும்பிராய் வடக்கு.**

(8463)

## 50 ஆவது திருமண வாழ்த்து



**திரு.திருமதி**

**சுப்பிரமணியம் - ராசம்மா**

ஆண்டுகள் ஐம்பது நினைவினில்
ஆனந்தம் கொண்டது வாழ்வினில்
இன்னும் பல்லாண்டுகள் நிலைத்திட
திருமண உறவினில் வாழ்க வாழ்கவே

**வாழ்த்துபவர்கள்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**சிவகுலவீதி, உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுடன் ஒழுக்கத்தையும் ஒருங்கே போதிக்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஆங்கில மொழிப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டதன் விளைவாக 1836 ஆம் ஆண்டு மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் தென்கிழக்கு மூலையில் ஆரம்பிக்கப்பட்டது மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. அந்த வைத்தியசாலையின் வட கிழக்கு மூலையில் இயங்கிய அமெரிக்க மிஷன் ஸ்தானப் பாடசாலையுடன் சமாந்திரமாக இயங்கியது.

1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எஸ்.பி. அழகரத்தினத்தின் தலைமையில் இரு பாடசாலைகளும் ஒன்றிணைக் கப்பட்டு தற்போது இயங்கும் இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இரண்டாம் தர நிலைக்கு உயர்த்தப்பட்டு பாடசாலைக் கல்வி ஆரம்பிக் கப்பட்டதும் வரலாற்றுப் பதிவுகள்.

இன்றைய காலகட்டத்தில் சர்வ தேசம் முழுவதும் கைநழுவிப் போய்க் கொண்டிருப்பது மனித ஒழுக்கம் என்பது யாவருக்கும் கவலை தருகிறது. சமுதாய மேம்பாட்டின் மூல வேரான ஒழுக்கக் கல்வியை மேம்படுத்தும் சமுதாயத்தில் ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டியது பாடசாலைகளினதும் பெற்றோர்களினதும் பெரியோர்களினதும் தலையாய கடமை ஆகும்.

இந்த அடிப்படையில் ஒழுக்கக் கல்வியை மேம்படுத்துவதில் தனக்கேயுரிய பாரம்பரியங்களோடு பலரும் போற்றத்தக்க வகையில் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அ.மு. அருணாசலம் அதிபராக இருந்த காலத்தில் உப அதிபராக திருமதி ச.யோகேஸ்வரன், இணை உப அதிபர்களாக சி.சண்முகநாதன், ஆ. கல்யாணசுந்தரேசன், கனிஷ்ட பிரிவு அதிபராக க.சிவனேசன் ஆகியோர் கடமையாற்றி வந்தார்கள்.



1994 ஆம் ஆண்டு நெருக்கடியான காலங்களிலும் தனது பணியினைத் தளரவிடாமல் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டடத் தளபாடப் பற்றாக்குறை, கற்றல் கற்பித்தல் உபகரணப் பற்றாக்குறை ஆகியவற்றினூடாக மாணவர்களுக்குச் சிறப்பான அளவில் பணியாற்றி வந்துள்ளது.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்தப் பாடசாலையின் உப அதிபராக இருந்த ச.யோகேஸ்வரன் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டு கடமையாற்றினார்.

1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர்ந்து தமது பணியினை தளர விடாமல் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு வரை கற்றல் செயற்பாடுகளை பாடசாலை சமூகம் நடத்தி வந்தது. மீண்டும் மானிப்பாயில் 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மிகக் குறைந்த மாணவர்களுடன் பாடசாலை இயங்கத் தொடங்கியது.

2000 ஆம் ஆண்டு பல மாணவர்களின் பெற்றோர்களின் வேண்டுகோளின் பெயரில் மறுபடியும் பாடசாலையின் அதிபராக அ.மு.அருணாசலம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1998ஆம் ஆண்டு கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் 85 வீதமான மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் 1999 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையில் 11 ஆவது இடத்தில் மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டதுடன் 85 வீதமான மாணவர்கள் 180 புள்ளிகளுக்கு மேலும் க.பொ.த. சாதாரணதரத்தில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெற்றதுடன் 90 வீதமான மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றனர்.

இதே ஆண்டில் புலமைப் பரிசில் பரீட் சையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். 2000ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் திறமையான பெறுபேறுகளை 60 வீதமான மாணவர்கள் பெற்றமையும் பாடசாலையின் வரலாறு-

இவ்வாறு மாணவர்களின் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தம்மை அயராது உழைத்த ஆசிரியர்களையும் அதிபர்களையும் பாடசாலை சமூகத்தவர்கள் என்றுமே மறக்க முடியாது.

இந்தப் பாடசாலையில் விளையாட்டுச் செயற்பாடுகளாக வலைப் பந்து, கூடைப் பந்து, கரப்பந்து, உதைபந்து, மென்பந்து ஆகியன பயிற்றுவிக்கப்படுகின்றன. கோட்டம், வலயம் மாவட்ட மட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு 7 மாணவர்கள் தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கு பங்குபற்றுவதற்கு உடற்கல்வி ஆசிரியர்களாக இருந்த சிவயோகவதனி சிற்றம்புலம், வாசுதேவன் ஆகியோரின் ஆளுமைமிக்க செயற்பாடும் காரணமாகும்.

## சோபனா

இந்தப் பாடசாலையில் பேஜ் இல்லம், அழகர் இல்லம், பிக்னல் இல்லம், ஸ்கொட் இல்லம் என நான்கு இல்லங்கள் உள்ளன. இந்த இல்லங்களின் பெயர்கள் பாடசாலையின் முன்னாள் அதிபர்களின் ஞாபகார்த்தமாகச் சூட்டப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையின் மன்றங்களாக நல்லுறவு மன்றம், ஒழுக்காற்றுத்துறை மன்றம், முத்தமிழ் மன்றம், இந்துமா மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூகவியல் மன்றம், உயர்தர மாணவர் மன்றம், ஆங்கில மன்றம், கிறிஸ்தவ மன்றம், நுண்கலை மன்றம், சாரணியர் குழு, சேவைக்கழகம், பெண்கள் சாரணியர், மனைப்பொருளியல் மன்றம், குழந்தை இலக்கியம் மன்றம், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவை இயங்கி வருகின்றன.

பாடசாலையின் நல்லுறவு மன்றமானது இந்தக் கல்லூரியின் நிரந்தர ஆசிரியர்களை நிரந்தர அங்கத்தவர்களாகவும் ஏனைய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவரையும் அங்கத்தவர்களாகவும் கொண்டு இயங்குவது சிறப்பு.

இந்த மன்றத்தினூடாக பாடசாலைச் சமூகம் அங்கத்தவர்களின் மங்களகரமான, அமங்கலமான நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர்களுக்குத் துணை நிற்பதுடன் நல்லுறவையும் ஏற்படுத்துகிறது.

இந்தப் பாடசாலையின் ஒழுக்காற்றுத்துறை மன்றத்தினூடாக மாணவர்களின் கல்வியுடன் சமூக விழுமியப் பண்பாடு, ஒழுக்கம் சார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

*(தொடரும்)*

**மண்ணுக்கு மகிமை தந்த மழலைகளை வாழ்த்துகின்றோம்**


சி.சரண்ஷா


க.அனுஷா

*2011 ஆம் ஆண்டு நடந்த 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் 179 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தையும் பளை மத்திய கல்லூரியில்*
*167 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் இரண்டாம் இடத்தையும் பெற்ற*
**சிறிகாந்தன் சரண்ஷாவையும் கனகராசா அனுஷாவையும்**
வாழ்த்துவதிலும் மேன்மேலும் சிறப்புத் தேர்வுகளில்
வெற்றிபெறவும் நல்லாசிகளை வழங்கி நிற்கும்
**மாமன்மார் தம்பகாமம் - பளை**

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்யும்**
**'தென்னாசிய நாடுகளில் பால்நிலை எண்ணக்கரு பற்றிய புரிதல்'**
பற்றியதோர் கருத்துப்பகிர்வு
**பங்கேற்கின்றார்**
*தமிழ் நாடு மற்றும் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், பால்நிலைப் பயிற்சியாளருமான*
பியூலா ஆசாரியா அவர்கள்
**அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர், சமூகப்பணியில் ஆர்வமுடையோர், பல்கலைக்கழக மாணவர்கள், விழுது வாசகர்வட்ட அங்கத்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள அன்போடு அழைக்கின்றோம்.**
இடம்: விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
இல. 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
காலம்: செப்ரெம்பர் 24 ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி
உங்கள் தொடர்புகளுக்கு: 021 222 9866

**ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்**
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரபல
ஜோதிடர் K.M.ராஜீ சுவாமிஜி
'இவர் வெளிநாடுகளிலும் மக்களது பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளார்.'
*கைரேகை, கல்வி, உத்தியோகம், தொழில், குழந்தைப்பாக்கியம் அனைத்து பிரச்சினைகளும் தீர்த்துத் தரப்படும்.*
T.P 072 3811189,
075 2551018
(சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்)
இல: 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - மு.ப. 8.00 - பி.ப 7.00 வரை

**வீடு வாடகைக்குண்டு**
நவாலி வடக்கு, புலவர் வீதி, மானிப்பாயில் 7 பரப்புக் காணியில் 3 படுக்கை அறைகள், இரண்டு விறாந்தைகள், இணைந்த குளியலறை மற்றும் நவீன வசதிகள், வாகனத் தரிப்பிடம் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு.
(200,000/- முற்பணம் - 3000/- மாத வாடகை
(8210) தொடர்பு: 077 8350478

**வீடு வாடகைக்கு**
நல்லூர் செம்மணி வீதியில் வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நல்ல சுற்றாடலில் வாகனத்தரிப் பிடம் வசதி கொண்ட வீடு வாடகைக் குண்டு.
தொடர்பு: 0773466702
0776770383

**காணி விற்பனைக்கு**
விக்னேஸ்வரா வீதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் உள்ள 6½ பரப்பு கொண்ட வீட்டுடன் கூடிய காணி திரு.செல்லத்துரை சுந்தரலிங்கத்துக்குச் சொந்தமாயிருந்து தற் பொழுது கனகசிங்கம் வகிந்தனுக்கும் ஜீவ கனுக்கும் அறுதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:- 0779559104

**தேவை**
யாழ்.நகரில் இயங்கும் மருத்துவ ஸ்தாபனத்துக்கு பின்வரும் தகைமைகளுக்கு ஆள்கள் தேவை.
*01. கணக்காளர் (Accountant Assistant - பெண்)*
*02. காவலாளி (ஆண்) 50 வயதுக்கு மேல்.*
*03. காசாளர் ஆண்/பெண் (முன்னைய அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)*
சனி [24.09.2011] காலை 8.30 மணிக்கு நேரில் வரவும்.
இடம்- சன்றைஸ் மெடி கிளினிக், 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**யா/இணுவில் மத்திய கல்லூரி**
*வருடாந்த பரிசளிப்பு விழா - 2011*
தலைவர் : திரு.அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
காலம் : 25.09.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணி
இடம் : கல்லூரி சரஸ்வதி கலையரங்கம்
பிரதம விருந்தினர்: உயர்திரு இ.இளங்கோவன்,
*(செயலாளர், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம்)*
சிறப்பு விருந்தினர்: திருமதி சறோஜினி நாகராஜா
[பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி வலிகாமம் கல்வி வலயம்]
கௌரவ விருந்தினர்கள்
1. திரு.செ.குபேரநாதன்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்
2. திரு.வி.ஜெயசோதி (பழைய மாணவன், படவரைஞர், பிராந்திய உள்ளூராட்சி அலுவலகம், வவுனியா)
3. திரு.க.பரமேஸ்வரன் (பழைய மாணவன், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலி.தெற்கு பிரதேச சபை)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/இணுவில் மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்காத பொலிஸ் ஆணைக்குழுவின் கட்டடத்துக்கு வாடகை இரண்டரைக்கோடி

கொழும்பு, செப். 23

தேசிய பொலிஸ் ஆணைக்குழு இரண்டரைவருடங்களாகஇயக்காது உள்ளபோதும் அதன் கட்டடத்துக்கு இரண்டரைக் கோடி ரூபா வாடகையாகச் செலுத்தப்பட்டு வந்துள்ளது என்று ஆணைக் குழு வட்டாகள் தெரிவித்துள்ளன.

முற்றிலும் இயங்காதுபோன இந்தக் கட்டடத்தில் 50 பேர் வெறுமனே காலத்தைக் கழிக்கின்றனர் எனவும், அவர்களுக்கான மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டடத்தின் மின்சாரம், நீர் கட்டணங்களாக மாதந்தம் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலுத்தப்பட்டு வருகின்றது என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-5)

# காலாவதியான பொருள்கள் விற்பனை; பத்து நவீன சந்தைகள் மீது வழக்கு

கொழும்பு, செப்.23

காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை உட்பட விலைப் பட்டியலை பார்வைக்கு வைத்திராமை போன்ற குற்றச் சாட்டுக்களில் கொழும்பிலும் அதற்கு அண்மையிலும் இயங்கி வரும் பத்து நவீன சந்தைகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமிமர்ஸீக் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அதிகாரசபை இந்த வருடத்தில் சுமார் 26 ஆயிரம் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாகவும் தவறிழைத்தவர்களிடம் இருந்து அபராதத் தொகையாக 55 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-5)

# பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சீற்றம்

கொழும்பு,செப்.23

இலங்கையைக் குறிவைத்து அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக் குழுவை அமைக்கும் நோக்கில், பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பல்வேறு பொய்களும் அவிழ்த்துவிடப்பட்டுள்ளதாக இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், போரின் கடைசி 5 மாதங்களில் வன்னியில் ஒரு லட்சம் பேர் மரண மானகினர் என்று பிரிட்டன் நாடாளுமன்ற விவாதத்தில் கூறப்பட்டுள்ளதாவும், இந்த விவரங்கள் அவர்களுக்கு எப்படித் தெரியும்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின் கவனத்தை ஈர்ப்பதற்காக முட்டாள்தனமான முறையில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் மிகைப் படுத்திய தகவல்களை வெளியிட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்துக்கு முன்பாக இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப் பட்ட பரப்புரைப் போரின் ஒரு பகுதியே இது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச)



கரவெட்டி தச்சன்தோப்பு ஐங்கரன் அறநெறிப் பாடசாலையின் ஆறாம் ஆண்டு நிறைவு விழாவில் இன்னிசை விருந்து வழங்க வந்த தமிழகத்தைச் சேர்ந்த இந்திய தேசிய விருது பெற்ற கலை இளமணி ஆர். காஷ்யப் மகேஷ் குழுவினரை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் பொன்னம்பலம்,செயலாளர் ந.தெய்வேந்திரராஜா, நிர்வாக உறுப்பினர் கே.இரத்தினசிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து வரவேற்கின்றனர்.

# மது போதையுடன் வாகனம் செலுத்திய 37 பேர் கைது

கொழும்பு, செப்.23

கடந்த சில தினங்களில் மதுபோதையுடன் வாகனம் செலுத்திய 37 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 3 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகள் காரணமாக ஏற்பட்ட இரு விபத்துகள் குறித்த தகவல்களின் பின்னரே இந்தச்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்கவின் பணிப்பின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கைதுசெய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களுக்குத் தலா 5,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ச-5)

# நாட்டில் 80 சதவீத மக்கள் மரண தண்டனைக்கு ஆதரவு

கொழும்பு, செப்.23

நாட்டில் மீண்டும் மரணதண்டனையை நடைமுறைப் படுத்துவதற்கு எண்பது சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த வருடம் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின்போது துண்டுப் பிரசுரங்கள் மூலம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே மக்கள் தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

நாட்டில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு மரண தண்டனை நடைமுறையில் இல்லாததே முக்கிய காரணம் என்று கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

1976ஆம்ஆண்டு முதல் இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப் படவில்லை. வெலிக்கடை மற்றும் போகம்பரைச் சிறைகளில் 357 மரண தண்டனைக் கைதிகள் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வல்வெட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி கனகசபை தேவிகா
தம்பதியரின் செல்வப் புதல்வியும்
யா/யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியுமான



**தர்ஷனா**

அவர்கள் 2011 ஆம் ஆண்டு 5 ஆம் தரப்
புலமைப் பரிசில் பரீட்சையில்
172 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து
பாடசாலைக்கும் பெற்றோருக்கும்
உற்றாருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
இவர் மென்மேலும் பல பெருமைகளையும்
உயர் நிலையையும் அடைந்து
சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி,
அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார்.
70/10, அரசடி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி திருஞானசம்பந்தன் - மகேஸ்வரி தம்பதியரின் புதல்வி



**தி.துவாரகா**
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி 177 புள்ளி
திரு திருமதி சோதிலிங்கம் - லலிதா தம்பதியரின் புதல்வி



**சோ. துவாரகா**
யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை 160 புள்ளி

2011 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு இருவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் எதிர்வரும் காலங்களில் உயர் கல்வியைப் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன்னம்பலம்
பல்பொருள் வாணிபம்,
கணபதி அரிசி ஆலை,
சேரமான் அரிசி ஆலை

வாழ்த்துவோர்:
பெரியப்பா[illegible] குடும்பம்,
சித்தப்பாமார் குடும்பம்,
மாமன் மார் குடும்பம் (கிளிநொச்சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
மாணவன் பாஸ்கரன் கஜிபன்



2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட்
மாதம் தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில்
158 புள்ளிகள் பெற்று
சித்தியடைந்தமையைப்
பாராட்டி வாழ்த்துவதுடன்
கல்வியில்
பல துறைகளிலும்
சிறந்து விளங்க
வாழ்த்துகின்றோம்

குமரகோட்டம்,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்:
சிவராஜா குடும்பம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கரவெட்டி மாணிக்கவாசகர்
வித்தியாலயத்தில் கல்வி கற்று
ஓகஸ்ட் 2011 ஆம் ஆண்டு தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில் 184
புள்ளிகளைப்பெற்றும், பாடசாலை
மட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்று
பெற்றோருக்கும், பாடசாலைக்கும்
பெருமை சேர்த்த

**சாம்பவி யேசுதாஸ்**

அவர்களைப் பாராட்டுவதோடு
மென்மேலும் பல கலைகள் கற்று
பல்கலைக்கழகம் செல்ல
வாழ்த்துகின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்:
சிவராஜா குடும்பம்.
(பிரதீபன் மாமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை கொடு: நிறுத்து திருச்சியில் நேற்று களேபரம்

திருச்சி, செப்.23

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் மரண தண்டனையை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி காங்கிரஸ் கட்சியினர் திருச்சியில் நேற்று உண்ணாவிரதம் இருந்தனர்.

அவர்களுக்குப் போட்டியாக புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உண்ணாவிரதம் இருக்க பொலிஸாரிடம் அனுமதி கேட்டனர். அதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை. இருப்பினும் அனுமதி இல்லாமல் உண்ணாவிரதம் இருக்க முயன்றதால் அவர்களை பொலிஸார் கைது செய்து 2 வான்களில் அழைத்துச் சென்றனர்.

காங்கிரஸ் கட்சியினர் உண்ணாவிரதம் இருந்த இடம் வழியாகவே அந்த வான்கள் சென்றன. முதலில் சென்ற வான் உண்ணாவிரதம் இருந்த காங்கிரஸ் கட்சியினரைக் கடந்துசென்றுவிட்டது. 2 ஆவதாக வந்த வானை காங்கிரஸார் வழிமறித்துக் கோஷமிட்டனர்.

**காங்கிரஸ் - சிறுத்தைகள் மோதல்**




அந்த நேரம் இயந்திரக் கோளாறு காரணமாக புறப்பட இயலாமல் அந்த இடத்தில் வான் திடீரென நின்றுவிட்டது. அப்போது அந்த வானில் இருந்து காங்கிரஸ் கட்சியினரை நோக்கி செருப்பு வீசப்பட்டது. பதிலுக்கு காங்கிரஸ் கட்சியினரும் கற்கள், செருப்புகளை வானை நோக்கி வீசினர். இதில் வானுக்குள் இருந்த குமார், சங்கர் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது.

இந்த நிலையில் வானை அதிவேகமாகச் செலுத்திக் கொண்டு பொலிஸார் வேகமாகச் சென்றனர். கைது செய்யப்பட்ட 69 பேரும் ஒரு திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை தேவை என்று கோஷமிட்டனர். பொலிஸார் அங்கேயே மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. (வ)

# மரண தண்டனையை ஒழிக்கக் கோரி காந்தி பிறந்த தினத்தில் பட்டினிப் போர்

**பழ.நெடுமாறன் அறிவிப்பு**



சென்னை, செப்.23

மரண தண்டனைக்கு எதிராக மகாத்மா காந்தியின் பிறந்த தினமான ஒக்ரோபர் 2 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பட்டினிப் போராட்டம் நடைபெறும் என்று மூன்று தமிழர்கள் உயிர்க்காப்பு இயக்கத்தின் ஒருங்கி ணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூன்று தமிழர்களின் உயிர்களைக் காக்க வேண்டும், இந்தியா வில் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மகாத்மா காந்தியின் பிறந்த தினமான ஒக்ரோபர் 2 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பட்டினிப் போராட்டம் நடைபெறும்.

காலை 9 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இந்தப் போராட்டத்தில், மூன்று தமிழர்கள் உயிர்க் காப்பு இயக்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், தமிழ்த் தேசிய அமைப் புகளும், மனித உரிமை அமைப்புகளும் பங்கேற்க வேண்டும் என்று அதில் கேட்கப்பட்டுள்ளது. (வ)



தனித் தெலுங்கானாவுக்கு ஆதரவு தெரிவித்து ஆந்திர அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐதராபாத்தில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயசாந்தி தப்பு வாத்தியம் இசைத்து போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

# கிராமம்வரை அதிகாரம் கொடுத்த இந்தியாவுக்கு ஒபாமா பாராட்டு

டில்லி, செப். 23

கிராம மக்களுக்கு அதிக அதிகாரம், வெளிப்படையான நிர்வாகம் ஆகியவற்றை நாடு முழுவதும் சிறப்பாகச் செயற்படுத்துவதாக இந்தியாவுக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பாராட்டுத் தெரிவித்தார்.



அமெரிக்கா மற்றும் பிரேசில் தலைமையில் அரசுகளுக்கு இடையே கூட்டணி என்ற பெயரில் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை, ஊழல் எதிர்ப்பு, பொறுப்பேற்பு மற்றும் மக்களுக்குக் கூடுதல் அதிகாரம் ஆகியவற்றுக்கு முயற்சி செய்வதற்கான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் முதலாவது கூட்டம், நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அந்த அமைப்பில் இந்தியா பங்கேற்கவில்லை. கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டும் இந்தியா சார்பில் யாரும் இடம்பெறவில்லை. எனினும், அங்கு பேசிய அதிபர் ஒபாமா:

இந்தியாவைப் பாராட்டினார். அதிக மக்கள் தொகையைக் கொண்டிருந்தாலும், நாடு முழுவதும் கிராம மக்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிப்பதிலும் வெளிப்படையான நிர்வாகம் ஏற்படுத்தும் முயற்சியிலும் இந்தியா பாராட்டுக்குரியது- என்றார். (வ)

## பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவுக்கு 3ஆம் இடம்

2011இல் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானை பின்னுக்குத் தள்ளி விட்டு 3 ஆவது இடத்தைப் பிடிக்கும் என சர்வதேச நிதியத் தகவல் தெரிவிக்கிறது.

சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் உள்ள நாடுகளாக முறையே அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் ஆகியவை உள்ளது. 4 ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பொருளாதாரச் சரிவைச் சந்தித்துள்ளது. இதனால் 2011 ஆம் ஆண்டில் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் ஜப்பானை பின்னுக்குத் தள்ளி விட்டு 3 ஆவது இடத்தை பிடிக்கும் என சர்வதேச நிதியம் தெரிவிக்கிறது. (வ)

# இணையத்தள மோசடியால் வினாடிக்கு 14 பேர் பணம் இழப்பு

டில்லி, செப். 23

இந்தியாவில் வருடாந்தம் இணைய தளம் மூலம் நடக்கும் மோசடியால் ஏற்படும் இழப்பு 34 ஆயிரத்து 110 கோடி - என்று ஆய்வு அறிக்கை ஒன்றின் மூலம் இது தெரியவந்துள்ளது.

உலகத்தை பொறுத்தவரையில் இந்த மோசடியால் ஏற்படும் இழப்பின் அளவு ஆண்டு ஒன்றுக்கு 38 ஆயிரத்து 800 பில்லியன்.

இணையத்தள மோசடி மூலம் விரயமாகும் காலத்தின் அள வானது, கறுப்பு சந்தை மூலம் விரையம் ஆகும் காலத்தின் அளவையும் விடவும் கணிசமான அளவு அதிகமாகும் என்றும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

நடப்பு ஆண்டில் உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மோசடி காரணமாக இணையத் தளத்தைப் பயன்படுத்துவோர் கூடுதல் பணத்தை இழப்பார்கள் என்றும் அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இணையத் தளத்தை பயன்படுத்துபவர்களில், 69 சதவீதம் பேர் மோசடி காரணமாக பணத்தை இழந்துள்ளனர். மேலும் ஒவ்வொரு வினாடிக்கும் 14 பேர் வீதம் இந்த மோசடி காரணமாக பணத்தை இழந்து வருகிறார்கள்.

மொபைல் போன் மூலம் இணையத் தளத்தைப் பயன்படுத்துவோரும் இந்த மோசடியால் பாதிக்கப்படுவார்கள். இவர்களில் 18 வயதுக்கும் 31 வயதுக்கும் உட்பட்டவர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மூன்று பேரையும் தூக்கில் போட தடை வாங்கியது வைகோதான்

**விடுதலைச் சிறுத்தைகள் பாராட்டு**

சென்னை, செப். 23

ராஜீவ் கொலை வழக்குக் கைதிகளின் தூக்குத்தண்டனைத் தடை வாங்கித் தர முழு முதற்காரணமாக இருந்தவர் வைகோ என்றால் மிகையாகாது.

- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னியரசு பாராட்டியுள்ளார்.

பெரியார் திராவிடர் கழகம் சார்பில் சென்னை ராயப்பேட்டையில் மரண தண்டனைக்கு எதிராக நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையை ரத்துச் செய்யக் கோரி பெரியார் திராவிடர் கழகம் சார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட [illegible] பிரச்சாரப் பயணத் தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டே இரண்டு விடயங்களைச் சொல்ல வேண்டும் என்பதால்தான், இங்கே வந்திருக்கிறேன். ஒன்று பாராட்டு. இன்னொன்று எச்சரிக்கை.

தமிழகம் முழுவதும் மூவரின் தூக்குத்தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழர்கள் கிளர்ந்து எழுந்தபோது, செங்கொடி தீக்கிரையான போதும் மக்களுடைய போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருந்தபோது புற அழுத்தங்கள் கிளம்பக் கிளம்ப மக்கள் வீதியில் வந்து போராடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் நீதிமன்றத்தில் ஒரு போராட்டம் நடத்தியே ஆக வேண்டும் என்று நீதிமன்றத்தின் வாயிலாக இந்தத் தூக்குத்தண்டனையை எட்டு வார காலத்திற்கு தடை வாங்கித் தந்த மரியாதைக்குரிய ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பாராட்டியே ஆக வேண்டும்.

ஏனென்றால், புற அழுத்தங்களால் அந்தப் போராட்டங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தாலும், தமிழகம் முழுவதும் தெரிந்த ஒரு செய்தி, தோழர்கள் வடிவாம்பாள், அங்கையர்கன்னி, சுஜாதா போன்றவர்கள் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். எமக்குக் கிடைத்த மகிழ்ச்சியான செய்தி, எட்டு வார காலத்திற்குத் தடை என்பதுதான். அதற்கு முழு முதற் காரணம் வைகோவைத்தான் சாரும். ஆகையால்தான் விடுதலைச்சிறுத்தைகள் கட்சி சார்பில் பாராட்டுகிறோம் - என்றார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை சென்.ஜோசப்பின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா





கொழும்புத்துறை, செப்.23

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத் தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா ஸ்தாபகர் அருட்திரு பொஞ்சின் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பா.வின் சென்ற் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை உரையாற்றும் போது:

இலங்கை முழுவதும் மக்கள் கல்விபெற வேண்டும் என்ற உரிய நோக்குடனும் ஊக்கத்துடனும் செயற்பட்டவர் பொஞ்சின் அடிகள். இவர் குருவாகவும் ஆயராகவும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் கல்விக்கு உரம் சேர்த்தவர்.

இவரது கனவை நிறைவேற்றும் வகையில் கல்வி, ஒழுக்கம், கலைகள், உடற்பயிற்சி, விளையாட்டு அனைத்திலும் விளங்கும் இந்தப் பாடசாலை பல புத்தி ஜீவிகளை எமது நாட்டுக்குத் தந்துள்ளது- என்றார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிச் செயலாளர் வே.தி.செல் வரட்ணம், பாஷையூர் பங்குத்தந்தை அருட்திரு றோய் பேடினட், அருட்திரு பே.ப.பிலிப் (அ.ம.தி அடிகள்), நுவரெலியா பிராந்திய மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு க.நேரியோ ஏபிரகாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

150 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக மரக்கன்றுகள் நடப்பட்டன. விழாவின் சிறப்பு மலரை யாழ்.ஆயர் வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வே.தி.செல்வரட்ணம் பெற்றுக்கொண்டார்.

கல்வி, கலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கான கடல்சார் போட்டிகள், உதைபந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம-135)

# தண்ணீரில் மிதந்த சாரதியை சூடு நடத்திப் பிடித்தது பொலிஸ்

கொழும்பு, செப்.23

அதிக மதுபோதையுடன் வாகனத்தைச் செலுத்தி பல வாகனங்களை மோதிச் சேதப்படுத்தியதுடன் ஐந்து பொலிஸ் தடுப்பரண்களையும் மீறிச் சென்ற சாரதி ஒருவர் ஒரு மணித்தியால பகீரதப் பிரயத்தனத்தின் பின் கைது செய்யப்பட்டார்.

பொறல்லயில் அவரது வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தைத் மேற்கொண்ட பின்னரே பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்த வாகனத்தை மிகவும் சிரமத்துக்கு மத்தியில் பின் தொடர்ந்து சென்ற பொலிஸ் அவசர அழைப்புக் குழுவினர் உட்பட நான்கு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் பொறல்லயில் வாகனத்தின் நான்கு சில்லுகளுக்கும் வெடி வைத்து அதனை செயலிழக்கச் செய்த பின் சாரதியைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் தனியார் நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி எனவும் அவர் கொழும்புப் போக்குவரத்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் ஆறாயிரம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஆறு மாதத்துக்கு இரத்துச் செய்யப்பட்டது. (ம-5)

# வளம் குறைந்த பாடசாலையிலும் மாணவி புலமைப்பரிசில் சித்தி

கொழும்புத்துறை, செப்.23

யாழ்.நகரை அண்டிய பகுதியில் வளப்பற்றாக் குறையுடன் குறைந்தளவான மாணவர்களுடன் இயங்கிவரும் பின்தங்கிய பாடசாலையான அரியாலை ஆனந்தா வித்தியாசாலையில் கல்வி கற்கும் மாணவி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றமை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளதோடு பாராட்டையும் பெற்றுள்ளது.

இங்கு கல்வி கற்று வரும் அரியரத்தினம் தனுஷா என்ற மாணவி 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமை பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் தரம் ஒன்றுமுதல் தரம் 10 வரையான வகுப்புக்களில் மொத்தம் 20 இற்கும் குறைவான மாணவர்களே கற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-135)




மக்கள் வங்கியின் உடுப்பிட்டி சேவை நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கிருஸ்ணானந்தன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம-313)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா இன்று மாலை 6 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளன.

கிராம வீதிகள் வழியாக நடைபெறும் நற்கருணைப் பேரணி 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். அடுத்தமாதம் முதலாம் திகதி மாலை நற்கருணை ஆரா தனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத்திருப்ப லியும் தேர்ப்பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (ம-135)

***

காரைநகர் வலந்தலை ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திரு விழாவை கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெற்று வருகின்றது.

இந்த அலங்காரத் திருவிழாவை சிவஸ்ரீ நா .பாலசுப்ரமணியக் குருக்கள் நடத்தி வருகிறார். (ம-250)

## உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.23

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த நான்கு மாத கால இடைவெளியின் பின்னர் மீண்டும் கூடுகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து மேற்படி இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

### வடமாகாணப் பாடசாலைகளிலுள்ள

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.22

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பிரதான பாடங்களைக் கற்பிப்பதற்கு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இந்த வெற்றிடங்களை நிரப்ப பட்டதாரிகளை நியமிக்கவுள்ளதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் யாழ். பொது நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் அமைச்சர் கலந்துகொண்டு பாடசாலைகளினது தேவைகள் கல்வித்தரம் பற்றிக் கலந்துரையாடியுள்ளார். இந்தக்கலந்துரையாடலில் தேசிய பாடசாலைகள் உட்பட வடமாகாணத்தின் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக பாடசாலை அதிபர்களினால் தெரிவிக்கப்பட்டது.

கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றுக்கு சுமார் 400 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களும், ஆங்கில பாடத்துக்கு சுமார் 600 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெறிடங்களும் நிலவுவதாக கல்வி அதிகாரிகளினால் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்துப் பேசிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்:

பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறிய துறைசார் பட்டதாரிகளை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வெற்றிடங்கள் சம்பந்தமான விவரங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (எ-4)

# ரூ. ஒரு கோடி கேட்டு கடத்திய தம்பதியை விட்டுச் சென்ற கும்பல்

ஒரு கோடி ரூபா கப்பம் கோரி அகலவத்தை, தாபிலிகொட சந்தியில் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட தம்பதியினர் அடுத்த நாள் யட்ட தொல சந்தியில் கைவிட்டுச் செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர் என மத்துகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் தாபிலி கொட சஞ்சீவ வீரசிங்க மற்றும் அவரது மனைவியான விதானகே செளம்யா எனும் இருவரே என பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல்காரர்களுக்கு சிலட்சம் ரூபாவை தருவார்கள் என்று இந்தத் தம்பதியினர் ஒப்புக்கொண்டதையடுத்து இருவரும் யட்டதொல சந்தியில் இறக்கிவிடப்பட்டுள்ளனர் என மத்துகம பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரவு இவர்களது வீட்டில் ஆயுத பாணிகளாகப் புகுந்த ஐவர் இவர்களைச் கடத்திச் சென்றனர்.

இந்தத் தம்பதியினருக்கு புதையல் மூலம் பெரும் தொகைப் பணம் கிடைத்துள்ளதாக தெரிய வந்துள்ளது எனவும் அதில் தங்களுக்கு ஒரு கோடி ரூபாவை கப்பமாக தரவேண்டும் எனவும் இந்தக் கும்பல் அவர்களை நிர்ப்பந்தம் செய்துள்ளது.

கடத்தல்காரர்கள் இவர்களை பேருவளையிலும் களுத்துறை பொலிஸ் பயிற்சி பாடசாலை அயலில் உள்ள இரு வீடுகளிலும் தடுத்து வைத்திருந்தனர்.

இந்தக் கும்பலில் உள்ள ஐவரும் இப்போது இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் களுத்துறை மற்றும் அகலவத்தைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தற்சமயம் அவர்கள் பிரதேசத்தை விட்டு தலை மறைவாகி விட்டனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் என அறிமுகம் செய்துகொண்டே இந்தக் கும்பல் தங்கள் இருவரையும் கடத்தியது என தம்பதியினர் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர்.

களுத்துறைப் பிரதேசத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் பத்திநாம மத்துகம உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கொடித்துவக்கு ஆகியோரின் மேற்பார்வையில் மத்துகம தலைமைப் பொலிஸார் மேல திக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் 10 நாள்களில் புதிய அரசு

நியூயோர்க், செப்.23

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கும் ஐ.நா., பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்று 66 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் லிபியாவின் எதிர்காலம் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமா, லிபிய இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தபா ஜலீல் தலைமையிலான லிபியப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

அதன் போது திரிபோலியில் மீண்டும் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்படும் என அவர் உறுதியளித்தார். லிபியாவின் முன்னேற்றத்துக்கு, ஐ.நா., மற்றும் சர்வதேசசமூகத்துடன் இணைந்து, அமெரிக்காவும் உதவும் எனவும் அவர் கூறினார். அதன்பின் பேசிய லிபிய இடைக்கால அரசின் பிரதமர் முகமது ஜிப்ரீல் திரிபோலி மற்றும் பெங்காசியில் எந்தெந்த அமைச்சகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனினும், இன்னும் 10 நாள்களில் புதிய அரசு அமைக்கப்படும்'' என அறிவித்தார்.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா., தலைமைச் செயலகத்தில் நடந்த லிபியா விகாரம் தொடர்பான கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமா, வெளியுறவு அமைச்சர் ஹிலாரி, பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி ஆகியோர் கலந்து கொண்டனர்

இந்தநிலையில், இதுவரை லிபியாவின் இடைக்காலக் கவுன்சிலை கடுமையாக விமர்சித்து வந்த ஆபிரிக்க யூனியன், அதை ஆதரிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது. அதேபோல, தென் ஆபிரிக்காவும் இடைக்கால கவுன்சிலுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில்,"கடாபி ஆதரவாளர்கள் வசம் இருந்த லிபியாவின் முக்கிய நகரமான சபாவின் பெரும்பகுதி எதிர்ப்பாளர்கள் வசம் வந்துவிட்டது. நகரின் மையப் பகுதியில் எதிர்ப்பாளர்கள் முகாமிட்டுள்ளனர். எனினும் நகரின் ஏனைய மாவட்டங்களில் கடாபி ஆதரவாளர்களின் தாக்குதல் இருந்து வருகிறது. விரைவில் அந்தநகர் எதிர்ப்பாளர்கள் வசம் வந்து விடும்'' என இடைக்காலக் கவுன்சில் அறிவித்தது. எனினும், சிர்ட், பானி வாலித், ஜுப்ரா நகரங்களில் கடாபி ஆதரவாளர்கள் தொடர்ந்து எதிர்த் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

# உலகில் மிகக் குள்ளமான பெண்ணாக அமெரிக்கர்



27 அங்குல உயரமுள்ள அமெரிக்க கல்லூரி மாணவி பிரிட்ஜெட் ஜோர்டன்தான் உலகிலேயே மிகவும் குள்ளமான பெண் என்று கின்னஸ் உலக சாதனைக் குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரிட்ஜெட் ஜோர்டன் (வயது-22). அவரது சகோதரர் பிராட் ஜோர்டன்(20). பிரிட்ஜெட்டின் உயரம் 27 அங்குலம் பிராடின் உயரம் 38 அங்குலம். அவர்கள்தான் உலகிலேயே மிகவும் குள்ளமான உடன் பிறப்புகள் என்றும் கின்னஸ் சாதனைக் குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு 28.5 அங்குல உயரமான துருக்கியைச் சேர்ந்த எலிப் கோகமேன்தான் உலகின் குள்ளமான பெண்மணியாகத் திகழ்ந்தார்.

இதுவரை வாழ்ந்தவர்களிலேயே குள்ளமான பெண் என்றால் நெதர்லாந்தைச் சேர்ந்த பாலின் மஸ்ட்ரஸ்தான். அவரது உயரம் வெறும் 24 அங்குலம். கடந்த 1895ஆம் ஆண்டில் தனது 19 வயதில் நிமோனியாவால் உயிர் அவர் இழந்தார்.

# லஷ்கர் ஜான்வி தலைவர் மாலிக் வீட்டுக் காவலில்

பாகிஸ்தானில், கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியினர் மீது தாக்குதலை நடத்த திட்டமிட்டவர் எனக் கூறப்படும் லஷ்கர் ஈ ஜான்வி அமைப்பின் தலைவர் மாலிக் இஷாக் நேற்று பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

மாலிக் இஷாக்கை பாகிஸ்தான் நீதிமன்றம் அண்மையில் விடுதலை செய்தது.

எனினும் இவர் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவர் எனக் கருதப்படுவதால் இவரை 10 நாள்கள் வீட்டுக் காவலில் வைக்கும்படி பஞ்சாப் மாநில அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட லஷ்கர் ஈ ஜான்வி அமைப்பு பலுசிஸ்தான் மாநிலத்தில் 29 ஷியா சிறுபான்மையினரின் படுகொலைக்குத் தானே பொறுப்பு என அறிவித்ததையடுத்து இவரை காவலில் வைக்கும்படி பஞ்சாப் மாநில அரசு கட்டளை பிறப்பித்தது.

# இந்தோனேஷியாவில் படகு கவிழ்ந்து 11 பேர் சாவு

இந்தோனேஷியாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இந்தோனேஷியாவின் பாலிதீவு பகுதியில் உள்ள நௌசநெம் போகான் பகுதியில் 36 பேருடன் பயணிகள் அருகே உள்ள தீவு ஒன்றை நோக்கிச் சென்று கொண்டி ருந்த போது படகு திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில்அதில் பயணம் செய்த 11 பேர் கடலில் மூழ்கிப் பலியாகினர். 14 பேர் மீட்கப்பட்டனர். இதே பகுதியில் தான் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் படகு கவிழ்ந்து 330 பேர் பலியாகியிருந்தனர்.

# பயணிகள் மீது துப்பாக்கி சூடு பாகிஸ்தானில் 29 பேர் பலி

இஸ்லாமபாத், செப்.23

பாகிஸ்தானில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில், 29 பேர் பலியாகினர்; 6 பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானில் சன்னி முஸ்லிம் மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் முஸ்லிம் மதத்தின் மற்றொரு பிரிவினரான ஷியா பிரிவினருக்குமிடையே மோதல் ஏற்படுவது வழக்கம். கடந்த சில நாள்களுக்கு முன் நடந்த மோதலிலும் 30 பேர் பலியாகினர்.

நேற்று, பாகிஸ்தானின் பாலுசிஸ்தான் மாநிலத்தில் மஸ்டங் மாவட்டத்தில் ஷியா பிரிவினரில் 40 பேர் பயணித்த பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்ஸை கலஸ்கினிகோவஸ் என்ற இடத்தில் வைத்து தடுத்து நிறுத்திய 8 பேர் கொண்ட கும்பல் துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட்டனர். இதில் பஸ்ஸில் இருந்த 40க்கும் மேற்பட்டோர் உயிர் தப்ப, பஸ்ஸை விட்டு இறங்கி ஓடினர்.

அதன் தொடர்ச்சியாக சம்பவம் நடந்த பகுதியில் இருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள குவிட்டா என்ற பகுதியிலும் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த 2 சம்பவங்களில் மொத்தம் 29 பேர் பலியாகினர். 6 பேர் காயமடைந்தனர்.

# ஜப்பானில் புயல் தாக்கி 4 பேர் மரணம்

டோக்கியோ, செப்.23

ஜப்பானின் மத்திய பகுதியில் உள்ள மாநிலங்களை நேற்று புயல் தாக்கியுள்ளது. இதற்கு 'ரோக் புயல்'' என பெயரிடப்பட்டுள்ளது.

புயல் எச்சரிக்கையால் லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பல்வேறு தெருக்கள் மூடப்பட்டன. ரயில் மற்றும் விமானப் போக்குவரத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று 300 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.


பலத்த மழை காரணமாக 12 மாநிலங்கள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகள் சேதமடைந்தன. புயல் மழைக்கு இதுவரை 4 பேர் பலியாகி உள்ளனர். 2 பேரைக் காணவில்லை.

ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் பயங்கர நிலநடுக்கம், சுனாமி காரணமாகப் பேரழிவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

சோதனை மேல் சோதனையாக இப்போது புயல் தாக்குதலிலும் ஜப்பான் சிக்கியுள்ளது.

கடந்த மாதம் தாக்கிய தலஸ் புயல் ... உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செயலிழந்த செயற்கைக்கோள் ஓரிரு நாளில் பூமியைத் தாக்கும்



இருபது ஆண்டுகளுக்கு முன் 'நாசா' அனுப்பிய செயற்கைக் கோள், இன்று அல்லது நாளை பூமியைத் தாக்கலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆராய்ச்சி மையம், 1991ஆம் ஆண்டு உயர் வளி மண்டல ஆராய்ச்சி செயற்கைக் கோளை (யு.ஏ.ஆர்.எஸ்.) ஏவியது. இது பூமியின் வளி மண்டலம் குறித்த தகவல்களைத் திரட்டி அனுப்பிகொண்டிருந்தது.

14 ஆண்டுகள் தகவல்களை அனுப்பிய இந்த யு.ஏ.ஆர்.எஸ்., 2005 ஆம் ஆண்டு செயலிழந்தது. ஒரு பஸ் அளவுள்ள இந்தச் செயற்கைக் கோளின் எடை 5,670 கிலோ. விண்வெளியில் சுற்றி வந்த இந்தச் செயற்கைக் கோள் தற்போது பூமியின் வளி மண்டலத்துக்குள் நுழையவுள்ளது. அப்போது அது 1,006 துண்டுகளாக வெடித்துச் சிதறும். இதில் பெரும்பகுதி வளி மண்டலத்தில் நுழையும் போது எரிந்து சாம்பலாகி விடும். இருப்பினும் 26 துண்டுகள் பூமியைத் தாக்கும் அபாயம் உள்ளது. இது எப்போது விண்வெளியிலிருந்து கிளம்பும் என சரியாக ஆராய்ச்சியாளர்களால் கணிக்க முடியவில்லை. இன்று அல்லது நாளை பூமியில் விழலாம் எனத் தெரிவிக்கின்றனர்.

யு.ஏ.ஆர்.எஸ்., செயற்கைக் கோளில் எரிபொருள் இல்லை. இதனால் இதன் செயற்பாட்டை கட்டுப்படுத்த முடியாது எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த செயற்கைக்கோளின் உடைந்த பாகங்கள் கடலில் விழ வாய்ப்புகள் அதிகம். இல்லையென்றால் வடக்கு கனடாவில் அல்லது தென் அமெரிக்காவின் தென் பகுதியில் விழ வாய்ப்புள்ளது. இது மனிதர்கள் மீது விழும் அபாயமும் இருக்கிறது.

# தீவிரவாத ஆதரவை உடன் கைவிடுங்கள்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்டன், செப்.23

தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்து மறைமுகப் போரில் ஈடுபடுவதை பாகிஸ்தானில் ஐஎஸ்ஐ உளவு நிறுவனம் நிறுத்தவேண்டும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகளின் பயிற்சிக்கு அந்த நாட்டு உளவு அமைப்பான ஐஎஸ்ஐ உதவிவருவதற்கான ஆதாரங்களை அமெரிக்கா திரட்டியுள்ளது.

இதனையடுத்து தீவிரவாதிகள் மீது போர் தொடுப்பதாக வெளியே காட்டிக்கொண்டு மறைமுகமாக உதவுவதை ஐஎஸ்ஐ உடனடியாக நிறுத்த வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இது பற்றி பாகிஸ் தான் அரசுக்கு ஒபாமா அரசு தகவல்களை அனுப்பியுள்ளதாக 'தி வாஷிங்டன் போஸ்ட்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புகளைத் தவறவிட்டது பாடுமீன் புகுந்து விளையாடிய றோயல் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திய 7 பேர் பங்கு பற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறு தியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணியினரை வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கோடு உதைபந்தாட்ட ரசிகர்களின் பெரும் ஆர்வத்தின் மத்தியில் களம் இறங்கினர்.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 10 நிமிடத்தில் குருநகர் பாடும்மீன் அணி வீரன் டிலீப் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டு அணியினரும் கோல்களைப் பெறவேண்டும் என்ற நோக்கோடு ஆட்டத்தை வேகப்படுத்திக் கோல் அடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.



18ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வீரன் சிவநேசன் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார்.

முதலாவது பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்டபோது இரு அணியினரும் 1:1 என்ற கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண்டாம் பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமான போது இரண்டு அணியினரும் மேலும் கோல்கள் பெற வேண்டும் என்ற நோக்கோடு களம் புகுந்தனர். இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய போது குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியினருக்கு அடுத்தடுத்து 3 கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனை அவர்கள் தவறவிட்டனர்.

இதன்போது ஊரெழு றோயல் அணியினர் முன்கள வீரர்கள் எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் கோல்பெறும் நோக்கோடு நுழைந்தனர். அது பாடும் மீன் அணி பின்கள வீரர்களால் தடுக்கப்பட்டது. ஊரெழுறோயல் விளையாட்டுக்கழக அணி வீரன் கபில் 27 நிமிடத்தில் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பிரகாஷ் 37 நிமிடத்தில் மூன்றாவது கோலையும் பெற்றனர். 38 ஆவது நிமிடத்தில் குருநகர் பாடும் மீன் அணி கோலைப் பெற்றது.

ஆட்டமுடிவில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டது. இறுதிப் போட்டியின்போது யாழ். பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா கலந்துகொண்டு வீரர்களைக் கௌரவித்தார். (ம-23)

## உதைபந்தாட்ட சம்மேளன போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து இரு அணிகள்

யாழ்ப்பாணம்,செப்.23

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு III வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து இரு அணிகள் பங்குகொள்ளவுள்ளன.

மேற்படி போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் முதலாம் இடத்தைப்பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும், இரண்டாம் இடத்தைப்பெற்ற குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியும் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

## மன்னாரில் மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப்.23

மன்னார், சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் தர்மிகா மோட்டேர்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் அறு பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை மன்னார் பொது மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படிப் போட்டியில் 40 இற்கும் மேற்பட்ட கழகங்களைச் சேர்ந்த அணிகள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 'ஏ' பிரிவில் 20 அணிகளும் 'பி' பிரிவில் 20 அணிகளும் மோதவுள்ளன.

'ஏ' பிரிவு அணிகளின் ஆட்டம் சனிக்கிழமையும் 'பி' பிரிவு அணிகளின் ஆட்டம் ஞாயிற்றுக்கிழமையும் போட்டியின் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலையும் இடம்பெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

## மன்னார் நானாட்டான் ம.விக்கு கோலூன்றிப் பாய்தல் உபகரணம்

வலி.வடக்கு, செப்.23

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்துக்கு கோலூன்றிப் பாய்தலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக வடமாகாண பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்தெடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கோலூன்றிப் பாய்தலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இந்தப் பாடசாலை தடப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் மாகாணப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றது. தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்துகொண்டுள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இந்த உபகரணங்களை பாடசாலைக்குக் கையளித்துள்ளனர்.

இதன்மூலம் மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கலந்துகொள்வதற்கான வசதிகளைக்கொண்ட பாடசாலையாக இந்தப் பாடசாலை அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## லீக் ஆட்டத்தின் இறுதியாட்டம் ஞாயிறு

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்து பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டத்தின் இறுதி ஆட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவினருக்கு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற தேவரையாளி இந்துக் கல்லூரி அணியின் தலைவரிடம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுரேந்திரன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகிறார்.

## இன்ரலீக் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப்.23

இலங்கை உதைபந்தாட்ட லீக் சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (ம-23)

## உதைபந்தாட்டச் சுற்றில் வென்ற மன்னார் அணி

யாழ்ப்பாணம், செப்.23

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரலீக் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டித் தொடரில் புதன்கிழமை அநுராதபுர மிகிந்தலை பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணி வெற்றிபெற்றது. இதில் அநுராதபுரம் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மன்னார் உதைபந்தாட்டலீக் அணிமோதிக்கொண்டது. இதில் மன்னார் உதைபந் தாட்ட லீக் அணி 4:0 என்ற கோல் கணக்கில் அநுராதபுரம் உதைபந்தாட்டலீக் அணியை வெற்றிகொண்டது. (ம-23)

## கைதடி குமரநகர் வி.க.அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.23

கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் தென்மராட்சி ரீதியாக நடத்திவரும் தாச்சிப் போட்டியில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு அணி வெற்றி பெற்றது.

கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக 'பி' பிரிவு அணி மோதிக்கொண்டது.

இதில் கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு அணி 13.06 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.23

கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக்கழகம் மின் ஒளியில் தென்மராட்சி ரீதியாக நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

*கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகம் 'பி' பிரிவு எதிர் கைதடி உதயசூரியன் விளையாட்டுக்கழகம். (ம-23-288)

## விளையாட்டுத்துறை நிதியம் வடமராட்சியில் அமைப்பு

வடமராட்சி, செப்.23

கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கு உதவும் பொருட்டுப் பிரதேச செயலகத்தால் விளையாட்டுத்துறை நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றபோது பிரதேச செயலகத்தில் 48 விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகள் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செல்வதற்கான பயணச் செலவுகளை இந்த நிதியத் தின் மூலம் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிதியத்தின் தலைவராகப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், உபதலைவராக பி.எம். வேதாபரணம், செயலாளராக ஏ.அநுராஜேந்திரன், உப செயலாளராக த.துரைராஜா, பொருளாளராக கே. சண்முகநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ம-236)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.23

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*பி.ப.3மணி-வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் வரிதி பொம்பஸ் விளையாட்டுக் கழகம்.

*மாலை 4 மணி-வரிதி சிவானந்தா விளையாட்டுக்கழகம் எதிர் கொற்றவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரி - 20' உலகக் கிண்ணம் இலங்கையில்

அடுத்த வருடம் நடைபெறவுள்ளது ஐ.சி.சி 'ரி-20' கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டி 2012 ஆண்டு செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் இலங்கை அணி 'சி' பிரிவில் விளையாட உள்ளதோடு பன்னிரெண்டு அணிகள் இந்த ஆட்டங்களில் பங்கு பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செப்டம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள முதல் ஆட்டம் ஹம்பாந் தோட்டையிலும் ஒக்டோபர் 7 ஆம் திகதி நடைபெறும் இறுதி ஆட்டம் கொழும்பிலும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

## நிராகரிப்பு - ஆட்டத்தில் மாற்றம் தேவையில்லை ஐ.சி.சி.

ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில்ஓர் அணி தொடர்ச்சியாக 50 ஓவர்கள் துடுப்பெடுத்தாடாமல் இரு அணிகளும் தலா 25 ஓவர்கள் இரு தடவைகள் துடுப்பெடுத்தாடும் வகையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் விடுத்த கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) நிராகரித்துள்ளது.

ஆஸ்திரேலிய உள்ளூர் ஆட்டமொன்றில் பரிசீலிக்கப்பட்டதைப் போன்று 25 ஓவர்கள் கொண்ட நான்கு இன்னிங்ஸ்கள் விளையாடப்படும் விதத்தில் விதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் டெண்டுல்கர் கோரினார்.

தற்போது 50 ஓவர்கள் கொண்ட இரு இன்னிங்ஸ்களாக ஒரு நாள் ஆட்டங்கள் நடைபெறுவதால் நாணயச் சுழற்சியில் வெற்றி பெறும் அணி சீரற்ற கால நிலை, மோசமான ஆடுகளங்கள் காரணமாக அதிக அனுகூலங்களைப் பெறும் வாய்ப்பு உள்ளதாக டெண்டுல்கர் தெரிவித்திருந்தார். இதனால் 25 ஓவர்கள் கொண்ட 4 இன்னிங்ஸ்களாக ஆட்டங்கள் நடத்தப்படும் யோசனையை அவர் முன்வைத்திருந்தார்.

எனினும் அவ்வாறான மாற்றதிற்கான அவசியம் இல்லை என்று ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோர்கட் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் தெரிவித்தார். 'உத்தேச திட்டங்கள் குறித்த கடிதமொன்று சச்சினிடமிருந்து எமக்கு கிடைத்தது. ஆனால் அது நீண்டகாலத்திற்கு முன்பாகும். இது குறித்து நானும் பல தடவை அவருடன் பேசியுள்ளேன். இறுதியாக ஏப்ரல் மாதம் உலகக் கிண்ண ஆட்டங்களின் போது கலந்துரையாடினேன்.

50 ஓவர் ஆட்டங்களின் வெற்றியை பார்க்கும்போது அந்த கட்டமைப்பு ஆரோக்கியமாக உள்ளது. அதில் திடீர் மாற்றம் எதுவும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை, என்று ஹாருன் லோர்கட் கூறினார்.

தற்போதைய முறைமையானது சிறப்பாக உள்ளதாக உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் நடைபெற்ற ஐ.சி.சி. நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று அவர் கூறினார். (15)

# தோல்வி நிலையென நினைத்தால்...

சமீபத்தில் முடிந்த இங்கிலாந்து தொடர், இந்திய அணியின் கெட்ட கனவு, என்று தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து சென்ற இந்திய அணி, டெஸ்ட் (0-4), 'ரி-20' (0-1), ஒரு நாள் (0-3) தொடரை மோசமாக இழந்தது. இதன்மூலம் ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை இழந்தது.


இது குறித்து ஸ்ரீகாந்த் கூறியதாவது: பி.சி.சி.ஐக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் சமீபத்திய இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கு பின்னர், எனது தலைமையிலான தேர்வுக்குழு மீது பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புகள் வந்தன. ஆனால் என் மீதும், எங்கள் குழு மீதும் அதிக நம்பிக்கை வைத்த இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ), எனது தலைமையிலான தேர்வுக்குழுவை நீடித்தது. கடந்த காலம் பற்றி கவலைப்படாமல், இனிவரும் நாட்களில் இந்திய அணியின் வளர்ச்சிக்கு முழுவீச்சில் போராடுவோம்.

தற்போது எனது கவனம் முழுவதும், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் மீது உள்ளது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இங்கிலாந்து மண்ணில் கண்ட தோல்விக்கு பரிகாரம் தேடிக் கொள்ள முயற்சிப்போம். இதற்கு நிறைய நாள்கள் இருப்பதால், அதற்குள் சிறந்த அணியை உருவாக்கலாம். இந்தத் தொடருக்கு முன்னர், சொந்த மண்ணில் நடக்கவுள்ள இரண்டு முக்கிய தொடர்களில் இந்திய அணி பங்கேற்க உள்ளது. இந்தத் தொடர்கள், ஆஸ்திரேலிய பயணத்துக்கான சிறந்த பயிற்சியாக அமையும் என்று நம்புகிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில், முதல் முறையாக இந்திய அணி மோசமான தோல்வியை சந்தித்துள்ளது. எந்த ஒரு அணிக்கும் இதுபோன்ற சரிவுகள், சில நேரங்களில் வரத்தான் செய்யும். மோசமான தோல்விகள் குறித்து அதிகம் சிந்திக்காமல், அடுத்து வரும் ஆட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தும் பட்சத்தில், விரைவில் இந்திய அணி எழுச்சி பெற்றுவிடும்.

இங்கிலாந்து பயணத்தை, இந்திய அணியின் கெட்ட கனவாக கருதுகிறேன். ஏனெனில் டெஸ்ட் தொடரில் முன்னணி வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. காயம் என்பது விளையாட்டின் ஒரு பகுதி. இது இயற்கையாக நிகழக்கூடியது. இதனை நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் ஒரு நாள் தொடரில் இளம் வீரர்களின் செயல்பாடு சிறப்பாக இருந்தது. ஆனால் மழை காரணமாக அனைத்து ஆட்டங்களிலும் 'டக்வேர்த்- லூயிஸ்' முறை பயன்படுத்தப்பட்டது. இதனால் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு பறிபோனது. ஒரு நாள் தொடரின் போது ரோகித் சர்மாவுக்கு ஏற்பட்ட காயம் துரதிஷ்டவசமானது.

எந்த ஒரு அணியும், முதலிடத்தை எளிதில் அடைந்துவிடலாம். இதனை தக்க வைத்துக் கொள்வது கடினமான ஒன்று. இங்கிலாந்து அணி, முதலிடத்தை காப்பாற்ற கடினமாக போராட வேண்டும். அடுத்து வரும் தொடர்களில் இந்திய அணி சிறப்பாக செயல்படும் பட்சத்தில், விரைவில் மீண்டும் டெஸ்ட் அரங்கில் முதலிடத்தை அடையலாம் - என்றார். (15)



## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி ஆனந்தன் குற்றம் சாட்டினார்.

நேற்று நாடாளுமன்றில் காணி சம்பந்தமான ஒத்திவைப்புப் பிரேரணையின் போது தனது பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றியபோது சிவசக்தி ஆனந்தன் தெரிவித்ததாவது:

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 80 வீதமான காணிகள் மகாவலி அதிகார சபைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தனிக்கல்லு, இலுப்பைக்குளம், ஒதியமலை ஆகிய மூன்று குளங்களின் கீழ் வரும் 500 ஏக்கர் வயல் காணிகள் இப்போதும் மிதிவெடி அகற்றப்படவில்லை. அத்துடன் வெலிஓயா உதவி அரச அதிபர் என்று சொல்லப்படும் ஒருவரால் மேற்படி காணிகளுக்குச் சொந்தக்காரர்கள் வரவழைக்கப்பட்டு உங்கள் காணிகள் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவுக்குள் உள்ளது என்றும் இங்குதான் நீங்கள் குடியேற வேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தவிர பட்டிக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 250 தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமான 450 ஏக்கர் வயல் காணிகளும் 2010 இல் வெலிஓயாவில் வாழும் சிங்கள மக்களுக்கு விவசாயம் செய்ய வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற சம்பவம் பழைமை வாய்ந்த கிராமமான வெடிவைத்த கல்லு கிராமத்திலும் ஏற்பட்டுள்ளது. நெடுங்கேணியில் தனியாருக்குரியதான அநேக காணிகளை இராணுவமும் பொலிஸும் அபகரித்து வைத்துள்ளன. இதனால் மக்கள் மீளக் குடியேற முடியாதுள்ளனர்.

கனகராயன்குளத்தில் மயானக் காணியில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். இவ்வாறான காணிகள் விரைவில் உரிய மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் வரும் 9 கிராம சேவையாளர் பிரிவுகள், வெலிஓயா அரச அதிபர் பிரிவு என ஒன்றைப் புதிதாக உருவாக்கி அதற்குள் நிர்வகிக்க முல்லைத்தீவு அரச அதிபருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு வன்னியில் பல்வேறு பகுதிகளில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்கின்றன.

இவற்றை வன்னி மக்கள் என்னிடம் தெரிவிக்கின்றனர். இவைதவிர தெரியாத நில ஆக்கிரமிப்புக்கள் பல இருக்கலாம்.

எனவே காணி மற்றும் நீர்ப்பங்கீடு என்பவை அரசியல் தீர்வுடன் தொடர்புபட்டிருப்பதால் தமிழ் மக்களுக்கு நிரந்திரத்தீர்வு எட்டப்படும் வரை காணி சுவீகரிப்பு மற்றும் அதற்கிசைவான புதிய காணிப் பதிவு முறைமைகளை கைவிடவேண்டும். மேற்படி செயற்றிட்டத்தின் மூலம் தமிழ் மக்களது பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்யும் திட்டத்தினை கைவிட்டு தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலையும் சுற்றுநிருபங்களையும் உடன் நீக்க வேண்டும் எனவும் தனது பிரேரணையை முன்வைத்தார் சிவசக்தி ஆனந்தன். (த-10)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்திட இந்தியா மறுத்து விட்டது.இந்தக் கடிதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் எந்தவொரு சபையினதும் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெறாத நிபுணர் குழுவின் அறிக்கையை, குறைந்தபட்சம் ஒரு தகவல் ஆவணமாகக் கூட ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இந்தக் கடித்ததில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் சீனா, ரஸ்யா, பாகிஸ்தான், மலேசியா, பிலிப்பைன்ஸ், அல்ஜீரியா, பங்களாதேஸ், மாலைதீவு, கியூபா ஆகிய ஒன்பது நாடுகள் மட்டுமே ஒப்பமிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எனினும் இந்தியா உள்ளிட்ட முக்கியமான நாடுகளிடம் இருந்து இந்தக் கடிதத்தில் ஒப்பம் பெறுவதற்கு இலங்கை மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக இந்தியா, இந்த விடயத்தில் முன்கூட்டியே எதுவும் செய்ய முடியாது என்றும், அது பற்றிய விவாதம் ஒன்று வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டதாகவும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (த-10)

## இலங்கையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து கடந்த 19ஆம் திகதி தொடக்கம் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வந்தன.இருநாடுகளினது கடற்படைகளையும் சேர்ந்த 16 போர்க்கப்பல்கள் மற்றும் படகுகள் இந்தப் பாரிய போர்ப்பயிற்சி நாளை சனிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

திடீரென நான்காவது நாளுடன் இந்தப் பயிற்சி நிறைவடைவதாக இலங்கை அதிகாரி கூறியுள்ள போதும், அதற்கான க்ாரணம் எதையும் அவர் குறிப்பிடவில்லை.

இலங்கைக் கடற்படையுடன் இணைந்து இந்தியக் கடற்படை போர்ப்பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிராக தமிழ்நாட்டில் உள்ள பாமக உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

அத்துடன் இராமேஸ்வரம் மீனவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடியாகப் போர்ப்பயிற்சியை நிறுத்தக் கோரியும் கடலுக்குச் செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த எதிர்ப்புகள் காரணமாக போர்ப் பயிற்சி இடைநடுவில் கைவிடப்படுகிறதா அல்லது வேறேதும் காரணங்கள் உள்ளதா என்பது பற்றிய விவரங்கள் ஏதும் இன்னமும் தெரியவரவில்லை. (த-10)

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப்பட்டுள்ளனர்.சம்பவம் தொடர்பாக மேலும் கூறப்படுவதாவது:

நேற்று மாலை 6 மணிக்கு தனது சீவல் தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய யேசுராஜா இரவு படுக்கைக்குச் சென்றார். அவரது மனைவி, பிள்ளைகளும் படுத்து உறங்கி விட்டனர். பின்னர் நள்ளிரவில் திடீரென தாயார் அலறும் சத்தம் கேட்டுத் தாங்கள் எழும்பியதாகவும் அப்போது தமது தந்தையார் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டதாகவும் தாயாரும் சகோதரரும் காயங்களுடன் அழுது கொண்டு வீட்டுக்குள் இருந்து வெளியில் வந்ததாகவும் இறந்தவரின் மகளான முகுந்தினி (வயது 13), மகனான சயந்தன் (வயது 11) ஆகியோர் தெரிவித்தனர்.

பின்னர் சத்தங்கேட்டு அயலில் உள்ளவர்கள் வந்ததைத் தொடர்ந்து தாயாரையும் சகோதரரையும் ஓட்டோ ஒன்றில் வேலணை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் கூறினார்.

இறந்த யேசுராஜாவின் முதல் மனைவி பிரான்சிஸ்கா (வயது 56) விசாரணைகளின் போது தமது கணவருடன் தான் மட்டும் கதைப்பதில்லை எனவும், பிள்ளைகள் அடிக்கடி அவரைச் சென்று பார்த்து வருவதாகவும் அவரும் தமது வீட்டுக்கு வந்து பிள்ளைகளைப் பார்த்துச் செல்வதாகவும் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா சம்பவம் நடைபெற்ற இடத்தையும் அயலில் உள்ள வளவில் காணப்பட்ட கள் வைக்கும் பாத்திரம் இருந்த பகுதிகளையும் பார்வையிட்டார்.

சம்பவம் குறித்து விசாரணைகளை செய்த நீதிவான் பிரேதப் பரிசோதனைக்காக இறந்தவரின் உடலையும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறும், பூரண விசாரணைகளை நடத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பாக நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் ஊர்காவற்றுறை பொலிஸ் பரிசோதகர் டீ.த.சில்வா குற்றப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சார்ஜன் வெ.நந்தகுமார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-7)

## தகவல் அறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் இந்தப் பிரேரணையை தனது பிரசார கையேட்டில் முன்வைத்துள்ளார்.

அத்தோடு, நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கு முன்னர் நாம் முன்வைத்தபோது நிராகரித்த அதே பிரேரணையை இந்தச் சபையில் சமர்ப்பிக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அறிகிறோம்.

அப்படியானால், அரசு ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பயப்படுகின்றதா? இதன் உண்மைத்தன்மையை சபையில் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். அப்படி அவசரமாகக் கொண்டுவந்தால் அதற்கு நாங்களும் ஆதரவு தருகின்றோம்.

இரண்டாவதாக நவம்பர் மாதம் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இன்று பெருமளவிலான அமைச்சுகள் இருக்கின்றன. ஒவ்வொரு அமைச்சுகள் தொடர்பாகவும் தனித் தனியாகக் குழு நிலையில் விவாதிக்க கால அவகாசம் போதாது.

எனவே, குறிப்பிட்ட சில அமைச்சுகளைத் தெரிவுசெய்து தனித் தனியாகக் குழு நிலையில் விவாதிக்கவும், ஏனைய அமைச்சுகள் தொடர்பாகப் பொதுவாக விவாதிக்கவும் அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இதனை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சபையின் கவனத்திற்கு முன்வைத்தார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராசையா உதயச்சந்திரன் (செந்தா)



சரசாலை வடக்கைச் சேர்ந்த இராசையா உதயச்சந்திரன் நேற்று (22.09.2011) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விநாயக மூர்த்தி - தவமணிதேவி தம்பதியரின் மருமகனும் புனிதபவானியின் அன்புக்கணவரும் மதீபா(கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி), மதுதரன்(சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொம்பிகுளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை வடக்கு,*
*சரசாலை.*

தகவல்:
குடும்பத்தினர்

## ஐயாத்துரை யோகலிங்கம் (காந்தி)



சாவகச்சேரி, சங்கத்தானை, சாரதா வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பத்திரகாளி கோயிலடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை யோகலிங்கம் (காந்தி) நேற்று (22.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பராசக்தி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் மார்க்கண்டு, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், குமரையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுமித்திரா (பிரான்ஸ்), சுகன்யா, தர்சிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் இலட்சுமன் (பிரான்ஸ்), இளங்கோ (பிரான்ஸ்), மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்விகாவின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் (சாவகச்சேரியில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாரதா வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பகுதித்தலைவர்
வீ.கிருஷ்ணராஜா அவர்களின் அன்புத்தந்தை

**இளையதம்பி வீரவாகு**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராமலிங்கம் கமலாம்பிகை



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் கமலாம்பிகை நேற்று (22.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், பழனி, துரையப்பா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேஸ்வரி, நகுலேஸ்வரி, இராசாத்தி ஆகியோரின் அன்புத் தாயும் மயில்வாகனம், ஜெகநாதன், கணேசரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியும் யேசுசகாயம் - பிரியதர்சினி, சத்தியமூர்த்தி - பத்மதர்சினி, சுதாகரன் - இராஜகௌரி, விதுன்ராஜ், மிதுளா, தீபிகா, நிக்ஷிகா, சதுர்ஜன், ப்ரீத்திகா ஆகியோரின் பேர்த்தியும் சுதனிகா, ஷாம், தேனுஷா, அபிஷனா, றக்ஷனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*862/12, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.*
(8478)

தகவல்:
குடும்பத்தினர்.

# பொலிஸாரும்...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலன்னறுவை உட்பட தேசங்களின் விவசாயக் காணிகள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டினர். இதில் எந்த உண்மையும் இல்லை என்று கூறிய அஸ்வர், கையோடு கொண்டு வந்திருந்த வரைபடத்தை ஆதாரமாகக் காட்டிப் பேசினார்.

அவர் மற்றும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்டினார். அதாவது கொழும்பில் இருந்து ஒரு முஸ்லிமாவது வெளியேற்றப்படமாட்டார்கள் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் எனக் கூறிய அஸ்வர் அதற்கும் ஆதாரமாக ஒரு பத்திரிகையைத் தூக்கிக் காட்டினார். அதோடு நின்று விடாமல் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் காணிகளை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முன்வருவார்களா என்று கேட்டதுயுடன் நாட்டின் ஒரு அங்குலத்தைக் கூட ஜனாதிபதி வெளி நாட்டவர்களுக்கு வழங்கமாட்டார் என்றும் கூறினார் அஸ்வர்.

### அமெரிக்க பிரஜையிடம் கொழும்பை ஒப்படைக்கலாமா?

அஸ்வரின் பேச்சுக்குப் பதிலடி கொடுத்தார் எதிர்க்கட்சி உறுப்பினரான அஜித் பி. பெரேரா. அஸ்வர் எம்.பி. கூறுகிறார் ஜனாதிபதி அவர்கள் நாட்டின் ஒரு அங்குலத்தைக் கூட வெளி நாட்டவர்களுக்கு வழங்கமாட்டார் என்று தம்பட்டம் அடிக்கின்றார். ஆனால் கொழும்பு மாநகரத்தையே அமெரிக்க பிரஜையான மிலிந்த மொரகொடவிடம் அல்லவா ஜனாதிபதி ஒப்படைக்க முயற்சிக்கின்றார். அவரை மேயராக்க அஸ்வர் துடிக்கின்றார் என்று ஒரு போடு போட்டார் அஜித் பெரேரா. இந்த உண்மை இங்குள்ள அமைச்சர்கள் பலருக்கும் தெரியாது. தலைநகர் எல்லைக்குள் 65 ஆயிரம் வீடுகள் உடைக்கப்படவுள்ளன. அந்த வீடுகளில் வசிப்பவர்கள் கொழும்புக்கு வெளியே அனுப்பப்படவுள்ளதும் அஸ்வர் எம்.பி.க்கு தெரியாதா என்றும் அஜித் பெரேரா சீண்டிவிட்டார்.

### ஆளும் கட்சியினரின் ஆவேசம்

அஜித் பெரேராவின் இந்தப் பேச்சு ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு ஆவேசத்தை கிளப்பி விட்டது. கொரடாவான தினேஷ் குணவர்தன உட்பட பிரதி அமைச்சர்களும் பின்வரிசை உறுப்பினர்களும் எழுந்து சத்தமிட ஆரம்பித்தனர். எதிர்க்கட்சி உறுப் பினரை தொடர்ந்து பேசவிட மாட்டோம் என சத்தமிட்டனர்.

அப்போது ஆளும்கட்சிக் கொரடாவான தினேஷ் குணவர்தன ஒரு பூர்வாங்க ஆட் சேபனையைக் கிளப்பினார்.

பிரேரணையை முன் மொழிந்த உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவும், வழி மொழிந்த உறுப்பினரான தயாசிறி ஜயசேகரவும் சபையில் இல்லை. இப்படியான நிலையில் இந்த விவாதத்தை நடத்த முடியாது. அது நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு முரணாக அமையும் என ஆட்சேபித்தார். ✱


## விற்பனைக்கு

45 நாள் பூர்த்தியான ஜேமன் சப்பேட் அல் சேசன் ஆண், பெண் நாய்க்குட்டிகளும், பொமேரியன் அண் பெண் குட்டிகளும், 8 மாத பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும். 1 வயது நிரம்பிய டாசோன் ஆண், பெண் நாயும். 3மாத சினையுடைய யமுனாபாறி ஆடும், வண்டம், சில்கி, வான் கோழி, மணிதாரா விற்பனைக்குண்டு லி.மயூரன். இல 209, பலாலிறோட் ராஜாபிளாசா முன்பாக கோண்டாவில்.

## வீட்டுப் பணிப் பெண் தேவை

படித்த கௌரவமானகுடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கும் வீட்டுப் பணிகளை செய்வதற்கும் பணிப்பெண் தேவை கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0777260974, 0773276502

## ஆடு விற்பனைக்கு

குட்டி ஈனுவதற்கு சில நாள்கள் இருக்கும் ஆடு, ஆடுகள், மணித்தாராக்கள், கோழிகள் விற்பனைக்கு

தொடர்பு: 783 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0750478238

## கணினி விற்பனைக்கு

P(VI)கணினி LCD Monitorமற்றும் அனைத்துப் பொருள்களுடனும் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. Internet, Skype, V/call பாவிக்கலாம்.Free [illegible]

Sky Computer, 0212221417
162, Main Street, Jaffna. 0750698608

## வடமராட்சி மக்களின் நலன்கருதி..

வடமராட்சி மக்களின் நலன் கருதி
**உதயனின் கிளைக் காரியாலயம்**
நெல்லியடி HNB வங்கிக்கு அருகில்
உள்ள மேல்மாடியில் இயங்கி
வருகின்றது என்பதை எமது வாசகர்கள்,
விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.

*காலை 8.30 மணியில் இருந்து*
*மாலை 6 மணிவரை உங்கள் தேவைகளை*
*நிறைவேற்ற நாம் காத்திருக்கின்றோம்.*

பொது முகாமையாளர் :
உதயன்


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தையா தம்பிராசா** (குமுக்காய்)
(முன்னாள் மாவட்ட உதைபந்தாட்ட வீரர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.08.1928 | 24.08.2011 |

உதைபந்தாட்டம் தனில் உத்தமராய்
விளங்கியதோடு
உத்தம புத்திரர் இருவரையும்
உதைபந்தாட்டத்தினால்
ஊர் அறியச் செய்தீரே அன்று!
உன் நினைவால் இங்கு உன் உறவுகளை
இங்கேங்க செய்தீரே இன்று!

குணையாவளவு,
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சந்திரசேகரக்குருக்கள் இராசசேகரசர்மா



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரக்குருக்கள் இராசசேகரசர்மா நேற்றுமுன்தினம் (21.09.2011) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரக்குருக்கள் - ராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சிவராசா - விவேகராணி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவரஞ்சினியின் அன்புக் கணவரும் சிவானந்தசர்மா, நகுலேஸ்வரசர்மா, பரமேஸ்வரசர்மா, சிவகௌரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், சுவேந்தினி, சிவகுமார், சிவரூபன், ரேவதி, வினோதா, றிசாந்தா ஆகியோரின் மைத்துனரும் ரூபினா, தர்சினி, உசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊருணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. தகவல்: குடும்பத்தினர்.

## சண். கந்தையா



தொல்புரம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடை, மூளாய்க் கிராமங்களை வதிவிடமாகக் கொண்டவரும், யாழ். மாநகரசபை பொது நூலகத்தின் ஓய்வுபெற்ற உதவி நூலகரும், சிதம்பர அம்பலவாணேஸ்வர சுவாமிகள் மானாமுதலி மட தர்மகர்த்தா சபை பொதுச் செயலாளரும், கந்தரோடை குலகுணேஸ்வரியின் அன்புக் கணவரும் குமுதினி, ஜபாலினி, துவாரகன், மைதினி, மாதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விசுவநாதன், பிரணவன் ஆகியோரின் அருமை மாமனுமாகிய சண்.கந்தையா நேற்று (22.09.2011) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஆனந்தகம்",*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

தகவல்:
அ.தற்பரானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 + தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் கடும் போக்கு அமைச்சர்கள் ஆட்சேபித்து வருகின்றனர். குறிப்பிட்ட சில அமைச்சர்கள் இவ்வாறான ஆட்சேபனைகளைத் தெரிவித்து வருவது குறித்தான தமது அதிருப்தியை தமிழ் அரசியல்வாதிகள் பலர் மூத்த அமைச்சர்களிடம் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. அமைச்சரவைக்குள்ளேயே இவ்வாறான எதிர்ப்பு வருமாயின் அரசியல் தீர்வு குறித்தான பேச்சுகளை எப்படி நம்பிக்கையுடன் முன்னெடுக்கமுடியும் என்று மேற்படி தமிழ் அரசியல்வாதிகள் எடுத்துக்கூறியிருக்கின்றனர்.தமிழ் அரசியல் பிரமுகர்களின் இந்தக் கவலையை நன்கு செவிமடுத்த மூத்த அமைச்சர்கள் சிலர் மேற்படி கடும் போக்கு அமைச்சருடன் இதுபற்றிப் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்குத் தம்மால் முடியுமென உறுதியளித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதன்படி கடும்போக்கு அமைச்சர்களாகக் கருதப்படும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ ஆகியோருடன் பேசுவதென்றும், 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவது தொடர்பாக அவர்களின் சிபார்சுகளை உள்ளடக்குவது பற்றி ஆராய்வதென்றும் இந்த மூத்த அமைச்சர்கள் தீர்மானித்துள்ளரெனத் தெரிகிறது. (த-சி)

## கண்டி இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு விடுதலைப் புலிகளுக்கு தகவல் வழங்கி வந்தார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனடிப்படையில் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் இவர் கைது செய்யப்பட்டார்.

கண்டி நீதிவான் நீதிமன்றில் 2008 ஆம் ஆண்டு ஆஜர் செய்யப்பட்ட இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 2009 ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றத்துக்கு இவர் சம்பந்தமான வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

நிலுவையில் இருந்து வந்த இந்த வழக்கு அவரது குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டதனால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் சட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து பிரஸ்தாப நபர் விடுதலை செய்யப்பட்டார்.

(த-4)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நாட்டில் செயற்படுகிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று கூறினார்.

அரச காணிகளும் தேசிய சொத்துக்களும் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றமை தொடர்பில் ஜே.வி.பியின் எம்.பி அநுர குமார திஸாநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

முதலாவது தாய்நாடு இரண்டாவதும் தாய்நாடு மூன்றாவதும் தாய்நாடு என்று கூறிய அரசு இன்று முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதும் நாட்டை விற்பனை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. யுத்தத்தின் பின்னர் இந்த சுமுகமான நிலையில் நாட்டை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். நாமும் அவற்றையே எதிர்பார்த்தோம்.

அன்று பொது ஆட்சிக்காலத்தில் காணிகளை குத்தகைக்கு வழங்கினோம். ஆனால் ஐக்கிய தேசிய கட்சி காலிகோட்டை சிகிரியா ஆகியவற்றை விற்பனை செய்கிறது என்று அரசு வதந்தி கிளப்பியது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த காலத்தில் வெள்ளையர்களை முறைத்துக் கொண்டிருந்தது. ஆனால் இன்று வெள்ளையர்களுடனையே வாழ்கின்றது. அவர்களுடனே கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்கிறது.

அது தமது தேவைகளுக்காக அரசு சொத்துக்களை விற்பதை ஒரு கொள்ளையாகக் கொண்டுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தையும் ஜனாதிபதி மாளிகையையும் வெளிநாடுகளுக்கு அரசு விற்பனை செய்யும் சூழ் நிலையும் உருவாகிவிடும்.

கற்பிட்டியில் காணிகள் கொள்ளையிடப் படுகின்றன. ஆலங்குடா கடற்கரைப் பிரதேசத்தில் பெறுமதிமிக்க 160 ஏக்கர் காணி வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதன்படி கற்பிட்டியிலுள்ள 81 தீவுகளும் விற்பனை செய்ய முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மஹிந்த சிந்தனை பிளஸ் பசில் ராஜபக்ஷ சிந்தனையே செயற்படுகிறது. இதனுடன் எதிர்காலத்தில் மிலிந்த சிந்தனையும் இணையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட காணிகளை அரசு துண்டாடி 20 மில்லியன் ரூபாப் படி விற்பனை செய்யப்படுகிறது. தமிழ் மக்களின் காணிகளே இப்படி விற்கப்படுகின்றன.

குச்ச வெளியில் 550 ஏக்கர் கிளிநொச்சியில், கற்பிட்டியில் காணிகளை வெளிநாடுகளுக்கு அரசு தாரைவார்த்துக் கொடுக்கிறது. இந்த அரசின் தேசப்பற்று இன்று காற்றில் பறக்கிறது- என்றார். (த-சி)

## முன்னாள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சியைப் பூர்த்தி செய்யாதவர்கள் ஆகிய தரப்பினர் மேற்குறிப்பிட்ட தொகையில் அடங்கும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். புனர்வாழ்வுப்பயிற்சியை மேற்கொண்டவரும் அனைவரும் இந்த ஆண்டு முடிவுக்குள் சமூகத்தில் இணைந்து கொள்ளப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கி வரும் 7 புனர்வாழ்வுமையங்களில் புனர்வாழ்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதுடன் இந்த மையங்கள் விரைவில் ஐந்தாகக் குறைக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

வன்னி இறுதிப் போரின் போது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த 11,664 விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் இதுவரை புனர்வாழ்வுஅளிக்கப்பட்ட 8500 பேர் சமூகத்துடன் மீண்டும் இணைக்கப் பட்டுள்ளனர். (த)

## மனித உரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் செயலாளர் பான் கீ-மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டும் கண்காணிப்பகம், நிபுணர் குழு சுட்டிக்காட்டிய குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குப் பதிலாக இலங்கை அரசு வெறுமனே குற்றச்சாட்டுக்களை நிராகரித்ததாகவும் சாடி உள்ளது.

''அத்தகைய அறிக்கையைப் பெறுவதற்காக நிபுணர் குழு ஒன்றை நியமிக்கும் அதிகாரம் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு இல்லை என்று இலங்கை அரசு தவறாகக் கூறிவருகிறது. நிபுணர் குழுவில் அடங்கியிருந்தவர்களின் பக்கச்சார்பின்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அறிக்கையின் பரிந்துரைகளின்படி நடவடிக்கை எதனையும் எடுக்க வேண்டாம் என்று மனித உரிமைகள் சபை உள்ளிட்ட ஐ.நாவுக்கு இராஜதந்திர அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது'' என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகின்றது.

2009ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையையின் மீது மீண்டும் கவனம் செலுத்துமாறு நிபுணர்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்தபோதும் மனித உரிமைகள் சபை கடந்த ஜூன் மாதம் வரை அதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என்றும் கண்காணிப்பகம் சாடுகிறது.

எனவே, ''இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை மீளாய்வு செய்யவேண்டும். மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச சமூகத்துக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசு கடைப்பிடிக்காமை குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். நிபுணர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி பான் கீ-மூனுக்கு மனித உரிமைகள் சபை அழுத்தங்களைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும். குறிப்பாக போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பரிந்துரையை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். அத்துடன் சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளித்துச் செயற்பட வேண்டும் என்று இலங்கை அரசுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்'' என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது பரிந்துரையில் வலியுறுத்தி உள்ளது. (உ)


## மரண அறிவித்தல்



### அருட்தந்தை பிரான்சிஸ் குலாஸ்

அமல மரித்தியாகிகள் துறவறசபையைச் சேர்ந்த அருட்தந்தை பிரான்சிஸ் குலாஸ் நேற்று (22.09.2011) வியாழக்கிழமை கொழும்புத்துறை அமல உற்பவ இல்லத்தில் இறைபதமடைந்தார். அன்னாரின் உடலம் அமல உற்பவ சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அருட்தந்தையின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் நாளை சனிக்கிழமை அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், அருட் சகோதரர்கள், இறைமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

657/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: யாழ். மாகாண முதல்வர்
அமல மரித் தியாகிகள் தொடர்பகம்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### இலங்கை
### 27 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்
### 2011 ஒக்ரோபர் 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ் குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும், பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினையும் காண்பித்து, புகைப்படத்துக்குக்காக ரூபா 50 இனையும் செலுத்தி கல்விக் கிளையில் பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2011.09.30 | மு.ப. 9-12 | M.A.(Reg. Planning), M.A. (Saiva Siddhanta) M.A. (Pop. Dev. Studies), B.A. (Special) |
| | பி.ப. 2 - 4 | M.A.(Cultural Studies). M.A. (Tamil) B.Sc., B.Sc.(Agriculture), B.S.M.S |
| 2011.10.01 | மு.ப. 9 - 12 | M.Phil, M.A. (Pub. Admin), M.A. (Dev. Studies), B.F.A. |
| | பி.ப. 2 -4 | B.A. (General), M.B.B.S.,B.Sc. (M.L.S) B.Pharm., B.Sc. (Nursing) |
| 2011.10.02 | மு.ப. 9 -12 | P.G.D.E. (Jaffna), BBA, B.Com. |

குறிப்பு:
வவுனியா வளாக மாணவர்கள் தங்களுக்குரிய பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

PERSONAL CLASS
364, Stanly Rd.,
(Near DMI)
G.A.Q., B.A. - I,
B.A. final
தமிழ் - K. தர்மராஜா
Polisci - புவனதாஸ்
Philosophy - சிவா
Drama - சிவன்சுயன்
Eco.- தயாபரன்
BA -Part I ENGLISH
Revision & Paper
8 - 9/ 11 -12
ஆரம்ப நாளை 8 மணி

டல்மேசன் நாய் விற்பனைக்கு
5 மாதம் நிரம்பிய பெண் நாய் விற்பனைக்குண்டு
தொடர்பு:0774219767

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை



பழவத்தை, வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை நேற்று(22.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சத்தியேஸ்வரி, சற்குணராசா, செல்வநாயகி, செல்வகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.09.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழவத்தை ,
வியாபாரிமூலை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அந்தோனிப்பிள்ளை றோசமுத்து



குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை றோசமுத்து கடந்த (21.09.2011) புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியான்-ஞானப்பு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து-சவராசி தம்பதியரின் அன்பு மருமகளும், அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அருளானந்தம், காலஞ்சென்றவர்களான மரிய மோட்சமுத்து, ஜோசப் ஆகியோரின் சகோதரியும், விஜயகுமார், ஜெயக்குமார், உதயகுமார் (மீள் எழுச்சித்திட்ட உத்தியோகத்தர்), கொலின் சாள்ஸ் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயவதனி, ஜோய்சி, ஜெனா ஆகியோரின் அன்பு மாமியும், கனிஸ், கோன்சிகா, கரோலினிக்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அமெரிக்க தமிழர்களின் பொங்கு தமிழ் எழுச்சி இன்று

நியூயோர்க், செப்.23

ஜெனீவா நகரில் ஐ.நா மனித உரிமை மையத்துக்கு முன்னால் ஐரோப்பிய தமிழ் உறவுகள் அணிதிரண்டது போல் அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்துக்கு முன்னால் பொங்குதமிழ் நிகழ்வை எழுச்சியுடன் வட அமெரிக்க தமிழர்கள் இன்று முன்னெடுக்கின்றனர்.

நியூயோர்க் ஐ.நா தலைமையகத்துக்கு முன்னால் பொங்குதமிழ் பெருநிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஐ.நா சபையின் வருடாந்தக் கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 'தமிழினப் படுகொலை முகத்தை' உலகுக்கு அம்பலப்படுத்தும் நோக்கில் பொங்குதமிழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எழுச்சியின் குறியீடாக அமைகின்ற பொங்குதமிழை, ஜனநாயக போராட்டத்தின் குறியீடாக விளங்குகின்ற தமிழீழத் தேசிய அரசான நாடு கடந்த தமிழீழ அரசு முன்னெடுக்கின்றது.

கனடாவில் உள்ள தமிழர் இணையம், கனேடிய தமிழ் கொங்கிரஸ், நாம் தமிழர், கனேடிய தமிழர் தொழிலாளர் சங்கம், இளையோர் அமைப்பு, மக்களவை உட்பட பல தமிழர் அமைப்புக்கள், தமிழீழ தேசிய அரசாங்கத்துக்கு உறுதுணையாக நின்று பொங்கு தமிழ் ஏற்பாடுகளை செய்துள்ளன. (த-10)

மாருதி செரமிக்
New Maruthi Ceremic
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரை மாபிள்கள், சுவர் மாபிள்கள், குளியலறைச் சாதனங்கள், பெயின்ற் எண்ட் எலக்ரிக்கல்ஸ் மற்றும் pvc பைப் வகைகள் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.
மாருதி செரமிக்
இல. 37 கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P.: 025 3208350, 0775702253

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், மற்றும் இம்முறை பல்கலைக்கழக நுழைவு மாணவர்களுக்கான இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 24.09.2011--12.30-2 மற்றும் 25.09.2011--12.30-2
பிரிவு 2 : 28.09.2011 காலை 11-1 மற்றும் 29.09.2011 காலை 11-1
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

கூலர் வான் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0779238564

LOGIC :என். பிரதீபன்

| A/L.2012 | A/L.2013 |
| --- | --- |
| தருக்கப்படலை சனி ஞாயிறு 9.00 புள்ளி விபரவியல் திங்,புதன்,வெள்ளி. 4.00 | குறியீட்டு அளவையியல் ஆரம்பம் சனி,ஞாயிறு 8.00 |

ACADEMY OF LOGIC பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி

COLLEGE OF CHEMISTRY
பழம் றோட் கந்தர்மடம்
PHYSICS
A/L 2011 DAY CLASS
ஆரம்பம் :- 24.09.2011
சனி, ஞாயிறு } 11.30 - 1.00
திங், வியா } 4.30 - 6.00
N.KAPILAN B.Sc

Take Away
HP i5 Laptop

Intel Core i5 (2.40 GHz)
2 GB DDR3 RAM
500 GB HDD
14.2 Display
DVD RW
W LAN & BT
WebCam
Just Pay
14,999/=
0% Interest Free
International Warranty
Life Time Service Free
Limited Stock
Conditions Apply
Laptop Zone
Authorized HP Dealer
No 75, K. K.S. Road
Jaffna
T.P:-021 492 3105

ESOFT
உடனடி வேலைவாய்ப்பு
1.விரிவுரையாளர்கள் (Lecturers)
2.போதனாசிரியர்கள் (Instructors)
3.அலுவலக உதவியாளர்கள் (Office Peon)
வெற்றிடங்களுக்கான கிளைகள்
1.கிளிநொச்சி 3.கொடிகாமம்
2.காரைநகர் 4.வவுனியா
உங்கள் சுயவிபரக் கோவையை 27-09-2011 இற்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Human Resources Manager.
Esoft Computer Studies (Pvt) Ltd.
Regional Head Office- North
No.166/3, Navalar Road
Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலேஸ்வரி சிவமணி



காரைநகர் மத்தியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஓட்டுமடம், 315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி சிவமணி நேற்றுமுன்தினம் (20.09.2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் நவாலி தெற்கு, சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காரைநகர் மத்தி கிருட்டினர் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் மற்றும் கிருட்டினர் சிவமணியின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் திருமதி ரஞ்சன் சிவதலா (பின்லாந்து), ஜெயக்குமார் (ரகு மாஸ்டர் - மெடிக்குவிக், கொழும்பு), விஜயகுமார் (ராகவன் - CSM (PVT) LTD, கொழும்பு), திருமதி சசிகலா கேதீஸ்வரன் (ஆசிரியை, சென். யேம்ஸ் மகளிர் கல்லூரி), திருமதி சித்திரா விஜிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் கனகசபை ரஞ்சன் (பின்லாந்து), இராசரத்தினம் கேதீஸ்வரன் (யாழ். மாநகர சபை), கந்தசாமி விஜிகாந்தன் (யாழ்ப்பாணம் றோக்கியோ சிமெந்து பிரதேச முகாமையாளர்), திருமதி தர்மினி விஜயகுமார் (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியும் சின்னத்துரை கமலேஸ்வரன் (கனடா), திருமதி வின்சன் சுகன்னியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி நகுலேஸ்வரி (கங்கா), கமலேஸ்வரன் (கனடா), யேம்சன் வின்சன் (நவாலி தெற்கு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சஜீவன், சஞ்சிவன் (பின்லாந்து), அபிமாதவன், டிறேக்ஷா, தக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வின்சன் ஜெரூனாஷன் (ஜெனோ), வின்சன் கிருஷாளன் (கிற்றோ) ஆகியோரின் பெரியதாயும் திருமதி ருஷாளினி (ரூபா), விக்ரர், ரிஷிகேசன் (ரிஷி), தர்சன், சுபாங்கன் ஆகியோரின் மாமியும் விக்ரர் தக்ஷயனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2011 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி,*
*ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### பதவி வெற்றிடங்கள்.

கீழ் குறிப்பிடும் பதவி வெற்றிடங்களுக்கு ஆண் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் நேரிலோ தபால் மூலமோ சங்கப் பணிமனையில் விண்ணப்பங்களைப் பெற்று 08.10.2011 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன் பொது முகாமையாளர், கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.

**01. பதவி:-** காசாளர் வெற்றிடம் 01
சம்பளக் குறியீட்டு இலக்கம் 306/ 13
சம்பள அளவுத் திட்டம் 9950, 85 X 10, 90 X 10 - 11700.00
வயதெல்லை :- 18-45

**தகைமைகள்**

அ] கூட்டுறவுப் பணிப்பாளர் 14 ஆவது சம்பளத் திட்ட பதவி ஒன்றில் இரண்டு [02] வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 வது சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் நான்கு [04] வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ] கூட்டுறவுப் பணியாளர் [சாதாரணதரம்] சான்றிதழ் அல்லது க.பொ.த [சாதாரணம்] கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும், கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கை பற்றி இரண்டு [02] வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. பதவி:-** சாரதி வெற்றிடம் 01
சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 312/ 15
சம்பள அளவுத் திட்டம் :- 9450, 75 X 10, 80 X 10- 11000.00
வயது எல்லை :- 18-45

**தகைமைகள்:-**

எட்டாம் [08] வகுப்பு கல்விச் சான்றிதழும், உழவியந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஒரு [01] வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அ. கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பங்களை பணிபுரியும் சங்கங்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆ.] சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இ.] தெரிவு செய்யப்படுபவர் சங்கத்தால் விதிக்கப்படும் பிணைப் பணத்தை உடன் செலுத்துதல் வேண்டும்.

ஈ.] பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*நெல்லியடி, கரவெட்டி.*
*23.09.2011*

பொது முகாமையாளர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவஞானம்



(லங்கா சிமென்ற் லிமிட்டெட் முன்னாள் ஊழியர்)

சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தையா சிவஞானம் நேற்று (22.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் குமுதமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், சுசிலாதேவியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகநாதி - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், ஹரிகரன் (பங்கு பரிவர்த்தனை நிலையம் - கொழும்பு), கஜந்தினி (பிரதேச செயலகம் வேலணை), கஜேந்திரன் (உதவி விரிவுரையாளர், வவுனியா வளாகம்), கஜனி (ஆரம்ப நீதிமன்றம் மல்லாகம்), கெங்காதரன் (A/L 2010 யூனியன் கல்லூரி தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்திகாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86, ஐயனார் வீதி,
(ஐயனார் கோயில் அருகாமை)
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### கதிர்காமர் சிதம்பரநாதர்



வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வரணி கரம்பைக்குறிச்சியை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமர் சிதம்பரநாதர் நேற்று (22.09.2011) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, பொன்னையா, உமையாத்தைப் பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருச்சிற்றம்பலம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கமநல அபிவிருத்தித்திணைக்களம்) தேவகுமாரி, திருநந்தகுமார், திருக்குமார் (எழுதுவினைஞர், நீதிவான் நீதிமன்றம் சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராணி, ஸ்ரீதரன் (தொழில்நுட்ப உதவியாளர், புகையிரத திணைக்களம், வவுனியா) மனோபவானி (ஆசிரியை, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்) ஜெயவதனா (காணிப்பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன் (பல.நோ.கூ.சங்கம், கொடிகாமம்), சிவதர்சினி (ஆசிரியை, மத்திய கல்லூரி பளை) ஜெயந்தன் (பொறியியலாளர் கொழும்பு), கஜீபா (சம்[illegible] வங்கி, சாவகச்சேரி), கேசவன் (பொலிஸ் உத்தியோகத்தர், மல்லாவி) யசோதா (கலைப்பீட முதலாம்வருட மாணவி, யாழ் பல்கலைக்கழகம்) யசீதா ( மாணவி - A/L), கிரிதரன் (மாணவன்), சுகிதரன், அக்ஷரா ஆகியோரின் பாசமிகுப் பேரனும், கிஷ்ணவியின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வரணி கொடிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பைக் குறிச்சி கிழக்கு,*
*வரணி.*

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org